# முன்னணி

இதழ் - 04 (கார்த்திகை - தை 2012)



## ஜே.வி.பி.க்கு விடுக்கும் பகிரங்க வேண்டுகோள்!!

இலங்கையில் வர்க்கக் கட்சியாக மாற்றி அமைக்கும் போராட்டத்தை நடத்துமாறு ஜே.வி.பி.யின் உறுப்பினர்களுக்கு பகிரங்கமாக அறை கூவுகின்றோம். இனவாத அரசியலைக் களைந்து, தேர்தல் அரசியலைக் கைவிட்டு, தன்னை ஒரு வர்க்கத்தின் கட்சியாக வெளிப்படுத்துமாறு அறைகூவுகின்றோம். கடந்தகால தனிநபர் பயங்கரவாத அரசியலை சுயவிமர்சனம் செய்து கொண்டு, வெகுஜன அரசியலை முன்னெடுக்குமாறும் கோருகிறோம்.

ஜே.வி.பி.யின் உள்முரண்பாடுகள் பிளவாகவும், மறுதளத்தில் தலைமையைக் கைப்பற்றும் போராட்டமாகவும் நடப்பதாக செய்திகள் வெளிவருகின்றன. மறுதளத்தில் மகிந்தாவுக்கு ஆதரவு அளித்தது முதல் சரத்பொன்சேகரவை ஆதரித்தது வரை சர்ச்சைக்குள்ளாகியுள்ளது. இந்தப் பின்னணியில் ஜே.வி.பி.யின் இனப்பிரச்சனை தொடர்பான பார்வையும், தேர்தல் அரசியலும் கேள்விக்குள்ளாகியிருக்கின்றது. இது சாராம்சத்தில் வர்க்க அரசியலை முன்னிலைப்படுத்தி இருக்கின்றது. இதன் பின்னணியில் நடந்த துல்லியமான விவாதங்கள் பற்றி இதுவரை தெரிந்து கொள்ள முடியவில்லை, ஆனால் பொதுவான அரசியல் சாரம் இதுதான்.

ஆக இந்த முரண்பாடு அவசியமானது, அடிப்படையானது. இது புரட்சிகரமான சூழலுக்கு சாதகமானது. இது எப்படி வெளிப்பட்டாலும், இது இலங்கையின் அரசியல் போக்கில் ஒரு அரசியல் மாற்றத்தைக் கொண்டுவரும். சிங்கள மக்கள் மத்தியில் மார்க்சியம் என்பதை ஜே.வி.பி.யின் இனவாதம் ஊடாகவும், தேர்தல் அரசியல் ஊடாகவும் அடையாளம் கண்டு வந்த போக்கு, முதன் முதலாக இன்று கேள்விக்குள்ளாகியுள்ளது.

ஜே.வி.பி.யின் தலைமையுடன் முரண்பட்ட பிரிவு தாங்கள் பிரிவினைவாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்ற அறிவிப்பு, அங்கு பிரிவினை வாதத்தை ஆதரிப்பதாக இவர்கள் மேல் எதிர்த்தரப்பு குற்றஞ்சாட்டுகின்றது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. அதேநேரம் முரண்படும் பிரிவினர் றோகண விஜேவீரவின் இனக் கொள்கைக்கு மாறாக செயல்படுவதாக ஜே.வி.பி.யின் தலைமை குற்றம் சாட்டுகின்றது. ஆக இந்த விவாதம் இலங்கையின் பிரதான முரண்பாடான இனப்பிரச்சனையின் பின்னணியில் நடக்கின்றது. இங்கு பிரிவினை வாதத்துக்கு எதிராக பிரிந்து செல்லும் உரிமையை முன்வைத்து ஒரு மாற்றம் நிகழுமானால், இலங்கை இடதுசாரிய வரலாற்றில் புதிய அத்தியாயத்தை இது தொடக்கி வைக்கும். இந்த அரசியல் கண்ணோட்டத்தை இதுவரை எந்தக் கட்சியும் கொண்டிருக்கவில்லை. ஜே.வி.பி. அதைத்தான் வெளிப்படுத்துகின்றதா என்பது துல்லியமாகத் தெரியவில்லை.

இந்த முரண்பாட்டில் ”தமிழன் தலைமையில் பிரிவு” என்ற இலங்கை அரசினதும் மற்றவர்களினதும் இனவாத பிரச்சாரத்தைக் கடந்து, சிங்கள இளைஞர்கள் இதை அரசியல் ரீதியாக அணுகுவார்களேயானால் அதுவும் ஒரு அரசியல்ரீதியான மாற்றம் தான். இன்று இலங்கையில் ஒரு புரட்சிகர சூழலுக்குரிய மாற்றங்களுக்கு அவசியமானதாக, ஜே.வி.பி.க்குள் முன்னெடுக்க வேண்டியவை:

1. பிரிவினைவாதத்துக்கு மாறாக பிரிந்து செல்லும் சுயநிர்ணய உரிமையை முன்வைத்து போராடுதல்.
2. கடந்தகால தனிநபர் பயங்கரவாதம் முதல் வர்க்க அரசியல் அல்லாத அரசியல் வழிமுறையை நிராகரித்து, வெகுஜன வர்க்க அரசியலை முன்னெடுத்தல்
3. வர்க்கப் போராட்டத்தை அரசியலாக ஆணையில் வைத்தல்
4. தேர்தல் பாதையை நிராகரித்தலும், கடந்தகால தேர்தல் வழியை சுயவிமர்சனம் செய்தல்.
5. கடந்தகால இனவாதத்தை கேள்விக்குள்ளாக்குவதும், சுயவிமர்சனம் செய்வதும் அவசியமாகும்

புதிய ஜனநாயக மக்கள் முன்னணி 8.09.2011

**MUNNANI / முன்னணி (இரு மாத இதழ்)**

**இதழ் - 04 (கார்த்திகை - தை 2012)**

Publishers NDPF Org N° / புதிய ஜனநாயக மக்கள் முன்னணி இல. : 996 514 749
Intrenational standard Serial N° / உலக பதிவு இல. : (ISSN) 1892 - 6347
Printers e-mail / அச்சக ஈமெயில் : info@setlinedata.com

**முன்னணி இணையங்கள்**
www.ndpfront.com
www.tamilarangam.net
www.ndpfront.net
www.tamilcircle.net
http:kalaiy.blogspot.com

**முகவரி**
MUNNANI
ESC 3 : APP 131
5 Rue Robert Lavergne
92600 Asnières Sur Seine
France

**முன்னணி ஈமெயில்**
munnanee@gmail.com

**சந்தா 6 இதழ்**
12 ஈரோ - 12 டொலர் - 12 பவுண் 120 குரோன்
அன்பளிப்பு
1 ஈரோ - 1 டொலர் - 10 குரோன் - 12 பவுண்

International Bank Account Number
சர்வதேச வங்கி கணக்கு இல.
IBAN NO4965660545608



# அரசியல் அனாதையான கூட்டமைப்பின் வெற்றுவேட்டு அரசியல் மேற்கை விடிவெள்ளியாக காட்டுகின்றது

பேரினவாதிகளும் கூட்டணியும் தமக்குள் கூடிக் கூத்தாடும் அரசியல் பித்தலாட்டம் அனைத்தும், போலியானவை, புரட்டுத்தனமானவை. இவை அனைத்தும் அடிக்கடி பிசுபிசுத்தபடி அம்பலமாகின்றது. மக்களை அணிதிரட்டாத, தங்கள் நியாயமான கோரிக்கைகளை சிங்கள மக்களிடம் எடுத்துச்செல்லாத எந்தப் போராட்டமும், பேச்சுவார்த்தையும் தொடர்ந்து தோல்வி பெறும். இதுதான் எம் சொந்த வரலாறு. வாக்குக்கட்சிகளின் சேடமிழுக்கும் அரசியல், தன் மரணத்தின் விளிம்பில் தத்தளிக்கின்றது. இந்த வகையில் வக்கற்றுப்போன கூட்டணியிடம், மாற்றான எந்த மாற்று அரசியல் வழியும் கிடையாது. அன்னிய சக்திகளின் நிழலில் குளிர்காய்கின்ற, அடகு வைக்கின்ற மோசடி அரசியலைத்தான், இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சனைக்கான தீர்வாக இன்று முன்தள்ளுகின்றனர். பொது அரசியல் அரங்கில் சோகத்துடன் கூடிய அறிக்கைகளை விடுவதைத் தவிர, மேற்கிடம் முறையிடுவதைத் தவிர, மாற்றாக எதையும் முன்மொழிய முடியாத நிலையில் அரசியல் அனாதைகள் தான் கூட்டணியும். புலியைப்போல் பேச்சுவார்த்தை நடத்த வக்கற்ற அரசியல் அனாதைகள்.

1980 களில் கூட்டமைப்பின் இதேயொத்த அரசியல் கூத்து முட்டுச்சந்திக்கு வந்தபோது, மாற்றாக ஆயுதப் போராட்டம் என்று மற்றொரு வேசத்தை இந்த அரசியல் தனக்குத்தானே அணிந்துகொண்டது. அது மக்கள் மாற்று போராட்ட வழியில் அணிதிரள்வதை, வேட்டையாடி அழித்தது. இறுதியில் அதுவும் முட்டிமோதி, அரசியல் அனாதையாகியதால் தோற்றுப்போனது. இவர்கள் அனைவரும் மக்களை அணிதிரட்டுவதை மறுப்பதில் இருந்துதான் அரசியல் அனாதையானார்கள். பேரினவாத அரசுடன் கூடிக் குலாவிப் பேசியவர்கள், சிங்கள மக்களிடம் தங்கள் நியாயத்தை எடுத்துச் சொன்னது கிடையாது. மக்கள் தமக்காக தாம் போராடும் வண்ணம் அவர்களை அணிதிரட்ட மறுத்தவர்கள், தங்கள் போராட்டத்தின் நியாயத்தை சிங்கள மக்களிடம் எடுத்துச் செல்லவும் தவறியவர்கள் தொடர்ந்து தோற்றுப் போகின்றனர். கூட்டணி.., புலி.., கூட்டணி என்று இதைத்தான் அவர்கள் தொடர்ந்து செய்வதுடன், அரசியல் அனாதையாக நின்றபடி மேற்கை தமிழனின் விடிவெள்ளியாக இன்று காட்டுகின்றனர். அதையே அரசியலாக்குகின்றனர்.

தமிழ் மக்களை இதன் மேல் நம்பிக்கை கொள்ள வைத்து நகர்த்தும் இந்த அரசியல் தான், இன்று பொது அரசியலாக மாறி உள்ளது. அதுமட்டுமல்ல, தாம் தான் இதற்காகப் போராடி இந்தச் சூழலை உருவாக்கியதாகக் காட்டவும் கூட செய்கின்றனர். உண்மையில் தமிழ் மக்களுக்கு எதிரான ஆபத்தான அனாதை அரசியல் மட்டுமன்றி, தமிழ் மக்களை ஏமாற்றி வாழும் பிழைப்புவாதமும் ஓருங்கே இதன் மூலம் அரங்கேறுகின்றது. மேற்கு சார்ந்த ஏகாதிபத்தியங்களுக்கும் இலங்கைக்குமான அரசியல் நெருக்கடி, புலத்து புலிகளின் போராட்டம் சார்ந்து உருவானதா!? இல்லை. இப்படி இருக்க தாம்தான் இதை உருவாக்கியதாக புலிகள் மட்டும் கூறவில்லை, அரசும் புலத்து புலிகள் தான் இதை உருவாக்கியுள்ளதாக கூறுகின்றனர். ஓரேவிதமாக புலத்து மாபியாப் புலிகளும், இலங்கை அரசு கூறுகின்ற அரசியல் பின்னணியில், அவரவர் தம் இன மக்களை ஏமாற்றி மோசடி செய்யும் அரசியல் தொடருகின்றது. ஆக இதன் பின்னணியில் பல உண்மைகளைக் கூட்டாக மூடிமறைக்கின்றனர். இந்த வகையில்

1. இலங்கை அரசும் மேற்கு சார்ந்த ஏகாதிபத்தியங்களுடன் சந்திக்கும் நெருக்கடியின் பின்னுள்ள உண்மையான அரசியல் சாரத்தை நீக்கி அதைத் திரித்து விடுகின்றனர்.
2. இலங்கை அரசு புலத்து புலியினால் தான் இந்த நெருக்கடியான சூழல் என்று திரித்து காட்டுவதன் மூலம், உள்நாட்டில் இனவாதப் பிரச்சாரத்தை தொடர முடிகின்றது. அதேநேரம் தன் மக்கள்விரோத குறுகிய நலன் சார்ந்த ஏகாதிபத்திய பக்கச்சார்பு அரசியலால் ஏற்படும் இந்த அரசியல் நெருக்கடியை, சொந்த மக்கள் முன் தொடர்ந்து மூடிமறைக்க முடிகின்றது.
3. புலத்து மாபியாப் புலிகள் தாம் தான் மேற்கு சார்ந்த ஏகாதிபத்தியம் மூலம் இலங்கைக்கு எதிரான நெருக்கடியை உருவாக்குவதாக கூறுவதன் மூலம், தமிழ் மக்களை கைக்கூலிகளாக இருக்கக் கோருகின்றனர். மறுதளத்தில் புலத்து புலிகள் தொடரும் தமக்குள்ளான சொத்து சண்டை அரசியலை மூடிமறைக்கவும், அதேநேரம் இதைக் காட்டி தமிழ்மக்களை கட்டுப்படுத்தும் மாபியாத் தனத்தையும் தொடர முடிகின்றது.
4. மேற்கு ஏகாதிபத்திய சொந்த நலன் சார்ந்த இந்த அணுகுமுறையை மூடிமறைத்து, மனித நலனுடன் தான் தமிழ் மக்களுக்காக இதை அவர்கள் முன்வைப்பதாக பாசாங்கு செய்து ஏமாற்ற முடிகின்றது.

யுத்தக் குற்றங்கள் பற்றியும், நீதி விசாரணைகள் பற்றியும், தீர்வுபற்றியுமான மேற்கு சார்ந்த ஏகாதிபத்திய அக்கறை போலியானது புரட்டுத்தனமானது. மறுதளத்தில் இதைச் சார்ந்த அரசியலைக் கடந்து, வேறு எந்த அரசியலும் இலங்கைக்கு நெருக்கடியை கொடுக்கவில்லை. இதன் பின்னணியில் தான் புலத்துப் புலிகள் இன்று குளிர்காய்கின்றனர். மக்கள் பார்வையாளராக, மந்தைகளாக தொடர்ந்து மாற்றப்பட்டு இருக்கின்றனர். உலகமயமாக்கலில் எந்த ஏகாதிபத்திய முகாம் சார்ந்து இலங்கை இருக்க வேண்டும் என்பது தொடர்பாக, மேற்குக்கும் இலங்கைக்கும் இடையிலான அரசியல் நெருக்கடி இன்றில்லை என்றால் என்ன நடந்திருக்கும்? எதைத்தான் தமிழ் மக்களுக்கு காட்டி இருப்பார்கள்? குழந்தைக்கு சந்திரனை காட்டி ஏமாற்றி உணவூட்டிய மோசடிப் பண்பாட்டின் தொடர்ச்சியில், தமிழ் மக்களையும் மோசடி செய்து ஏமாற்றுகின்றனர்.

இப்படிக் காட்டும் மேற்கு சார்ந்த ஏகாதிபத்திய இலங்கை மேலான அக்கறை என்பது, தமிழ்மக்களின் மேலான பேரினவாதத்தின் ஒடுக்குமுறை பற்றியதல்ல. மாறாக இன்றைய உலக ஒழுங்கில் இலங்கை யாருடன் சேர்ந்து எந்த முகாமுடன் நிற்கின்றது என்ற முரண்பாட்டை தீர்க்க, தமிழ் மக்கள் பிரச்சனையை மேற்கு பயன்படுத்துகின்றது. 1983இல் இந்தியா இலங்கையை தனது பிராந்திய நலனுக்கு ஏற்ற நாடாக்க, தமிழ் மக்களின் உரிமை சார்ந்த இனமுரண்பாட்டை பயன்படுத்தியது. இதன் தொடர்ச்சில் ஆயுதப்பயிற்சி கொடுத்தது முதல் நேரடியாக ஆக்கிரமித்தது வரையான அனைத்தும் பிராந்திய சொந்த நலனுடன் செய்தது. இதன் தொடர்ச்சியில் போராட்டத்தை முற்றாக அழித்தது வரையான அனைத்து உண்மையும், இங்கு மீளப் பொருந்தும். இந்த உண்மையையும், அனுபவத்தையும் நாம் நிராகரித்தால், மேற்கு சார்ந்த ஏகாதிபத்திய நலனுக்கு தமிழ் மக்களை பலியிடுவதற்குத்தான் உதவும். அதுதான் நடக்கின்றது.

இலங்கை அரசு மேற்கு சார்ந்த ஏகாதிபத்திய முகாமுக்கு ஏற்ற ஒரு சர்வதேசக் கொள்கையை ஏற்றுக்கொண்டால் என்ன நடக்கும்? மேற்கு முகாமுக்கு எதிரான நாடுகளுடனான நெருங்கிய உறவை துண்டித்தால் என்ன நடக்கும்? இலங்கை தொடர்பான மேற்கு சார்ந்த ஏகாதிபத்திய அக்கறை முடிவுக்கு வந்துவிடும். இன்று தொடரும் வெறும் கண்துடைப்பு நாடகங்கள் அனைத்து கைகழுவப்படும். இதுதானே உண்மை. இதைத்தானே இந்தியா எமக்குச் செய்தது.





அண்மைக்காலமாக இலங்கை அரசு யுத்தத்தில் மக்கள் கொல்லப்பட்டு இருக்கலாம், யுத்தக் குற்றவாளிகள் இனம் காணப்பட்டால் தண்டிக்கப்படுவார்கள் என்று கூறத்தொடங்கியுள்ளது. இலங்கை அரசு திடீரென இப்படி கூறத் தொடங்கி இருப்பது ஏன்? இது மேற்கு முகாம் நோக்கி இலங்கை அரசின் நகர்வா? இந்த நகர்வுக்கு ஏற்ற கண்துடைப்பு நாடகங்களா? இல்லை இதற்கு மாறாக இலங்கை அரசு மேற்கு சார்ந்த ஏகாதிபத்திய அக்கறையை வெறும் புலி சார்ந்த அல்லது தமிழ்மக்கள் சார்ந்த ஒன்றாக தவறாக குறுக்கி புரிந்து கொண்டு, நடத்தும் கண்துடைப்பு நாடகங்களை நடத்த முனைகின்றதா? இங்கு தமிழ் மக்களை வைத்து மோசடி செய்வது மட்டும் வெளிப்படையாக உள்ளது. இந்த மோசடியின் பின்னால் தான் கூட்டணி முதல் புலத்து புலிகள் வரை பயணிக்கின்றனர். இதற்குள் தமிழ்மக்களை தவறாக வழிகாட்டி, மற்றொரு புதைகுழிக்குள் அழைத்துச் செல்லுகின்றனர். இப்படி மேற்கு சார்ந்த ஏகாதிபத்திய குறுகிய நலனுக்குள் தமிழ் மக்களின் தலைவிதியை திணித்து இருக்கின்றனர். அன்று இந்தியா இன்று அமெரிக்கா என்று, தமிழ் மக்களின் உரிமைகளை அடகு வைத்து புதைக்கின்ற அரசியலையே தொடருகின்றனர்.

அந்த மக்கள் தமக்காக தாம் போராடக் கூடிய அரசியலையோ, சிங்கள மக்களுடன் சேர்ந்து தம் உரிமையை வென்றெடுக்கும் அரசியலையும் போராட்டத்தையும் மறுத்து, கைக்கூலி அரசியலைத்தான் தொடர்ந்து முன்வைக்கின்றனர். இதனால் தமிழ்மக்களுக்கு விடிவு கிடைக்காது. இதையொத்த கடந்தகால அனுபவத்தை நாம் நிராகரித்தால், எமக்கான புதைகுழியை நாமே கிண்டுகின்றோம் என்பதுதான் இதற்கான அர்த்தமாகும்.

- பி.இரயாகரன்.



# மக்கள் எழுச்சியை நசுக்கும் மேலைத்தேய மூலதன உரிமை

மேற்கத்திய நகரங்களை ஆக்கிரமிக்கும் மக்கள் போராட்டம் தற்போது நெருக்கடியைச் சந்திக்கின்றது. போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு இருந்த போதிலும், அரசு அடக்குமுறை வடிவங்கள் காரணமாக பின்னடைவை எதிர்நோக்குகின்றது. மேற்கத்திய நாடுகளில், மிகவும் நுணுக்கமாக அடக்குமுறை பிரயோகிக்கப்படுவதுண்டு. எதிர்காலத்தில் புரட்சி ஏற்படுவதை தடுப்பதற்காக, சிலநேரம் அரசே இடதுசாரித் தன்மை கொண்டதாக காட்டிக் கொள்ளும். அமெரிக்காவில் அந்த அதிசயம் நடந்தது. அமெரிக்க கோடீஸ்வரர்கள், தாங்கள் வரி கட்டப்போவதாக ஒபாமாவுக்கு கடிதம் எழுதிக் கேட்கின்றனர். அமெரிக்க ஜனாதிபதியுடனான தொலைக்காட்சி உரையாடலில் கலந்து கொண்டு, எம்மிடம் அதிக வரி அறவிடுங்கள். என்று கெஞ்சுகின்றனர். முதன் முறையாக அமெரிக்க பணக்காரர்கள், தாங்கள் வரி கட்டுவதில்லை என்ற உண்மையை பகிரங்கமாக ஒப்புக் கொள்கின்றனர். அமெரிக்காவில் இதுவரை காலமும் இடதுசாரிகளின் வெறுப்புப் பிரச்சாரமாக கருதப்பட்ட விடயம், இவ்வாறு மக்கள் அரங்கில் நிரூபிக்கப்பட்டதாக நினைவில்லை. இந்த மாற்றத்திற்கு காரணம் என்ன? நியூயோர்க் நகரில் முளைத்து, வெகுவிரைவில் அமெரிக்க நகரங்கள் எங்கினும் கிளை விட்ட மூஉரில எனும் இயக்கம் தான் காரணம். ஆக்கிரமித்தல் எனும் பொருள்படும் Occupy இயக்கம் எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டது?

உலகிற்கே ஜனநாயகத்தை போதித்த நாடு என்று, அமெரிக்கா பீற்றிக்கொண்டாலும், அங்கே ஜனநாயகத்திற்கும் எல்லை வகுக்கப்பட்டுள்ளது. மக்கள் தமது பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்து விட்டு, தொலைக்காட்சிப் பெட்டிக்கு முன்னே அமர்ந்து பார்த்துக் கொண்டிருக்க வேண்டியது தான். அத்துடன் அவர்களது ஜனநாயகக் கடமை முடிந்து விடுகின்றது. Occupy இயக்கம் அதற்கு மாறாக, மக்களே நேரடியாக பங்கேற்கும் ஜனநாயகத்தை கோரி நிற்கின்றது. இதுவரை காலமும், பலவீனமாகவிருந்த இடதுசாரி சக்திகளுக்கு, மக்களை அணிதிரட்டுவது ஒரு சவாலாக இருந்தது. மேற்கத்திய அரசுகளும், இடதுசாரிகளின் கோரிக்கைகளை அறிவிக்காமலே நடைமுறைப்படுத்தி வந்தது. வாழ்க்கை வசதிகள் உயர்ந்திருந்த காலத்தில், மக்களுக்கும் சோசலிசத்தின் பால் ஈடுபாடு ஏற்படவில்லை. உண்மையிலேயே அரசு மக்களுக்காக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்ததா, அல்லது இடதுசாரி சக்திகளை அமுக்குவதற்கான தந்திரமா என்பது வேறு விடயம். என்ன இருந்தாலும், இன்றுள்ள மக்கள் பெருமளவு இடதுசாரிக் கருத்துகளால் ஈர்க்கப்படுவதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டும்.

தொண்ணூறுகளின் மத்தியில், உலகம் முழுவதும் பொருளாதார நெருக்கடிகளை சந்தித்திருந்தது. ஆனால், மேற்கத்திய நாடுகள் அந்த நெருக்கடியில் இருந்து தம்மை தற்காத்துக் கொண்டன. வளர்ச்சி அடைந்து வந்த தூர கிழக்காசிய நாடுகளின் பொருளாதாரமே அதிகளவு பாதிக்கப்பட்டது. அதற்கு மாறாக, 2008ல் அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி நெருக்கடி, மேலைத்தேய நாடுகளை கடுமையாக பாதித்தது. உலகில் எந்த மூலையில் நெருக்கடி ஏற்பட்டாலும், சர்வதேச மூலதன-மானது தனது தாயகத்தில் பாதுகாப்பாக இருந்து கொண்டது. இம்முறை, வங்கிகள் இந்த நெருக்கடியை தோற்றுவித்தன. வங்கிகளை காப்பாற்றுவதற்காக, அரசு மக்களின் வரிப்பணத்தை எடுத்து செலவிட்டது. இதனால், வேலையிழப்புகள் ஏற்பட்டது மட்டுமல்ல, மக்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளும் குறைக்கப்பட்டன. இதுவே ஒரு மூன்றாம் உலக நாடாக இருந்திருந்தால், கடவுள் மேல் பழியைப் போட்டு விட்டு அரசு தப்பியிருக்கும். மக்களின் மதநம்பிக்கையும் பன்மடங்கு அதிகரித்திருக்கும். வளர்ச்சி அடைந்த நாடுகளில், மக்களும் பொருளாதார நலன்கள் குறித்து சிந்திக்கப் பழகி விட்டனர். அதனால், நெருக்கடிக்கு காரணமான அரசையும், முதலாளித்துவத்தையும் நேரடியாகவே விமர்சிக்கின்றனர். மக்களின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம், நகரங்களை ஆக்கிரமிக்கும் இடதுசாரிகளுக்கு ஆதரவை பெருக்க காரணமாக அமைந்தது.

பசித்த மனிதன் கோபமாக இருப்பான் என்ற பழமொழிக்கேற்ப, மக்கள் உணவுக்காக வீதிக்கு வந்தும் போராடத் தயாராக இருப்பார்கள். அதனால் தான், அரசு உணவுப் பொருட்களுக்கு மானியங்களை அள்ளி வழங்கி வருகின்றது. மூன்றாம் உலக நாடுகளில், மத உணர்வு, இன உணர்வு என்பன, மக்களின் கவனத்தை திசைதிருப்ப பயன்படுத்தப்படுகின்றன. மக்களின் கருத்தாக்கத்தில் பெரும்பங்கு வகிக்கும் மத்தியதர வர்க்கமும், தன்னை சிறந்த மத-இன உணர்வாளர் களாக காட்டிக்கொள்ளும். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மேற்கத்திய நாடுகளில் இது போன்ற கருத்துக்கள் அடக்கப்பட்டன. தேசியவாதத்தின் பெயரால் ஹிட்லர் நடத்திய இனப்படுகொலையும், அதைத் தொடர்ந்து கோடிக்கணக்கான மக்களைக் காவுகொண்ட யுத்தமும், மக்கள் மனதை விட்டு அகலவில்லை. அதனால், இன உணர்வு என்றால் தள்ளிச் செல்லும் மேலைத்தேய மக்களிடம், அது போன்ற கருத்துக்கள் எடுபடப்போவதில்லை.

இருப்பினும், Occupy இயக்கத்தின் மீதான அரச அடக்குமுறையானது, எதிர்காலத்தில் இரண்டு வகையான அரசியல் சக்திகளை பலப்படுத்தும். மக்களுக்கு உணவு மட்டும் முக்கியமில்லை. மதம், இன உணர்வு என்பனவும் முக்கியம். என்று கூறி வரும் தீவிர வலதுசாரி பாஸிச சக்திகளை, சில நேரம் அரசே ஊக்குவிக்கலாம். அதற்கு எதிராக, தீவிர இடது சாரிகளும் நடவடிக்கைகளை எடுக்கலாம். ஆனால், Occupy இயக்கத்தை தோற்றுவித்த இடதுசாரிகள் ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள் என்பதால், பாராளுமன்ற தேர்தல் அரசியலுக்குள் இறங்கி சீரழியலாம். ஏனெனில், மக்கள் போராடுவார்கள், மக்கள் தீர்மானிப்பார்கள் என்று அரசியல் மயப்படுத்தப்படாத மக்கள் மீது நம்பிக்கை வைக்கின்றனர். முதலாளித்துவ அரசும், ஊடகங்களும் இருக்கும் வரையில் மக்களைச் சிந்திக்க விடமாட்டார்கள்.

Occupy இயக்கத்தை ஒடுக்கியதில் ஊடகங்களின் பங்கு குறைத்து மதிப்பிடத்தக்கதல்ல. ஆரம்பத்தில், மேற்கத்திய நாடுகளின் பங்குச் சந்தைகளுக்கு முன்னால் நடந்த ஆர்ப்பாட்டங்கள் ஊடகங்களால் புறக்கணிக்கப்பட்டன. நாட்கள், வாரங்களாகியும், ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கலைந்து செல்லாததால், மக்களின் ஆதரவும் பெருகியதால், வேறு வழியின்றி ஊடகங்கள் கவனத்தை திருப்பியிருந்தன. அப்போதும், அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்தவர்களை, பொலிஸ் வன்முறை கொண்டு ஒடுக்கியதை அறிவிக்கவில்லை. பங்குச்சந்தை தரகர்களும், பெருநிறுவனங்களின் முதலாளிகளும், மனிதஉரிமைகளை மதிப்பதாக பாசாங்கு செய்வதற்காக எதிர்ப்பாளர்களை பொறுத்துக் கொண்டார்கள். நாள் செல்லச் செல்ல அவர்களது பொறுமையும் எல்லை கடந்து விட்டது. அடக்குமுறை பிரயோகித்து போராட்டத்தை முறியடிக்குமாறு அரசை கேட்டுக் கொண்டனர். கவனிக்கவும், இதே முதலாளிகள் தான், தங்களிடம் அதிக வரி அறவிடுமாறு ஒபாமாவிடம் வேண்டுகோள் விடுத்தனர். முதலாளிகள் மனம் திருந்தவில்லை. நேரத்திற்கு ஏற்றவாறு நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடிக்கின்றனர்.

அமெரிக்காவில், எதிர்காலத்தில் இது போன்ற போராட்டங்கள் நடப்பதை தவிர்ப்பதற்காக, நடவடிக்கைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய அரசுசாரா அமைப்பிற்கு, பெரும் தனவந்தர்கள் புரவலர்களாக இருப்பார்கள் என்பதை சொல்லத் தேவையில்லை. அதேபோன்று, இலாப நோக்கை குறிக்கோளாக கொண்டு நடத்தப்படும் ஊடகங்களும், Occupy இயக்கத்தை ஆதரிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. எப்போதும் சாமானியரின் உணர்வுகளோடு விளையாடும் ஊடகங்கள், இம்முறையும் எதிர்மறையான செய்திகளை பரப்பின. இந்தச் செய்திகள், Occupy ஆதரவாளர்கள் மனதில் கிலியை ஏற்படுத்தி, அவர்களை வீட்டுக்குள்ளே முடங்க வைத்தன. நகர மத்தியில், Occupy போராட்டம் நடைபெற்ற இடங்களில் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன போராட்டக்காரர்கள் தங்குவதற்காக.




நண்பர்களுடன் அரசியல் விவாதங்கள் நடத்தும் நோக்குடன் அமைக்கப்பட்ட கூடாரங்கள். கறையான் புற்றெடுக்க பாம்பு நுழைந்தது போல, பல சமூக விரோதிகளும் கூடாரங்களுக்குள் தங்குவதாக செய்தி பரப்பப்பட்டது. அந்த இடத்தில், குடிகாரர்களும், திருடர்களும் நடமாடுவதாகவும், பெண்களுக்கு தொல்லை கொடுப்பதாகவும் கூறப்பட்டது. இதனால் தமது பாதுகாப்பு கருதி பல பெண்கள், போராட்டக்களத்தில் இருந்து பின்வாங்கினார்கள். இதை விட, வீடற்றவர்கள், உல்லாசப்பிரயாணிகள் போன்ற போராட்டத்திற்கு சம்பந்தமற்ற நபர்களும், இலவசமாக கிடைக்கும் வசதியை பயன்படுத்திக் கொள்கின்றனர். நகரின் மத்தியில் இலவசமாக தங்குமிடமும், இலவச உணவும் கிடைக்கிறது. எல்லாம் Occupy இயக்கத்தின் புண்ணியத்தால் கிடைக்கின்றன. சுருங்கக் கூறின், Occupy ஆர்வலர்களின் கோரிக்கைகளுக்கு

ஆதரவளிப்பதாகவும், ஆனால் சமூகவிரோதிகளின் கூடாரமாக மாறுவதை மட்டுமே எதிர்ப்பதாகவும் ஊடகங்கள் நீலிக் கண்ணீர் வடித்தன. எகிப்தில், லிபியாவில், சிரியாவில் Occupy இயக்கத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்ற போதெல்லாம், ஊடகங்கள் இதுபோன்ற தகவல்களை பரப்பவில்லை. அதற்கும் முதல் பெல்கிரேட்(செர்பியா), கியெவ் (உக்ரைன்),திபிலிசி(ஜோர்ஜியா) போன்ற நகரங்களிலும் இதே மாதிரி கூடாரங்கள் அமைத்து ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஆர்ப்பாட்டம் செய்தவர்களுக்கு, சோரோஸ் பவுண்டேன் போன்ற அமெரிக்க கோடீஸ்வரர்களின் அமைப்புகள் நிதி வழங்கின. அந்த ஆர்ப்பாட்டங்களை எல்லாம், நீதிக்கான மக்கள் எழுச்சி, ஜனநாயகப் புரட்சி என்று வர்ணித்தார்கள். இந்த நகரங்களில் நடந்த போராட்டங்கள், சமூகவிரோதிகளின் கூடாரங்களாக மாறிவிட்டிருந்ததாக, எப்போதாவது கேள்விப்பட்டிருப்போமா? ஊடகங்களில் அவ்வாறான செய்தி வந்திருக்குமா? எமது அரசியல் நண்பர்கள் செய்வதெல்லாம் புரட்சி, எமது அரசியல் எதிரிகள் செய்வதெல்லாம் சமூகவிரோதச் செயல். என்பது தான் மேற்கத்திய ஊடகங்களின் தாரக மந்திரமாக இருந்து வருகின்றது.

**- கலையரசன்.**

# இப்படித்தான் இருக்கவேண்டும் பெண்கள் தமிழ் கலாச்சாரக் காவலர்களின் கட்டளை!



யாழ்ப்பாணம் தமிழ்மக்களின் கலாச்சார குவிமையமாம் (வடமராட்சி யாழின் மூளை என்பதுபோல்) எப்படியும் வாழலாம், ஆனால் இப்படித்தான் வாழவேண்டும் என வாழ்ந்து காட்டியவர்கள் யாழ் மக்கள், அதிலும் பெண்கள்! இப்பேர்ப்பட்ட எம் மண் இன்று கலாச்சாரச் சீரழிவின். உச்சகட்டத்தில் உள்ளது என யாழின் ஊடகம் ஒன்று பெரும் கவலையாக செய்தி வெளியிட்டிருந்தது. இதை என்னே என்பது? உதை உயர் இந்து வேளாளத்தின் இறுகிய ஆணாதிக்க கருத்தியல் கொண்ட அலம்பல்களாக கொள்ளலாம்தானே!

யாழ்ப்பாணக் கலாச்சாரம் என்பது இடுப்பிற்கு கீழ்ப்பட்டதோ..? என இன்னொரு ஊடகத்தில் அதன் கட்டுரையாளர் ஓர் கேள்வியாக எழுப்பியிருந்தார். உண்மையில் இங்கிருந்துதான் தமிழ் கலாச்சாரம் பற்றிய விவாதத்தை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.

அண்மையில் யாழ்-நகரில் ஓர் இளம் பெண் ஓர் இளைஞனிடம் காசு இருக்கா? இருந்தால் றூம் போடுவோமா? எனக் கேட்டாளாம். உடனே அந்த கற்புக்கரசனான இளைஞனுக்கு ஆணாதிக்க கோபம் சட்டென வர அவர் அந்தப்பெண்ணின் கன்னத்தில் அறைந்தது மாத்திரமல்லாமல், வேலியே பயிரை மேயும் யாழின் காவல் நியைத்திலும் முறைப்பாடு செய்தாராம்! இதை ஓர் பரபரப்பான செய்தியாக்கியுள்ளன யாழின் "தமிழ் கலாச்சாரம் காக்கும்" ஒருசில ஊடகங்கள். உண்மையில் மகிந்தப் பேரினவாத அரசைவிட கலாச்சாரச் சீரழிவிற்கு பெரும் துணை பேர்வது இப்பேர்ப்பட்ட ஊடகங்களும் அதன் எழுத்தாளர்களுமேயாகும்!

ஒரு காலத்தில் தமிழ் பத்திரிகைகளான மித்திரன் தந்தி போன்ற பத்திரிகைகள் எதைச் செய்தனவோ, அதை-தவிடக் கேவலமான விதத்தில் செய்திகளை சித்தரிக்கின்றன. ஆணாதிக்க சிந்தனைச் செயற்பாட்டு நோக்கில் இருந்து செய்திகளை வடித்துவிட்டு, பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் அதுவும் கற்புடன் என போதனை செய்கின்றன! இந்த கற்பெனப்படுவதுதான் என்னவோ? ஆணின் எதிர்பார்ப்புக்களை பெண்களுக்குரிய விதிகளாக விதித்துள்ள சமுதாய நடைமுறையில் பெண் ஒடுக்கலுக்கான ஓர் குறியீட்டுக் கண்டுபிடிப்பே கற்பு!

வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்கில் தாய்வழிச் சமூகம் குலைக்கப்பட்டு, தந்தைவழிச் சமுதாயம் தோன்றிய பின்னரே ஒருதாரமுறை தோன்றுகின்றது. இதில் ஆணின் தனிமனித நலனை மட்டுமே கருத்தில்கொண்டு சமூக நலன் எனும் போர்வையில் கட்டமைக்கப்பட்ட விதிகளில் ஒன்றே கற்பு. இதற்குள் கட்டுப்பட்டவள் கற்பாஸ்திரி, கட்டுப்படாதவள் விபச்சாரி. பெண்களை விபச்சாரி எனும் சமூக கட்டமைப்பு பெண்களை விபச்சாரியாக்கும் ஆண்களை ஏன் விபச்சாரகன் எனச் சொல்வதில்லை?. மாறாக மைனர் எனப் பெருமை கொள்கின்றது.



இந்த மைனர்களே தமிழ்ச்சமுதாய கலாச்சாரத்தின் சம கால காவலர்கள் ஆகியுள்ளார்கள்! தமிழ்மக்களின் கலாச்சார குவிமையமான யாழ்ப்பாணத்தின் மானமே கப்பலேறிவிட்டதென குத்தி முறிகின்றார்கள்! தெரியாமல்தான் கேட்கின்றோம் யாழ்ப்பாணம் என்ன இந்த புராண-இதிகாசங்களின் சித்தரிப்பாக காட்டும் காவிரிப்பூம்பட்டினமா? அல்லது திருக்கைலாய மலையா? தேவர்களின் இந்திரலோகமா? தேவர் தலைவன் இந்திரன், இராமாயணத்தின் இராவணன் சங்கம்-சங்கம் மருவிய கால மன்னர்கள் முதல் யாழ்ப்பாணத்தின் பெரும் பிரமுகர்கள், சண்டியர்கள் ஈறாக, வடக்கின் வசந்தத்தின் பாலியல் விடுதிப் பொறுப்பாளர் வரை பொம்பிளைப் பொறுக்கியள்தானே?

ஏன் பாரதத்தின் குந்தியின் மகன் கர்னனுக்கும், கற்புக்கரசி கண்ணகியின் பிள்ளைகள் லவன்-குசன் என்ற பிள்ளைகளுக்கும் அப்பன் யார்? ஆணாதிக்க கருத்துமுதல்வாத கற்பனாவாத காரணி களை களைந்தெறிந்தால் விஞ்சிநிற்பது கற்புநெறி தவறி பாலியல் சோரம் போன வரலாறு அல்லவா? இப்படி சோரம்போன வரலாறு யாழப்பாணத்திற்கு இல்லையோ? இதைத்தானே கடவுள்கள் பவனி வரும் தேர்களில் சிற்பக்கலையாக வடித்துள்ளோம், வணங்குகின்றோம்!வடக்கின் வசந்தம் தமிழ்கலாச்சாரம் காக்கும் (வெள்ளை வேட்டி நானலுடன்) அசல்த்தமிழன் அதன் தோழரின் பாலிய்ல் விடுதியன் பெயர் சுமங்கலி பாலியல் விடுதிக்கு சுமங்கலி என பெயரிட்டு வியா பாரம் நடாததும் இவர்களும் அசல் தமிழ் கலாச்சாரக் காப்பாளர்கள்தானே? இவ்விடுதியிலிருந்து கணவனை இழந்த மூன்று பிள்ளைகளின் தாயும் கைது செய்யப்பட்டிருக்கின்றாள்! இவவுக்கு இதுவும் தேவையோ? எனக்கிண்டலடிக்கும் விசம விமர்சனங்களையும் காண்கின்றோம்?



யுத்த அழிவின் பின்னான நொந்துபோயுள்ள எம்மினத்தை, குறிப்பாக பெண்களை பெண் போராளிகளை சமூகப் பொறுப்பற்ற நோக்கிலிருந்து ஆணாதிக்கத் திமிரிலிருந்து, காமப்பசியிலிருந்து விமர்சிப்போரை, சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட இனவெறி நடவடிக்கைகளுக்கு துணை போகும் போக்காளர்களாகவே கொள்ளமுடியும். வடகிழக்கில் கிட்டத்தட்ட 50,000-பேர் கணவனை இழந்து பிள்ளைகளுடன் விதவைகளாக வாழ்கின்றார்கள். இவர்களின் மறுமணத்தை, வறுமையின் நிமித்தமான பாலியல் தவறுகளை (ஊக்குவிப்பதல்ல) பெரும்பொருளாக சித்தரிக்கும் போக்கை கலாச்சாரக் காப்பகமாக கொள்வது, காட்டுவது சமூக விரோதம் கொண்டது. ஓர் இனத்தின் கலாச்சாரம் என்பது பெண்களை உடலியல் சார்ந்து விமர்சிப்பதும், இப்படித்தான் இருக்கவேண்டும் என கட்டளையிடுவதம் அல்ல! இது ஒற்றைப் பரிமாணம் கொண்ட ஆணாதிக்க சுட்டிக்காட்டல். கலாச்சாரம் என்பது யாருக்கானது? ஆண்-பெண் என்ற இருபாலாருக்குமானது, இந்நோக்கிலிருந்து எழுப்பப்டும் சரியான பெண்ணியக் கருத்துக்கள் உள்வாங்கப்படல் வேண்டும். சகல பிற்போக்கான பழைய--இறுகியவைகள் (பெண்ணடிமை கொள்ளும்) யாவும் மீள்கட்டுமானம் செய்யப்படவேண்டும்! இதை நோக்கி நகர்த்த எம்தாயக மக்களின் தயார்நிலை எப்படியுள்ளது?



தமிழ் மக்கள், சரியான அரசியல் தலைமயற்ற வெற்றிடத்தில், தமிழர் தாயகம் இராணுவச் சிறைச்சாலையில், அதன் அரசியல் பொருளாதார கலை - கலாச்சார - பண்பாட்டுத்தளம் பேரினவாத அரசால் நாளாந்தம் திட்டமிட்டு இல்லாதாக்கும் நிலையில் இராணுவ அதிகாரிதான் வடமாகான ஆளுனர், அவரின் சாரதிதான் பாலியல் விடுதியின் மெங்க்காப்பாளர், இதற்கொத்தாசை புரிந்து (பத்திரிகை விற்பனைக்காக பாலியல் பாணியில்) எழுதுவதுதான் சில ஊடகங்களின் வேலை, இதை தடடிக்கேட்டால் கைதுசெய்து நையப்புடைப்பதுதான் யாழ் பொலிசின் வேலை, இதற்குள் கலாச்சாரம் காப்பதுதான் எம்கடமையென சில ஆணாதிக்க ஆண்கள்! எனவே இதற்கு விடை காணுவதுதான் பெரும் வேலை!

ஆகவே இதற்கு முன்னணி வாசகர்களின் பேருதவியும் தேவை!
எழுதுங்கள்.தொடர்வோம்!

-அகிலன்.



# எதிர்காலத்திற்கான போராட்டம் ஏதோ ஒருவகையில் தொடரும் என்பது எனது நம்பிக்கை..!

## முற்குறிப்பு:

***ஜனனி செல்லத்துரையுடனான இந்தப் பேட்டி 2011 புரட்டாதி மாத ஆரம்பத்தில் எடுக்கப்பட்டது. மேலும் பாதுகாப்புக் காரணங்களினால் கடந்த இதழில் இப்பேட்டி வெளியிடப்படவில்லை. தற்போது அவர் பாதுகாப்பான சூழலில் உள்ளதனால் அவரின் சம்மதத்துடன் இப்பேட்டி இங்கு பிரசுரிக்கப்படுகிறது. அத்துடன் அவரின் பெயர் மற்றும் தனிப்பட்ட விபரங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.***

எல்லாத்தையும், எல்லோரையும் நடுத்தெருவில கொண்டு வந்து விட்டதற்கு, உங்கள் மாதிரி புலம் பெயர்ந்தவர்கள் தான் காரணம். இப்போ வந்து முதலைக்கண்ணீர் விடுகிறதில எந்த லாபமும் இல்லை. அதாவது எந்த லாபமும் மக்களுக்கு இல்லை. பாசிசம், பிற்போக்குத் தேசியம் என்றெல்லாம் சொல்லி எம் தேசம் அழிந்துள்ள இன்றைய நிலைமைக்கு காரணம் கூற முயற்சிக்கிறீர்களே, நீங்க பாசிசம் என சொல்லுற அமைப்பை விட பல பத்து மடங்கு அதிகமானவர்கள், அதை விமர்சிப்பவர்களாக இருந்தீங்க. அப்போ, ஏன் அதற்கு எதிராக மக்களை அணிதிரட்டாமல் நாட்டை விட்டு ஓடினீர்கள்? முன்னணிக்காக கேள்வி கேட்டு பேட்டிகாணவும், உரையாடவும் வந்த என்னிடமே கேள்விக் கணைகளை தொடுத்தார் ஜனனி செல்லத்துரை. ஜனனியை 2004 ஆம் ஆண்டில் நான் முதன்முதலாக சந்தித்தேன். சந்தித்த இடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். அன்று அவர் சமூகவியல் முதலாம் வருட மாணவி. நான் அப்போது வடபகுதி தமிழ் இளையோரும் தற்கொலையும் என்ற தலைப்பில் களஆய்வுப் பணியை, யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டேன். அந்த ஆய்வுப்பணியின் ஒரு பகுதியாக வர்க்கம், பால், மதம் போன்ற சமூகப் பிரிவுகளை பிரதிநிதித்துவப்படுத்தவல்ல இளையோரை, தற்கொலை பற்றி தயாரித்து வைத்திருந்த கேள்விகளின் அடிப்படையில் பேட்டி கண்டேன். அவ்வாறு பேட்டிகண்டவர்களில் ஒருவர்தான் இந்த ஜனனி.

**உங்களை நான் கடைசியாக 2004இல் சந்தித்ததற்கும் இன்று உங்களை சந்திப்பதற்கும் இடையில் ஆறு ஆண்டுகள் கடந்துள்ளன. இந்தக் கால இடைவெளியில் அரசியல், சமூகம் மற்றும் உங்களின் தனிப்பட்ட வாழ்க்கை என அனைத்து மட்டங்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும். அவைபற்றி... என் கேள்வி முடிவதற்குள் அதற்கான பதில் கரைகடந்து அலையாக பிரவாகித்தது.**

எங்கிருந்து ஆரம்பிக்கிறது? நீங்க சொல்லுறமாதிரி அரசியல், சமூகம், தனிப்பட்ட வாழ்க்கை என்று பிரித்துப் பார்த்து பதில் சொல்லுறது இலகுவாக இருந்தாலும், எனது வயதுடையோரின் வாழ்நிலையில், இந்த மூன்று நிலைகளையும் பிரித்துப் பார்த்து பதில் சொல்வது இலகுவானதல்ல. உங்களுக்குத் தெரியும் நாங்கள் யுத்தகாலத்தில் பிறந்து, யுத்தத்தின் அனைத்து கொடுமைகளுக்கிடையிலும், அரசியல் அநீதிகளுக்கு மத்தியிலும் வளர்ந்தவர்கள். யுத்தம் நிகழும் ஓர் சமூகத்தில் தனி மனிதத்தின் விருப்பு வெறுப்பின் அடிப்படையின் அதன் சீவியம் கட்டமைக்கப்படுவதில்லை. யுத்தமில்லாச் சமூகத்தில், மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலுள்ள தனி மனிதருக்கிருக்கும் தெரிவுகள், எமக்கு எம் வாழ்நாளில் இருந்ததில்லை. அரசியல் தலைமைகளின் முடிவுகளும், யுத்த தந்துரோபாயங்களும் அவைகளின் பார்ப்பட்ட விளைவுகளுமே எமது வாழ்க்கையை, அதன் திசையை முடிவுசெய்யும் சக்திகளாகவிருந்தது. இன்றும் இருக்கிறது. உங்களை சந்தித்த பின்னான காலத்தில் நான் சமூகவியலில் இளம் கலை படித்து முடித்து விட்டு 2007இல் முதுகலை கற்கையை தொடங்கினேன். ஆனால் அன்றிருந்த சூழலில் பல்கலைக்கழகம் ஒழுங்காக இயங்கவில்லை. எனது சக மாணவர்கள் பலர் கொழும்புக்கும், வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்தனர். சிலர் அந்த சூழ்நிலையிலும் தமது கல்வியை தொடர்ந்தனர். என்னைப்போன்ற சிலர் வன்னிக்கு சென்று புலிகளுடன் இணைந்துகொண்டோம். அன்றிலிருந்து வைகாசி 2009 வரையான காலத்தில், நான் களத்தில் நின்றேன். இப்போ திரும்பவும் யாழ் - பல்கலைக்கழகத்தில் சமூகவியல் முதுமாணி கற்கையை தொடர்கின்றேன்.

இதில் நான் இருந்த இயக்கம் பற்றி, அது ஏன் தோற்றது, அதைவிட ஈழவிடுதலைப்போராட்டம் ஏன் தோற்றது, போன்ற அரசியல்ரீதியான கேள்விகளும், எமது போராட்டத்தின் ஆரம்பத்திலிருந்து வைகாசி மாத இறுதிநாட்கள் வரை நடந்த விடயங்கள் எவ்வாறு தமிழ் இனத்தை சமூக, கலாச்சார, பொருளா தாரரீதியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன, என்பது போன்ற ஆயிரம் கேள்விகள்.., இக் கேள்விகளுக்கு பதில் காண வேண்டிய தேவை எனக்கும் எம் சமூகத்திற்கும் முன்னுள்ள மிக முக்கிய விடயம். ஆனால் ஒரு தனிமனிதனாக நானோ, எனது ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமோ இக் கேள்விகளுக்கான பதிலை தேடும் மனநிலையிலோ அல்லது சூழ்நிலையிலோ இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

அதேவேளை ஆரம்பத்தில் நான் கூறியது போல, எல்லாத்தையும் நடுத்தெருவில விட்டிட்டு தப்பியோடியவர்கள், இப்போ புலத்திலிருந்தபடி ஈழவிடுதலைப் போராட்டம் ஏன் தோற்றது? புலி எந்த வர்க்கத்தைச் சேர்ந்தது? பாசிசமா, அல்லது தேசியமா புலிகளின் அரசியல் குணாம்சம் என்ன? போன்ற கேள்விகளுக்கு விளக்குப் பிடித்து பதில் தேடுவதாக நடித்தபடி, அவர்கள் ஏற்கனவே பாடிய அதே மந்திரங்களையே பாடுகிறார்கள். இது ஒரு பக்கமிருக்க, புலிகளுக்கு ஆதரவாக இருந்தவர்கள் எந்தவித சுயசிந்தனையோ, தேடலோ இன்றி தவறுகளை மூடிமறைத்தபடி, தமது இருப்பை காப்பாற்ற எமது தோல்விக்கான காரணங்களென ஏதேதோ கூறுகிறார்கள். சர்வதேச அரசியல் காரணிகளும், காட்டிக் கொடுப்புகளும் தான் தோல்விக்கு காரணம் என கதை விடுகிறார்கள்.

என்னைப் பொறுத்தளவில் இவ்விரு கும்பலும் சுயநலம் பிடித்த, தப்பியோடிய யாழ் மேலாதிக்க சமூகத்தின் பிரதிநிதிகளே. இவர்களின் அரசியல் முனைப்புகளும், அரசியல் ஆய்வுகளும் எமக்கு இழந்த எதையும் மீட்டுத் தரப்போவதில்லை..., தொடர்ந்தும் நாம் தான் போராடவேண்டும்..!

பதிலில் ஆத்திரமும் கோபமும் மிகுந்திருந்தது. 2004இல் சந்தித்தபோது எனது மிக நீண்ட கேள்விகளுக்கு ஓரிரு வார்த்தைகளில் வேண்டாவெறுப்பாக தாழ்ந்த குரலில் பதில் சொன்ன ஜனனிக்கும், இன்று கேள்வி கேட்டு முடிக்கு முன்பே பல கோணங்களில் வரையறுத்து, துல்லியமான குரலில் அதற்கான நீண்ட பதிலை வழங்கும் ஜனனிக்கும் உள்ள வித்தியாசம் ஒருவகை ஆச்சரியத்தையும், சிறு நம்பிக்கையையும் என்னுள் ஏற்படுத்தியது. அதேவேளை அவரின் பதில்களில் செறிந்திருந்த ஆத்திரத்தினதும் கோபத்தினதும் பின்னணியில், கையறு நிலையில் உருவாகும் சோகம் மிகவாக இழையோடியது. இரு சந்தர்ப்பங்களில் உணர்ச்சிவசப்பட்ட அவரின் குரல் உயர்ந்தபோது, அவருடன் கூட வந்த சக மாணவி அவரை ஆசுவாசப்படுத்தி சகச நிலைக்கு கொண்டுவந்தார்.

**உங்கள் பதிலில் உள்ள உள்ளடக்கத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் என்னால் விளங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால் அரசியல் அடிப்படையில் முற்றுமுழுதாக என்னால் உங்களுடன் உடன்பட முடியவில்லை என என் கருத்தை பதிவு செய்தபடி வட பிரதேசத்தின் இன்றைய நிலை பற்றி அவரிடம் கருத்துக்கேட்டேன். இன்றைய வடபகுதி நிலை பற்றி கேட்டீர்கள். இந்த கேள்விக்கும் சும்மா மேலோட்டமாக பதில் சொல்ல முடியாது.**

புலிகளின் அழிவின் பின்பு இங்கு அரசியலில் இரு துருவங்கள் இருப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு சொல்லியபடி, தமிழ் மக்களின் ஏகபோக தலைவர்கள் தாங்கள் தான் எனவும், அரசு உட்பட மாற்றுக் கட்சிகள், அரசியல் முயற்சிகள் அனைத்தும் தமிழ் மக்களுக்கு எதிரானவை என ரீல் விட்டபடி அரசியல் செய்கிறார்கள். இவர்களின் கட்டுப்பாட்டில் உள்ள பெரும்பான்மையான தமிழ் ஊடகங்களும் இதே கருத்தையே பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் எல்லோருக்கும் தெரியும், கூட்டமைப்பு அரசியல்வாதிகள் பலருக்கு இலங்கை அரசுடனும், அதில் உள்ள மந்திரிகளுடனும் பின் கதவால் நல்ல உறவுண்டு எண்டது. உதாரணமாக பிரேமச்சந்திரன் போன்றவர்களுக்கும் மஹிந்த குடும்பத்துக்கும் மிக நெருக்கமான உறவு உள்ளது என்பது எல்லாருக்கும் தெரிஞ்ச விசயந்தானே.

இப்போ யாழ்ப்பாணத்தில் கட்டிட ஒப்பந்தம் பெறுதல், ஹோட்டல் மற்றும் மது விற்பனைக்கான அனுமதி பெறுதல் போன்ற அரசு சார்ந்த விடயங்களுக்கு, மஹிந்த குடும்பத்துடனான உறவு வெகுவாக பாவிக்கப்படுகிறது. இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள பல நிறுவனங்கள், தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் - இந்நாள் பாராளுமன்ற உறுப்பினர்களினது தான். அவர்களின் பினாமிகளாலும், உறவினர்களாலும் அந்த நிறுவனங்கள் நிருவகிக்கப்படுகிறது. அதேவேளை அரசினதும் மக்களினதும் பிரதிநிதி தான் தான் என்பதுபோல இங்க ஒருவர் வில்லன் அரசியல் வேற செய்யிறார். நான் யாரைப் பற்றிச் சொல்லுறன் எண்டது உங்களுக்கு விளங்கும். ஆம் டக்லஸ் பற்றித்தான் சொல்லுறன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தனியார் நிறுவனங்களையும், வடபகுதியின் பொருளாதாரத்தையும் தாங்கள் தான் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது போல, டக்ளசும் அவரது கும்பலும், அரச நிறுவனங்களை தமது கட்டுப்பாட்டில் வைச்சிருக்கினம். இங்குள்ள அரச நிறுவனங்களில் ஒரு சிற்றூழியர் வேலை

பெறுவதெண்டாலும் டக்ளஸ் கும்பலின் தயவு தேவை. உதாரணமா இங்கு பல்கலைக்கழகத்தில் பணம் பதவி சார்ந்த அனைத்து விடயங்களும் EPDP யின் அடிவருடிகளாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழகத்தில் அரசினால் நியமிக்கப்பட்ட துணை வேந்தரின் அதிகாரங்கள், நடைமுறையில் இங்குள்ள EPDP ஆதரவாளர்களான சில முன்னாள் துணைவேந்தர்களினாலேயே பிரயோகிக்கப்படுகிறது. அதைவிட இந்தமுறை யாரைத் துணை வேந்தராக நியமிப்பதெண்ட முடிவை எடுத்து, அதை நடைமுறைப்படுத்தியது EPDP தானே? கல்வி கற்றவர்கள் நிறைந்துள்ள ஓர் நிறுவனமான யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலேயே இப்படி எண்டால்.., இங்குள்ள மற்ற அரச நிறுவனங்களின் நிலைமை எப்படி இருக்குமென எண்ணிப்பாருங்கோவன்.!

என்ன இருந்தாலும், இப்போதுள்ள துணைவேந்தர் பெண்ணென்பது பெருமைப்பட வேண்டிய விடயந்தானே? அதேபோன்று இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் பெண்கள் அரசுசார் நிறுவனங்களிலும், அரசியல் பொறுப்புகளிலும் உள்ளனர்.

**குறிப்பாக யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர், மற்றும் அரசியலில் யாழப்பாண மேயர், ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.மகேஸ்வரன் போன்றவர்களை குறிப்பிடலாம். இவ்வாறு பெண்கள் பதவிக்கு வருவது பெண்ணிய முன்னேற்றமில்லையா? நீங்கள் இதை எப்படிப் பார்க்கிறீயள்?**

என்னடா இவ்வளவு நேரமும் பெண்கள் பற்றி இவர் கேள்வி கேட்கவில்லேயே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். மறக்காமல் கேட்டதற்கு நன்றி.

முதலில் இன்று தமிழ் பிரதேசத்தில் பெண்களின் நிலை பற்றி கொஞ்சம் சொல்லிவிட்டு, பிறகு நீங்கள் கேட்ட பெண்ணிய கேள்விகளுக்கு பதில் சொல்லுறன். பெண்களின் கல்வி நிலையை எடுத்துக்கொண்டால் அது நான் பிறப்பதற்கு முன்பு, எண்பதுகளில் இருந்த நிலைமையை விட படுமோசமாகவுள்ளது. இப்போ ஆரம்பக் கல்வியிலும் உயர் கல்விக்கு முன்பான A/L வரையான கல்வியிலும், பெண்கள் தொகை ஆண்களை விட அதிகம். அதேவேளை நூற்றுக்கு முப்பது வீதமான மாணவிகள் கல்வியை இடை யிலேயே நிறுத்திக்கொள்கிறர்கள். அதையும் மீறி கல்வியை தொடர்பவர்களில் பத்துவீதத்தினரே உயர் கல்விக்குள் நுழைகின்றனர். இவர்களில் பெரும்பான்மையானோர் திருமணம், வெளிநாடு போதல் போன்ற காரணிகளால் கல்வியை இடையில் நிறுத்துகிறார்கள். இதில் பலர் கல்வியை நிறைவு செய்தாலும், எந்தவித தொழிலிலும் ஈடுபடுவதில்லை. மிகச் சிறுவீதத்தினரே கல்வித் தகமையின் அடிப்படையில் ஏதாவது வேலையில் இணைகின்றனர். இந்நிலைக்கு யுத்தம், மற்றும் ”சிங்கள அரசுகளால் எமது கல்விசார் உட்கட்டமைப்பு அபிவிருத்தி செய்யப்படவில்லை” என்பது போன்ற காரணிகள் மட்டும் காரணம் என்று மேலோட்டமாக சொல்லிவிட முடியாது. பொருளாதார வறுமை, எமது சமூகத்தால் கவனத்தில் எடுக்கப்படாத பெண்களின் உடல் உளவியல் பாதிப்புகளும் வேதனைகளும், வெளிநாட்டு பொருளாதராத்தில் தங்கியிருக்கும் நிலை, இறுக்கமடைந்துள்ள ஆணாதிக்க சிந்தனை, வெளிநாடு போகும் கனவு போன்ற எமது சமூகத்தின் உள்ளார்ந்த காரணிகளும், பெண்கள் கல்வியில் சோபிக்க முடியாதற்கான அடிப்படைகளாகும்.

சிங்களப் பிரதேசங்களை பார்த்தீர்களானால், அங்குள்ள சில பெருநகரங்களுக்கு வெளியில் கல்விசார் உட்கட்டமைப்பு பெரிய அளவில் அபிவிருத்தி செய்யப்படவில்லை. அப்பகுதிகளும் இருபது வருடங்களுக்கு மேலான யுத்த பொருளாதாரத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. ஆனால் அப்பகுதிகளில் பெண்களின் உயர்கல்விப் பங்கெடுப்பும், தொழில் ஈடுபாடும் அதிகரித்துள்ளது. பெண்களுக்கான கல்வி, அவர்களை வறுமையிலிருந்து வெளியேற உதவும் ஏணியாக கருதும் நிலை சிங்கள சமூகத்தில் பரந்துபட்ட அளவில் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு உணரும் நிலை, எமது சமூதாயத்திலும் வரவேண்டும். அந்நிலை வரும்போது, பெண்களின் வாழ்வாதாரம் வலுவடைய வாய்ப்புள்ளது. கல்விதான் பெண் விடுதலைக்கான அடித்தளம் என்பது எனது ஆணித்தரமான நம்பிக்கை.

இதை விடுத்தது இரண்டு அல்லது மூன்று பெண்கள் உயர் பதவிக்கு வந்தார்கள் என்பதை பெண் விடுதலையின் அறிகுறியாக காட்ட நினைப்பது அடி முட்டாள்தனம். இவர்களின் பதவிகளை அனைத்து பெண்களின் விடுதலைக்கான முனைப்பாக காட்ட முயல்வதும், நினைப்பதும் கூட ஆணாதிக்கத்தின் வெளிப்பாடுதான்..., அப்படியானால் இலங்கைதான் உலகத்தில் முதல் பெண் பிரதமரை உருவாக்கியது. அதேபோன்று இந்தியா இந்திராகாந்தியை உருவாக்கியது. அதன் அடிப்படையில் குறைந்தது இந்திய, இலங்கைப் பெண்களினது அரசியல் பிரதிநிதித்துவமாவது இந்நாடுகளில் உயர்ந்திருக்க வேண்டுமே? மேற்தட்டு வர்க்கப் பெண்கள் பதவிக்கு வருவது, சமூதாய கட்டுமானங்களையும், கருத்தியலையும் உடைத்து அல்ல. பெண்களுக்கு எதிரான சமூகக் கட்டுமானங்கள் உடையாதவரை, இந்தமாதிரி பெண்கள் பதவிக்கு வருவது வெறும் குறியீட்டு அரசியலே ஒழிய வேறோண்டுமில்லை. இதைவிட மிக முக்கியமானதொரு

விடயம், நான் இங்கு சொல்லவேணும். மேற்படி யாழ்ப்பாணப் பெண்கள் பதவிக்கு வந்தபின்பு யாழ்ப்பாணத்தின் கலாச்சாரம் பாதிக்கப்படுகிறது, விபச்சாரம் நடக்கிறது, கருக்கலைப்பு நடக்கிறது என அறிக்கை விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதில் குறிப்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தரவுகளுடனும், வரைவுகளுடனும் அறிக்கை விடுகிறார். இவர் விடுகின்ற அறிக்கைகளை பார்த்தீர்களானால் இங்கு நடக்கும் அனைத்து சமூக அவலங்களுக்கும், சீரழிவுகளுக்கும் பெண்களே காரணம் என நேரடியாகவும் மறைமுகமாகவும் குறிப்பிட்டிருப்பார். உண்மையில் என்ன நடக்கிறது. முன்பு கிராமங்களுக்கு அழைத்துக் கொண்டுபோய் கைவைத்தியம் செய்து கருக்கலைப்புகள் செய்தார்கள். பணவசதி உள்ளவர்கள் சில ரகசிய வைத்தியர்களிடம் அதனைச் செய்து கொண்டார்கள். யுத்தத்தின் பின்பு, இந்த ரகசியக் கட்டமைப்புகளும் கைவைத்திய முறைகளும் அழிந்துவிட்டது. இப்போ அரசாங்க வைத்தியசாலையில் அல்லது தனியார் மருத்துவமனையில் கருக்கலைப்பு செய்யும் நிலைமை உள்ளது. இதனால் இன்று கருக்கலைப்பு செய்வோர் தொகை பதிவு செய்யப்படுகிறது. இந்த தகவல்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு, இப்போது தான் தமிழ்க் கலாச்சாரம் பாதிக்கப்பட்டது போல பிரச்சாரம் செய்வது என்ன நியாயம்?

இவர்களுக்கு உண்மையிலேயே பெண்கள் முன்னேற்றத்தில் கவனமிருந்தால், பெண்களின் சுயவிருப்பிலான பாலியல் உறவுகொள்ளும் உரிமைக்காக குரல்கொடுக்க வேண்டும். அத்தோடு இவர்களுக்குள்ள பதவிகளை பாவித்து பாலியல் விழிப்புணர்வை சமூகத்தில் உருவாக்க இவர்கள் வழிசெய்ய வேண்டும். இதை விடுத்து தம்மை கலாச்சாரக் கண்ணகிகளாக இவர்கள் காட்டமுனைவது வெறும் அரசியல் விபச்சாரமே..!

**நீங்கள் சொல்வதில் பெரும்பான்மையான விடயத்தில் என்னால் உடன்பட முடியும். ஆனாலும் நீங்கள் இப்போதும் புலி அரசியற் கருத்தியலில் நின்று கதைக்கின்றீர்களோ என்பது போன்ற ஐயம் எனக்குள் எழுகிறது..?**

புலம்பெயர் நாடுகளில் இலங்கை தமிழ் பெண்களை தூற்றுவதும், அவதூறு வெளியிடுவதும் புலிகள் சார்ந்த ஊடகங்கள் தான். குறிப்பாக இளம் பெண்கள் கைத்தொலைபேசிக்காகவும், உடுபுடவைக்காகவும் இராணுவத்துடன் விபச்சாரம் செய்வதாக எழுதுகிறார்கள். முன்னாள் பெண் போராளிகள் மற்றும் வன்னியை சேர்ந்த பெண்கள் இப்படி விபச்சாரத்தில் ஈடுபடுவதாக இவர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். இதற்கான பதிலும், நான் கருக்கலைப்பு சம்பந்தமாக சொன்னது போலத்தான். இன்றுள்ள சமூகச் சூழலில் விபச்சாரம் போன்ற சீரழிவுகளை தவிர்க்கமுடியாது. ஆனால் அதை இப்போதுதான் புதிதாக எம் சமூகத்தில் நடப்பதாகவும், அது அதிகரித்துள்ளதாகவும் சொல்ல முனைவது வெறும் அரசியல் பித்தலாட்டம். அதை புலிகள் செய்தாலென்ன, உங்களுடன் சேர்ந்த பெண்ணியவாதிகள் செய்தாலென்ன. அடிப்படையில் இவ்வாறு கதை பரப்புவது தவறு. பத்துக்கும், பதினையாயிரத்துக்கும் இடையில் சம்பளம் வாங்கும் ஒரு இராணுவத்தினர், மூவாயிரம் - நாலாயிரம் செலவழித்து மொபைல் டெலிபோன் கொடுத்து, தமிழ்ப் பெண்களை வல்லுறவு செய்கிறார்கள் என்பது வெறும் அபத்தம். ஒன்று இரண்டு சந்தர்ப்பங்களில் அவ்வாறு நடந்திருக்கலாம். ஆனால் அச் சம்பவங்களை ஒட்டுமொத்த வடபகுதி இளம் பெண்களை விபச்சாரிகள் என்று சொல்வதற்கு ஆதரமாக பயன்படுத்த முடியாது. இப்படியான பிரச்சாரங்கள் அரசுக்கும் இராணுவத்திற்கும் எதிராக நடத்துவதாக எம்மவர் பலர் நினைத்தாலும், நீண்ட காலப்போக்கில் பாதிக்கப்படப்போவது நமது சமுதாயம் தான் என்பதை நாம் மறுக்க முடியாது.

**இவ்வளவு விபரமாக் கதைக்கும் நீங்கள், நான் கேட்ட ஒரு கேள்விக்கு இன்னும் பதில் சொல்லவில்லை. அதாவது உங்களின் உரையாடலில் மறைந்திருக்கும் புலியரசியல்..?**

உங்கள் கேள்வியில் ஒரு நியாயம் இருக்கு என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நான் ஆரம்பத்தில் சொன்னதுபோல நானும், என்னைப்போன்று ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும், நாம் பட்ட காயத்தை ஆற்றும் முயற்சியிலேயே இன்றும் உள்ளோம். நாம் கடந்த காலத்தை ஆய்வு செய்யும் நிலைக்கு இன்னும் வரவில்லை. வெளிநாட்டில் உள்ள உங்களைப் போன்றவர்கள் (நீங்கள்) வேண்டுமானால் சாப்பிட்ட சாப்பாடு சமிபாடடைய புளிச்சல் ஏவறையான முடிவுகளுக்கு வரலாம். அது உங்கள் தெரிவு. அதை எம்மிடமிருந்து எதிர்பார்ப்பது வெறும் அறிவு மேலாதிக்க வன்முறை. இன்றுள்ள ஸ்தம்பிதநிலை மிக விரைவில் மாறும்.., அப்போ எதிர்காலத்திற்கான போராட்டம் ஏதோ.., ஒருவகையில் அது தொடரும் என்பது எனது நம்பிக்கை.

நம்பிக்கை என்ற வார்த்தையை ஜனனி சொல்லி முடித்த பின்பு, நான் கேட்கத் திட்டமிட்டிருந்த கேள்விகள் எதனையும் கேட்க முடியவில்லை. நேரடியாக என் சார்ந்த அரசியல் பற்றி அவர் விமர்சித்தாலும், அதற்கு எதிராக பதில் சொல்ல எனக்கு நாவும் எழவில்லை, அதற்கு மனமும் விடவில்லை.

- மா.நீனா.



# ஈரோ நாணய நாடுகளின் நெருக்கடி முதல் தொடரும் எகிப்திய நெருக்கடி வரை

இதை நாம் தெரிந்து கொள்வது, புரிந்துகொள்வது அவசியம். இதை ஏதோ நெருக்கடி, போராட்டம் என்று மட்டும் புரிந்துகொள்வது அறிவல்ல. என்னைப்போல், உன்னைப்போல் உள்ள மக்கள், அங்கு எதற்காக போராடுகின்றனர்? நாளை இதேபோல், உனக்காக நீ போராடும் சூழல் கூட ஏற்படலாம். இந்த உலகில் என்னதான் நடக்கின்றது? போராடும் மக்கள் வெற்றி பெறுகின்றனரா? வெற்றி பெற முடியவில்லை என்றால், என்னதான் காரணம்? சக மனிதனுக்கு நடப்பதை தெரிந்துகொண்டு, அவனுக்காக நாம் எம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இன்று உலகில் மக்கள் ஒரு பக்கமாக அணிதிரள, ஆளும் வர்க்கங்கள் மறுதரப்பாக நிற்கின்றனர். ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான உள்ளார்ந்த நெருக்கடிகள், ஆளும் வர்க்கத்துக்கும் மக்களுக்குமானதாக மாறுகின்றது. இன்று இது உலகம் தளுவியதாக மாறி இருக்கின்றது. அலை அலையாக, ஒன்று மாறி ஒன்றாக அங்குமிங்குமாக வெளிப்படுகின்றது.

இந்த வகையில் முதலில் நாம் கிறிஸ் நெருக்கடி என்ன என்பதைப் தெரிந்து கொள்வோம். கடனை மீள திருப்பிக் கொடுக்கும் தவணை உட்பட கடனுக்கான வட்டியை கொடுக்க முடியாது போயுள்ள நிலைதான் கிறிஸ் நெருக்கடி. அதாவது இதை தொடர்ந்து கொடுப்பதற்காக, புதிய கடனை வாங்க முடியாது போய் இருக்கின்றது. இதுதான் நெருக்கடி. அப்படியாயின் யாருக்கு நெருக்கடி? வட்டிக்குப் பணம் கொடுத்தவனுக்கு நெருக்கடி, இந்த நெருக்கடியை உருவாக்கிய உலக நிதிமூலதனத்துக்கு தான் நெருக்கடி. வட்டிகாரனுக்கு தொடர்ந்து வட்டியை கொடுக்க, மக்களை சூறையாடுவதைத்தான் உலக ஆளும் வர்க்கங்கள் தேர்ந்தெடுக்கின்றது. இதனால் மக்கள் போராடுகின்றனர். அமெரிக்கா உட்பட உலகமயமாக்கலை நடைமுறைப்படுத்தும் எல்லா நாடுகளும் கடன் மற்றும் வட்டி கொடுப்பனவை அடிப்படையாக கொண்ட, வரவு செலவு திட்டத்தைத்தான் தயாரிக்கின்றன. நிதிமூலதனத்துக்கு வட்டி கொடுக்கும் வண்ணம், உலகெங்கும் திணித்த பொருளாதார கொள்கை தான் உலகமயமாக்கலின் ஒரு அங்கம். அதாவது எந்த உழைப்பிலும் ஈடுபடாத நிதிமூலதனத்துக்கு வட்டி மூலம் கொழுக்க வைக்கும் தேசிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுதான் உலகமே இன்று இயங்குகின்றது. நாட்டின் வரவில் பெரும்பகுதி, கடன் மற்றும் வட்டி கொடுப்பனவாக கொடுப்பதே தேசிய கொள்கையாக மாறிவிட்டது. தேசிய வரவில் கடன் வாங்குவது, செலவில் அதைவிட கூறுதலாக கொடுப்பதும் உலகெங்கும் இன்று அமுல்படுத்தப்படுகின்றது. இது உலகமயமாக்கல்கள் மூலம், உலகம் தளுவியளவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதாவது ஒவ்வொரு நாடும் கட்டாயம் கடன் வாங்கவும், அதை செலவு செய்யவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இதன் மூலம் கடனுக்கு வட்டி அறவீடும் கொள்கை அமுல்படுத்தப்பட்டது.

1980களின் பின்னான உலகில், பெருமளவில் நிதிமூலதனம் மக்கள் மீது சுமத்தியது கொடுமையாகும். வட்டி அறவிடுவதை மையப்படுத்திய நிதிக்கொள்கைகள் உலக நாடுகள் மேல் திணிக்கப்பட்டது. இன்று அநேக நாடுகள் தம் வரவில், 50 சதவீதத்தை கடன் மற்றும் வட்டிக்காக கொடுக்கின்றனர். இதுதான் இன்றைய உலகம். நாடுகளின் தேசிய பொருளாதாரக் கொள்கை என்பது, மக்களிடம் பறித்து அதை வட்டியாக கொடுப்பதுதான். இன்று இதை கொடுக்க முடியாத அரசுகள், தேசிய சொத்துகளை விற்கின்றனர். அரசு ஊழியர்களை வேலையை விட்டு நீக்குகின்றனர். அரச ஊழியர்களுக்கு சம்பளத்தை குறைக்கின்றனர். மக்களின் உழைப்பை, அவர்களுக்கு மீளப்பகிர்ந்து வழங்க கொடுக்கும் சமூகநிதிகளை (மருத்துவம், ஓய்வூதியம், வேலை இழப்பு நிதியம் என்று பல) அந்த மக்களிடம் மீளக் கொடுப்பதை படிப்படியாக குறைத்து அதை வட்டிக்காரனுக்கு கொடுக்கின்றனர். புதிய வரிகளை புகுத்துகின்றனர். இப்படி பல. இப்படி திரட்டப்படும் பணம், கடன் மற்றும் வட்டி கொடுப்பனவாக கொடுக்கப்படுகின்றது. இப்படி கொடுக்கும் வரை, அதை நெருக்கடியாக கூறுவது கிடையாது. இதை கொடுக்க முடியாத போது நெருக்கடியாகின்றது. இதுதான் நெருக்கடியின் சாரம்சம். மக்கள் தமக்காக வழமைபோல் உழைக்கின்ற கூலியில் இருந்து புடுங்கி, அதை தனக்காக, அதாவது வட்டிக்காரனுக்கு கொடுப்பதைத்தான் நெருக்கடியின் மீட்சியாக முன்வைக்கின்றது இந்த உலகை ஆளும் வர்க்கம். இங்கு வட்டிக்காரனும் ஆளும் வர்க்கமும் வேறு அல்ல.

இப்படி வரவில் இருந்து பெரும் பகுதியை கடன் மற்றும் வட்டியாக கொடுப்பது தொடர முடியாது. அரசு என்பது அடக்கியொடுக்கும் இயந்திரமாக குறுகி வருகின்றது. அதாவது வருமானம் தரக்கூடிய அனைத்து துறைகளையும், வட்டியை கொடுக்கும் வண்ணம் ஒவ்வொன்றாக விற்றுத் தீர்த்த பின் எஞ்சுவது அடக்குமுறை இயந்திரம் மட்டும் தான். தொடர்ந்து விற்று கொடுப்பதற்கும், வருமானம் மூலம் கொடுப்பதற்கு என எதுவும் மிஞ்சி இருக்காது. வரி மூலமான வரவு குறையும் அதேநேரம், உற்பத்தி மூலம் சுரண்டும் மூலதனம் மேலும் அதிகமாகச் சுரண்ட மலிவான கூலியை நோக்கி ஓட, வட்டிக் கொடுப்பனவு தொடர் நெருக்கடியாகி முற்றுகின்றது. இன்று கடன் மற்றும் வட்டி கொடுக்க முடியாது போக, உலகமயமாக்கலில் வெடிப்பு ஏற்படுகின்றது. அது நிதிமூலதனத்தின் நெருக்கடியாக மாறுகின்றது. மறுதளத்தில் இதன் சுமையை மக்கள் தொடர்ந்து தங்கள் இழப்புகள் மூலம் ஈடுகட்ட முடியாது போக, அரசுக்கும் மூலதனத்துக்கும் எதிரான மக்கள் போராட்டமாக மாறுகின்றது.

இதன் அரசியல் சாரம் என்ன? கடன் மற்றும் வட்டி கொடுப்பனவை நிறுத்தும் வரை, அதை நோக்கி மக்கள் விழிப்படைந்து போராடுவது கூர்மையாகி இருக்கின்றது. இதற்கான தீர்வு என்ன? மக்கள் தம் உழைப்பை தமதாக்கும் போராட்டமாகும். இது இன்று படிப்படியாக அதை நோக்கி வளர்ச்சியடைகின்றது. இன்று இதை வழி நடத்தக் கூடிய பாட்டாளிவர்க்க கட்சியை மக்கள் தோன்றுவிக்காத இன்றைய நிலையில், இன்று வெவ்வேறு பரிணாமம் பெற்று வெளிப்படுகின்றது. அதன் தோல்விகள் இதற்குள் தான் அரங்கேறுகின்றது. தோல்விகளிலிருந்து கற்றுக்கொண்டு மீளப் போராடுவதும், அரசியல் மயமாவதும் மிக வேகமாக நடக்கின்றது.




இதே எல்லைக்குள் தான் எகிப்திய போராட்டம் கூட. மீண்டும் எகிப்திய போராட்டம் என்பது சர்வாதிகார ஆட்சி வடிவத்தை நீக்குவதாக வெளிப்பட்டாலும், சாராம்சத்தில் இந்த அமைப்புக்கு எதிரான போராட்டம் தான். ஆனால் அதை தெளிவுபடுத்தி வழிநடத்தக் கூடிய பாட்டாளி வர்க்கக் கட்சி இல்லை என்ற உண்மைதான், மக்களை இலக்கின்றி எதிரி பற்றிய தெளிவின்றி குண்டுச் சட்டிக்குள் போராட வைக்கின்றது. உலகில் ஆளும் வடிவங்கள் அனைத்தும் வர்க்க சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. அவை முதலாளித்துவ ஜனநாயக பாராளுமன்ற வடிவங்கள் மூலம் அல்லது இராணுவ ஆட்சி ஊடாக சுரண்டும் வர்க்க சர்வாதிகாரத்தையே அடிப்படையாகக் கொண்டது. மக்களை இதற்குள் சிறை வைத்துப் பாதுகாக்கும் வடிவங்கள் பண்பு ரீதியான வேறுபாட்டைக் கொண்ட போதும் அதன் நோக்கம் ஒன்று தான். மூலதனத்தின் நலன் தான் தேர்தல் ஜனநாயகம் முதல் இராணுவ ஆட்சி வரையான அதன் பொதுக் குணாம்சம். இதை அமுல்படுத்தும் பொதுநடைமுறைக்குள் உள்ள கொள்கைரீதியான பண்புரீதியான முரண்பாடுகள், இதற்குள் மக்களை பிரித்து போராடவிடுவதன் மூலம் மக்களை சுரண்டும் மூலதன ஆட்சியை தொடர்ந்து வேறு வடிவில் திணிக்கின்றனர்.

அரபுலக எழுச்சிக்கு முன், தேர்தல் ஜனநாயகத்தை கொண்டிராத அங்கிருந்த அனைத்து ஆட்சியையும் மேற்கு ஆதரித்து அதைத் தாங்கி நின்றன. இன்னும் தேர்தல் ஜனநாயகத்தை முன்னெடுக்காத நாடுகளை, அது தொடர்ந்து பாதுகாக்கின்றது. இந்த உண்மையின் பின்னணியில், அரசு எழுச்சியை தனதாக்கிய உண்மையையும் காணவேணடும். மக்கள் எழுச்சியை வெறும் தேர்தல் ஜனநாயகமாக மாற்றியதன் மூலம், மீண்டும் மேற்கு தன்னை அங்கு தக்கவைத்துக் கொண்டது. இந்த நாடுகள் மேற்கின் நிதி மற்றும் உற்பத்தி மூலதனத்தை பெருக்கி வளப்படுத்துபவனாக தொடர்ந்து உள்ளது. இதில் மாற்றம் நிகழவில்லை. இந்த நாடுகள் மேல் திணிக்கப்பட்ட கடன் மற்றும் வட்டி அறவீடு என்று, உலகமயமாக்கலின் மூலமான ஆட்சி வடிவங்கள் தொடர வெறும் வடிவ மாற்றங்கள் தான் நிகழ்ந்தன.

இப்படி தேர்தல் ஜனநாயகம் மூலமாக போராட்டத்தை தற்காலிமாக வடிய வைக்க முடிகின்றது. மக்களின் போராட்டம் இதில் இருந்து உருவானதல்ல. இதனால் மீண்டும் போராட எழுவதை தேர்தல் ஜனநாயகத்தால் தடுக்க முடியாது. உலகமயமாதல் கட்டமைப்பில் ஏற்படும் தொடர் வெடிப்புகளை அடைப்பதன் மூலம், மக்களின் போராட்டத்தின் பின்னுள்ள அரசியல் பொருளாதார காரணங்களை இல்லாதாக்க முடியாது. மூலதனத்தின் நெருக்கடியை தொடர்ந்தும் மக்கள் மேல் சுமத்துவதால், மக்கள் அதற்கு எதிராக போராட வைக்கின்றது. மூலதனத்தையும் அதன் விரிவாக்கக் கொள்கையையும் பேணும் இந்த சமூக பொருளாதார அமைப்பு திவாலாகிவிட்டது. அதைப் பூசிமெழுகமுனையும் ஆளும் வர்க்கங்களின் வார்த்தைகளைக் கடந்து, மக்கள் தம்மை தாமே இதற்கு எதிராக தன்னியல்பாக அணிதிரட்டுகின்றனர். இது தன்னைத் தான் ஆளும் அதிகாரத்தை நோக்கிய போராட்டமாக அரசியல்மயமாகும் போது, அதை தடுத்து நிறுத்த எந்தச் சக்தியாலும் முடியாது.


- பீ.இரயாகரன்.



# லிபியாவின் அதிபர் கடாபி ஓர் ஏகாதிபத்திய எதிர்ப்பாளனா?

லிபியா என்ற எண்ணெய் வளம் கொண்ட நாடொன்றின் ஆட்சியை, இராணுவ சதிப்புரட்சி மூலம் கைப்பற்றி, நாற்பது ஆண்டுகளுக்கு மேல் அந்நாட்டின் அதிபராக தொடர்ந்து நீடித்த கடாபியின் மரணம், தெருவில் கைவிடப்பட்ட ஒரு அனாதையின் மரணமாக நிகழ்ந்தேறியது.

அகண்ட ஆபிரிக்காவினை நிறுவவேண்டும் என பெருங்கனவு கொண்ட கடாபி, ஆபிரிக்க மக்களின் விடுதலைக்கு எப்போதும் லிபியா துணையிருக்கும், பாலஸ்தீனத்தின் உருவாக்கத்துக்கு பக்கபலமாயிருக்கும் என அறிவித்துக் கொண்டார். லிபியாவின் வளங்கள் முழுவதுக்கும் அதிபதியாய் இருந்த இவர், தனது மரணத்தின் பின்னாலும் இம்சிக்கப்படும் அளவுக்கு, அவரது வெற்றுடல் ஈக்கள் மொய்க்கும் இறைச்சிக்கடையின் வெற்றுத்தரையில் கிடத்தப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்ட ஓர் கேவல நிலைக்கு சரிந்து போனது எவ்வாறு?
அவரது உடல் புதைக்கப்பட்ட இடம் கூட, மிக இரகசியமாக வைக்கப்படும் அளவுக்கு அவ்விட நிலைமைகள் மிக மோசமாகக் கவிழ்ந்து போனதன் காரணங்கள் தான் என்ன? லிபிய மக்களை அந்த எல்லைவரை இழுத்துச் சென்றது எது?




அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியங்களோடு இணைந்து கொண்டு, நேட்டோப் படைகளின் இராணுவ தாக்குதல்களின் பின்னால் அணிதிரண்ட லிபிய அந்நிய கூலிப்படைக் கும்பலுக்குப் பின்னால், மக்களின் கடாபி எதிர்ப்பு என்பது, இங்கு மேற்குலக நன்மைகளுக்காக அறுவடை செய்யப்பட்டுள்ளது.
கடாபிக்கு எதிரான மக்களின் கோபங்கள், நாடுதழுவிய அளவில் பிரமாண்டமாக இருந்தநிலை எல்லாவற்றையும், இன்று எண்ணெய்க்காக அலையும் இராட்சதப் பேய்கள் லிபியாவின் எண்ணெய் வளத்தின் மீது தமது முழுக்கட்டுப்பாடுகளையும் நிறுவுவதற்கு ஒரு போரின் காரணங்களாக கூறி போரை நடத்தி முடித்திருக்கின்றன. இவ்வாறு இங்கு குறிப்பிடுகிறபோது, லிபிய நாட்டின் எண்ணெய் வளங்கள் தேசிய வளமாக மட்டுமே இருந்ததென்பது கருத்தாகாது. எண்ணெய் வளங்கள் ஒப்பந்தங்களினூடு கடாபியினால் இவர்களுக்கு தாரைவார்க்கப்பட்டிருந்தது.
எண்ணெய் வளத்தின் மீது கட்டுப்பாடற்ற தனிக்கொள்ளையை மேற்கொள்வதற்கு, கடாபியின் மேலான மக்களின் கோபத்தின் சாக்கில் "மனித உரிமைப் போர் தொடுத்தது நேட்டோப் படைகள், ஐ.நா. என்ற பொம்மையின் இரட்சிப்புடன். போர்க்குற்றம் பற்றி பேசுகின்ற நாங்கள், அக்குற்றங்களை முறையிடத் தெரிவுசெய்யும் நாடுகளின் ஏவற் கைக்கூலிப் படையினரின் கரங்களாலேயே, மிகவும் பகிரங்கமாகவும் தெருநாய் போலவும் கடாபி என்ற மனிதன் மீது, போர்க்குற்றம் இழைக்கப்பட்டதை பார்க்கின்றோம். ஏகாதிபத்திய கழுகுகளின் நலன்களுக்கு முன்னால், போர்க்குற்றம் பற்றியெல்லாம் பேசமுடியாது. அவர்களுக்கு தேவையானது எதுவோ அதற்கமைவாகவே போர்க்குற்றம், மனித உரிமைகள் எல்லாம் தூக்கப்படும் அல்லது இறக்கப்படும். ஏன் ஒரு நாட்டினது இறைமைகள் கூட, காலில் போட்டு மிதிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு யுத்தங்கள் - அழிவுகள் என்பன மக்கள் மேல் ஏவப்படும்.

## கடாபி செய்தது என்ன? மக்களின் வெறுப்பு எரிமலையாக திரண்டெழ, கடாபி காரணமில்லையா? கடாபி ஏகாதிபத்தியங்களைச் சார்ந்தியங்கவில்லையா?

சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தை சார்ந்து நின்ற கடாபி, மக்களின் புரட்சியால் உருவாக்கப்படாத தனிநபர் ஆட்சிக் கவிழ்ப்பை நடாத்தி, மக்களால் நிர்வகிக்கப்படாத தனது சர்வாதிகார ஆட்சியினை பல சமூகநலச் சலுகைகள் மூலமும், தான் ஒரு சர்வதேச விடுதலை அமைப்புக்களின் தோழன் என்ற கோசங்களின் மூலமும் ஏற்படுத்திக்

கொண்ட மாயைகளால், ஆட்சியை பல வருடங்களாக தனது பிடிக்குள் தக்க வைத்துக் கொண்டவர். இரண்டு முகாம்களாக இருந்த ஏகாதிபத்திய சக்திகள், சோவியத் ரசியாவின் சரிவின் பின்னர், அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்தியங்களின் கூட்டு என்ற ஒரு தனி முகாமாக மாறிய பின்னர், உலக ஒழுங்குகள் அமெரிக்க மேற்குலக நிகழ்ச்சிநிரலின் பிடிக்குள் வலிந்து வீழ வைக்கப்பட்டன. வெறும் சந்தர்ப்பவாதக் கோசங்களின் பின்னால், தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ள முயன்றவர் தான் கடாபி என்பது, மேற்குலகங்களின் நண்பனாய் அவர் வலம்வரத் தொடங்கியதிலிருந்து வெளிச்சம்.

1. கடாபி, அமெரிக்க - மேற்குலக ஏகாதிபத்தியங்களுடன் கரம் கோர்க்கின்றார்.
2. புதிய உறவுகளையும் ஒப்பந்தங்களையும் தலை கீழான முறையில் ஏற்படுத்திக் கொள்கின்றார்.
3. எண்ணெய் வளங்கள் கைமாறுகின்றன. தான் எதிர்த்து நின்றதாக பிரகடனம் செய்த அத்தனை ஏகாதிபத்திய அதிகாரங்களுடனும் கடாபி கைகுலுக்கிக் கொள்கிறார். ஒரு கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதியென தன்னை பகிரங்கமாக வெளிப்படுத்திக் கொள்கிறார். தனது தேசியம், ஏகாதிபத்திய எதிர்ப்பு எல்லாமே சந்தர்ப்பவாதம் தான் என்பதை வெளிப்படுத்துகிறார்.

தான் வகுக்கும் இவ்வாறான கொள்கை மாற்றங்களிலிருந்து வெளிப்படும் அரசியல் சமூகப் பொருளாதார சலசலப்புகள் கொந்தளிப்புகளிலிருந்து தனது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்கு என்ன வழி? ஆட்சி அதிகாரத்திலிருப்பவர்கள் மக்கள் மேல் ஏவுவது கொடூரமான அடக்குமுறையும் கண்காணிப்பும் தான் என்பது தெரிந்ததொன்று தானே.

இவரது ஏகாதிபத்திய சார்புநிலை, அமெரிக்க ஆக்கிரமிப்புகளுக்கு எதிரான விடுதலை அமைப்புக்களின் நண்பன், தேசவிடுதலை இயக்கங்களின் நண்பன் (குறித்துக் கொள்ள- தனிநபராகிய கடாபியே தவிர, லிபிய மக்கள் இவ்வாறு அணிதிரட்டப்படவில்லை. அதற்கான வாய்ப்பு ஒரு இராணுவ சதிப் புரட்சியால் எட்டப்பட்ட ஆணை யினால் முடியவும் முடியாது) என்ற நிலையிலிருந்து அமெரிக்காவால் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் கைதுசெய்யப்பட்ட நபர்களை, சித்திரவதை செய்து விசாரிக்கும் சிறைக்கூடங்களை லிபியாவில் நிறுவிக் கொள்ள ஓடோடி முன்வருகின்றார்



கடாபி. தன்னுடைய மக்களின் கொந்தளிப்புக்களையும் எதிர்ப்புக்களையும் அதே வழியில் அடக்கியொடுக்க, பயங்கரங்களை ஏவி விடும் கடாபியின் மீது, மக்களின் கோபம் திரண்டு எரிமலையாகிறது.



ஏகாதிபத்தியங்களோடு கைகுலுக்கிக் கொண்ட கடாபி, எவ்வாறு தனது மக்களுக்கு நியாயமானவராக தேசிய வளங்களின் காவலராக தொடர்ந்தும் தன்னை வேசமிட்டுக் காட்டிக் கொள்ளமுடியும்? தேசியவளங்கள் மக்களின் வளமாக, கடாபியாலோ அவரது ஆட்சி அதிகாரத்தினாலோ கணிக்கப்படவில்லை. அவை யாவும் கடாபி என்ற அதிகாரம் மிக்க ஒரு தனிமனிதனின் கைகளிலேயே குவிந்திருந்தது. ஏற்கனவே உள்ளூர இருந்த ஒப்பந்தங்கள் மூலம் ஏகாதிபத்தியங்கள் உறிஞ்சியது போக அவர்களது குடும்பச் செல்வச் செழிப்புக்கும் ஆடம்பரங்களுக்கும் அவை இறைக்கப்பட்டது போக, மிஞ்சிய எலும்புகள் மக்களுக்கென கிள்ளி வீசப்பட்டன.

தனது, ஆபிரிக்க நண்பன் என்ற வேசத்தைக் கூட, அவரால் சரியாகப் போட முடியவில்லை. ஆபிரிக்கர்களின் அடிமை நிலையை தக்கவைத்துக் கொள்ளும் அவரது நடவடிக்கைகளுக்கு, அவரது சொந்த பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்ட படையணியில் சேர்க்கப்பட்டிருந்த ஆபிரிக்க பெண் படையணியினரை வைத்தே புரிந்து கொள்ள முடியும். நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டிருந்த மேற்குலக ஏகாதிபத்தியங்களுக்கு தகுந்த தருணங்கள் அரபுலக எழுச்சி என்ற வகையில் கைகூடியது. லிபிய மக்களின் வெறுப்பு விளிம்பு வரை பெருகும் வரை கொதி நிலை அடையும் வரை, தங்களுக்கான ஏவல் படைகளை ஆயுதம் தரிக்கப்பண்ணி, தயாராக்கி காவல் இருந்த நேட்டோப் படைகள் ஏனைய நாடுகளின் வளங்களின் மீது ஆறாப்பசி கொண்ட கழுகு களாய், தமது ஊதுகுழல் ஊடகங்கள், ஐ.நா. அங்கீகாரம் எல்லாவற்றையும் முடுக்கிவிட்டு, லிபியா மீது நிழல் போர் தொடுத்தார்கள். இறுதியில் கடாபி தொழுத பாதங்கள், குலுக்கிக் கொண்ட கைகள், மேன்மை பொருந்திய இராஜதந்திர உறவுகள் எல்லாம் களிப்பில் மிதக்க, கடாபியின் உடல் சரிந்தது.

லிபியாவின் வளங்கள் ஏகாதிபத்தியங்களின் கைகளில் முழுதுமாக வீழ்ந்தது.

- சிறி.

# ஜனதா விமுக்திப் பெரமுன பேரினவாதிகளின் உடைவும் பிளவும் குறித்து...

இலங்கையில் வரலாற்றில் சிங்கள இனவாத ஆட்சியாளர்கள் சுதந்திரம் அடைந்த காலம் முதல், தமிழ் மக்களை இனவாதக் கண்ணோடு அணுகி வந்துள்ளனர். இது இன ஒடுக்குமுறை யுத்தமாக மாறிய பினனர் கைது செய்வது, கொலை செய்வது, இனக் கலவரங்களை தூண்டி விடுவது, இனப்படுகொலை செய்வதும் சர்வ சாதரணமாக நடந்து கொண்டிருந்த அண்மைய காலங்களில் ஜே.வி.பி ஆட்சியிலிருந்த கட்சிகளுடன் கூடி நின்றது மட்டுமல்லாது இனவாதத்தினை தனது அரசியல் லாபத்திற்க்காக பயன்படுத்தியும் வந்துள்ளது. ஜே.வி.பியின் கூட்டோடு ஆட்சியைக் கைப்பற்றிய மகிந்தாவின் ஆட்சிக்காலத்தில் தான், தமிழ் மக்கள் வகைதொகை இன்றி கைது செய்யப்பட்டனர். நீதி விசாரணை இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டதுடன், பெருமெடுப்பில் வெள்ளை வாகனங்களில் கடத்திச் சென்றனர். அத்துடன் காணாமல் போவதும், கொலை செய்யப்பட்டு வீதியோரங்களிலும், பற்றைக் காடுகளிலும் வீசப்பட்டனர். இதன் போதெல்லாம் இந்த ஜே.வி.பியினர் மகிந்த அரசுடன் கூடியிருந்து, தமிழ் இனத்திற்கு எதிராக மகிந்தாவை விட மோசமான இனவாதத்தினை முன்வைத்து சந்தர்ப்பவாத அரசியல் செய்து கொண்டிருந்தது. செங்கொடிகளுடனும் சிகப்புச் சட்டைகள் தொப்பிகளுடனும் தோன்றி மக்கள் மத்தியில் தம்மை இடதுசாரிகளாகக் காட்டி வந்த ஜே.வி.பி.யினர் விரைவாகவே தமது சுயரூபம் செந்நிறம் பூசிய பேரி-னவாதிகள் என்பதை நிரூபித்துக் கொண்டனர். தற்போதைய ஜனாதிபதி தயாரித்த மகிந்த சிந்தனையின் பங்காளி தாங்களே என்றும் ஜே.வி.பி. பீத்திக் கொண்டது.

மகிந்தா முதுகில் குந்தி இருந்த ஜே.வி.பியினை இரண்டாக பிளந்து உதைத்த பின்னர்தான் தமிழ் மக்களின் மேல் கரிசனை கொண்டுள்ளனர். ஆனால் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்பதை இன்றும் ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் சந்தர்ப்பவாத அரசியல்தான் தொடர்கின்றது. அண்மைக் காலங்களில் யாழில் இவர்கள் நடத்திய நாம் இலங்கையர் கூத்து, இவர்களின் சந்தர்ப்பவாத அரசியலிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். இத்தகைய சந்தர்ப்பவாத பேரினவாதவெறி கொண்ட ஜே.வி.பி. அமைப்பு தற்பொழுது பெரும் உடைவுக்கும் பிளவுக்கும் உள்ளாகி புதிய அமைப்பு ஒன்று உருவாக்கம் பெறத்தொடங்கியுள்ளது. தென்னிலங்கை அரசியல் களத்தில் ஒரு நேர்மையான தொழிலாளர் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கான இடதுசாரி அரசியல் கட்சிக்கான பெரும் வெற்றிடம் உள்ள சூழலில் புதிய அமைப்பானது இலங்கையின் சமூக அமைப்பை உரியவாறு கணிப்பீடு செய்து யதார்த்தத்தின் கூறுகளை புரிந்து கொண்டு ஏகாதிபத்தியத்தையும் மறு கொலனியாக்க செயற்பாட்டையும் எதிர்ப்பதற்கு உரிய அடிப்படையான சரியான அரசியல் கொள்கைகளை முன்வைக்க வேண்டும். மேலும் விரிசலாக்கி ஒடுக்குமுறையாக வளர்க்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினைக்குத் தகுந்த அரசியல் தீர்வைக் காண சிங்கள மக்கள் மத்தியில் தேசிய இனப்பிரச்சினையின் இன வர்க்க தார்ப்பரியங்கள் பற்றிய விரிவான அரசியல் அறிவூட்டல்களை செய்ய வேண்டியதும் அவசியமாகும். குறிப்பாக இலங்கை மொழிரீதியாகவும் கலாச்சாரரீதியாகவும் பிரதேசரீதியாகவும் பல வேறு தேசிய இனங்களை கொண்ட ஒரு தேசம் என்ற அடிப்படையில் தேசிய இனங்களிற்கு சுயநிர்ணய உண்டு என்பதனை பகிரங்கமாக அங்கீகரித்து புதிய அமைப்பு தனது வேலைத்திட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதுவே இலங்கையில் இனங்களிற்கு இடையேயான நீந்து போயுள்ள நம்பிக்கையினை மீள கட்டியெழுப்புவதுடன் இந்த மக்கள்விரோத அரசியல் கட்டமைப்பினை கட்டிக்காக்கும் அமைப்பினையும் அதன் காவலர்களையும் துடைத்தெறியும். இதனை இந்த பிளவுண்ட அமைப்பினர் கருத்தில் கொண்டு பணியாற்றுவார்களா என்பதனை நாம் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

### ஜே.வி.பியின் தோற்றம்

ஜே.வி.பியின் ஸ்தாபகராகவும் தலைவராகவும் இருந்து சிறிலங்கா அரசினால் போலி மோதலில் படுகொலை செய்யப்பட்ட மறைந்த றோகண விஜேயவீர அன்றைய சோவியத் யூனியனில் மொஸ்கோ லும்பும்பா பல்கலைக்கழக கல்வியை இடையில் கைவிட்டு இலங்கை திரும்பி என்.சண்முகதாசன் தலைமையில் புரட்சிகர மார்க்சிஸ லெனினிஸக் கட்சியின் இளைஞர் அணியில் 1964இல் இணைந்து அக்கட்சியின் இளைஞர் அணியில் முக்கியமான முன்னணி உறுப்பினராக செயல்பட்டார். அதன் மூலம் தென்னிலங்கையில் அணிதிரண்ட சிங்களப் புரட்சிகர (முற்போக்கு) இளைஞர் அணிகளின் தொடர்புகளை விஜயவீர தன்னை மையப்படுத்தி வலுப்படுத்திக் கொண்டார். ஆரம்பத்தில் இருந்தே விஜேயவீரவுக்கு இனவாதக் கண்ணோட்டம் படிந்திருந்தது. பெரும்பான்மை சிங்கள மக்களை கொண்ட இலங்கையில் ஒரு தமிழர் புரட்சிகர இயக்கத்திற்கு தலைமைதாங்க முடியாது என்பதும் மலையகத் தமிழ் மக்கள் இந்திய விஸ்தரிப்புவாதத்தின் கைக் கருவிகளாகவே செயற்படுபவர்கள் என்பதும் அவரின் பிரதான கருத்துக்களாக இருந்தன. புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து கொண்டே அதன் கொள்கைக்கு எதிராக 1966 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான கூட்டு முன்னணியினர் நடாத்திய இனவாத வேலை நிறுத்தத்திலும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்திலும் விஜேவீர கலந்து கொண்டார். டட்லி செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து இடம்பெற்ற மேற்படி ஊர்வலத்தைப் புரட்சிகர

கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தொழிற்சங்கங்களும் எதிர்த்து நிராகரித்திருந்தன. ஆனால், விஜேவீர கட்சி முடிவுக்கு எதிராக அதில் கலந்து கொண்டிருந்தார். அதனால் அவர் கட்சியில் இருந்து விசாரணை மூலம் நீக்கப்பட்டார். இதன் பின்னர் ஜனதா விமுக்திப் பெரமுன என்றழைக்கப்படும் ஜே.வி.பி.யினை ஸ்தாபித்து பொருளாதார நெருக்கடிகள், வேலையின்மை மற்றும் சமூகநீதி மறுப்புகளால் பாதிக்கப்பட்ட சிங்கள இளம் தலைமுறையினரை இனவாதத்தினை அடிப்படையாகக் கொண்ட "ஐந்து வகுப்புக்கள்" மூலம் அணிதிரட்டி நாட்டு வெடிகுண்டுகளையும் கட்டுத் துவக்குகளையும் நம்பி மக்களில் இருந்து அந்நியப்பட்ட ஆயுதக் கிளர்ச்சி ஒன்றிற்கான தயாரிப்பில் ஈடுபட்டதுடன் தான் செஞ்சட்டையும் சிவப்பு நட்சத்திரம் பதித்த சிகப்புத் தொப்பியும் அணிந்து சேகுவேரா போன்ற புரட்சிக்காரன் தோற்றத்திலும் வெளிக்காட்டிக் கொண்டார். ஆனால் துரதிஸ்டவசமாக ஏப்பிரல் 1971 கிளர்ச்சிக்கு இரு மாதங்களிற்கு முன்னர் அம்பாறை காட்டுப் பிரதேசத்தில் ஏனைய முக்கிய தலைவர்களுடனான சந்திப்பின் போது கைது செய்யப்பட்ட இவர் முதலில் மட்டக்களப்பு சிறையிலும் பின்னர் யாழ்ப்பாண சிறைச்சாலையிலும் அடைத்து வைக்கப்பட்டார்.



1971 ஏப்பிரல் 5ம் திகதி ஆயுத நடவடிக்கையினை புரட்சி என நம்பி பல ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் ஈடுபட்டனர். கிளர்ச்சி இந்தியப் படைகளின் துணையுடன் சிறிமாவோ தலைமையிலான ஐக்கிய முன்னணி ஆட்சியால் கொடூரமாக ஒடுக்கப்பட்டது. சுமார் இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட சிங்கள இளைஞர், யுவதிகள் மற்றும் ஆதரவான மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர். பல தலைவர்கள் தொண்டர்கள் சிறைகளில் அடைக்கப்பட்டனர். அவர்களில் பத்துப் பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. விஜேவீர இதற்குள் அடங்கியிருக்கவில்லை. ஜே.வி.பி. கடும் அடக்குமுறையின் கீழ் நசுக்கப்பட்டது. 1977 இல் பதவிக்கு வந்த ஜே.ஆர். அரசு தமது அரசியல் லாபங்களிற்காக வீஜேவீரவை சிறையில் இருந்து விடுவித்தது. இதனைத் தொடர்ந்து ஆயுதப் போராட்டப் பாதையைக் கைவிட்டு பாராளுமன்றப் பாதைக்கு வந்ததாகக் கூறிக் கொண்ட விஜேவீர ஜனாதிபதித் தேர்தலிலும் பங்கு கொண்டு அதில் தோல்வியும் கண்டார்.

இதன் பினனர் தமது முதலாவது ஆயுத எழுச்சியின் தோல்வி குறித்த எத்தகைய விமர்சனமுமற்று மீண்டும் ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்குத் தயாரிப்புச் செய்த ஜே.வி.பி. மீண்டும் பொருளாதார நெருக்கடிகள், வேலையின்மை மற்றும் சமூகநீதி மறுப்புகளால் பாதிக்கப்பட்ட சிங்கள இளம் தலைமுறையினரை இந்திய ராணுவத்தின் வடகிழக்கு ஆக்கிரப்பினையும் ஒரு காரணியாக முன்வைத்து ஆயுதக் கிளர்ச்சி என்ற போர்வையில் 1987 89 காலப்பகுதியில் மிக மோசமான கொலைகளையும் மக்கள்விரோத வன்முறைகளையும் முன்னெடுத்தது. இறுதியில் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. ஆயுதப் படைகளால் ஒடுக்கப்பட்டது. ரோகண விஜயவீரா உட்பட முக்கிய தலைவர்கள் கைதின் பின், அரசின் பொய்யான மோதலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதேநேரம் இலட்சக்கணக்கான சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் சுட்டு தெருவோரங்களில் சாக்குகளில் போட்டும், எரித்தும் கொல்லப்பட்டனர். இதன் பின்னணியில் ஆயுத எழுச்சிக்கு முடிவுகட்டப்பட்டது. பலர் சிறைப்பிடிக்கப்பட்டனர். சோமவன்ச போன்ற சிலர் தப்பி அந்நிய நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். இவ்வாறு எஞ்சியோர்கள் 1994ம் ஆண்டு ஜே.வி.பியை மீண்டும் அரசியல் கட்சியாக பிரகடனப்படுத்தி, பாராளுமன்றத்தினுள் பிரவேசித்தனர். அத்துடன் அந்த சகதியில் புரண்டு எழும்புகின்றனர். இவர்கள் மகிந்தா முதல் தடவை ஆட்சியை கைப்பற்ற முதுகெலும்பாக நின்றதுடன், சிறுபான்மை மக்களிற்கு எதிராக அரசுக்கு தோள் கொடுத்தனர். முதலில் சந்திரிக்கா அரசுடன் சேர்ந்து இனவொடுக்குமுறைக்கு உதவியவர்கள். அனைத்து அரசின் சட்ட மற்றும் போர்க்குற்ற நடவடிக்கைகளிற்கும், சிங்கள பேரினவாத வெறியுடன் முழு ஆதரவினையும் வழங்கி இருந்தனர்.

ஜே.வி.பி இலங்கையில் இரு மொழி பேசும் பல்வேறு இனக் கலாச்சாரத்தினைக் கொண்ட சிறுபான்மை தேசிய இன மக்கள் உள்ளனர் என்பதனை எக்காலத்திலும் ஏற்றுக் கொண்டவர்கள் அல்லர். மாறாக இவர்கள் இலங்கையில் வாழ்பவர்கள் அனைவரும் இலங்கையர் என்றும், சிறுபான்மை இனம் என்று ஒன்று இங்கே இல்லை என்பதன் மூலம் சிறுபான்மை இன மக்களின் கலாச்சாரம் மொழி பிரதேசம் போன்ற தேசிய அடையாளங்களை மறுதலித்தே வந்துள்ளனர். இது அடிப்படையில் இனவாதமே. ஆரம்பம் முதல் ஜே.வி.பி.யின் சிவப்புத் தோற்றத்தையும் வாய்வீச்சையும் தென்னிலங்கையின் இளம் தலைமுறையினரும் தொழிலாளர்கள் விவசாயிகளும் நம்பினர் என்பது மறுக்கப்பட முடியாத ஒன்றாகும். அதாவது பழைய இடதுசாரிகள் எனப்பட்ட சமசமாஜ- கம்யூனிஸ்ட் கட்சிகள் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலுக்குள் மூழ்கித் தமது சுயத்தை இழந்தனர். அத்துடன் தொழிலாளர், விவசாயிகளுக்கும் தேசிய இனங்களுக்கும் துரோகம் இழைத்தனர். அதனால், ஏற்பட்ட வெற்றிடத்தை ஜே.வி.பி. நிரப்பிக் கொண்டது. ஆனால், காலப்போக்கில் அதே பாராளுமன்ற சந்தர்ப்பவாத இனவாத அரசியல் சேற்றுக்குள் ஜே.வி.பி. இறங்கி சேற்றுச்சுகம் காணத் தொடங்கியது.

கட்டுரைக்கு உதவிய ஆக்கங்கள் :

1971 JVP Insurrection and incarceration of Rohana Wijeweera - G. Perera•

ஜே.வி.பி.யில் ஏற்பட்டிருக்கும் பிளவு • -அஸ்வத்தாமா

**-ஜெகதீசன்.**



# உன்னைப் போல் உன் கத்தோலிக்க அயலானை மட்டும் நேசி..!

அறுவைதாசனிற்கு நீரிழிவு சலரோகம் சர்க்கரை வியாதி என்று பல பெயர்களில் அழைக்கப்படும் வியாதி வந்து விட்டது. எத்தனையோ மருந்து சாப்பிட்டும் அது கட்டுக்குள் அடங்கவில்லை. வைத்தியரைப் போய்ப் பார்த்தான். இரவு உணவு சாப்பிட்ட உடனே நித்திரை கொள்ளக் கூடாது. கொஞ்ச நேரம் உடற்பயிற்சி செய்து விட்டு பிறகு படும் என்று அவர் ஆலோசனை சொன்னார். அறுவைதாசன் அதைப் போய் மனிசியிடம் சொல்லி விட்டு இரண்டு பேரும் சேர்ந்து படுக்கப் போக முதல் உடற்பயிற்சி செய்வோம் உமக்கும் நல்லது தானே என்று மெதுவாக ஐஸ் வைத்தான்.

நீர் உடம்பை கொஞ்சம் அசைத்தாலே பெரிதாக சத்தம் போடுவீர். இந்த லட்சணத்திலே உமக்கு சேர்ந்து செய்ய வேணுமோ நீர் மட்டும் தனியாக வெளியிலே நடந்து விட்டு வாரும் என்று ஒரேயடியாக மறுத்து விட்டா. இந்தக் கவலையோடு இருந்த நேரத்திலே அய்யாமுத்து வந்து சேர்ச்சிற்கு போக வேண்டும் என்றான்.

வெள்ளிக்கிழமை தோறும் குளித்து முழுகி சுத்த சைவச்சாப்பாட்டை சாப்பிட்டு விட்டு சனிக்கிழமை ஆட்டுக்கறியை போட்டுத் தாக்கும் இரு மரபும் துய்ய வந்த உயர்சைவக்குடி பிறந்த அய்யாமுத்து வேதக்கோவிலிற்கு போக வேண்டும் என்று சொன்னதை கேட்டு அறுவைதாசன் பயந்து போனான். அவனது பயத்தை விளங்கிக் கொண்ட அய்யாமுத்து என்ரை மகனை ஒரு faith school இல் சேர்க்க வேண்டும் அதுக்கு இந்த வேதக்கோவிலில் இருக்கிற ஒரு தமிழ்ப்போதகரிடம் கடிதம் வாங்கினால் நல்லதாம் எனக்கு இந்த கிறிஸ்தவ சமயத்தை பற்றி ஒன்றுமே தெரியாது. எங்கடை தமிழ் தொலைக்காட்சிகள் வானொலிகளிலே வாற அரசியல் ஆய்வாளர்கள் மாதிரி நீயும் ஒரு நாலும் தெரிஞ்ச மனிசன். அது தான் உன்னைக் கூட்டிக் கொண்டு போகலாம் என்று வந்தேன் என்றான்.

பிரித்தானியாவில் faith school கள் எனப்படும் பாட-சாலைகள் பெரும் பாலும் புரட்டஸ்தாந்து கத்தோலிக்க மதத்தினரால் நடாத்தப்படுகின்றன. இவற்றிற்கு தொண்ணூறு வீதத்திற்கும் அதிகமான தொகை பொதுமக்களின் வரிப்பணத்தின் மூலமே அரசாங்க உதவியாகக் கிடைக்கிறது. ஒரு மிகச்சிறு பங்கையே அந்த மத நிறுவனங்கள் செலவு செய்கின்றன.



ஆனால் பள்ளிகளின் முழுக்கட்டுப்பாடும் மதநிறுவனங்களிடம் இருக்கும். ஒரு சிறு அளவு மற்றைய மதங்களை சேர்ந்தவர்களையும் கண்துடைப்பிற்காக எடுப்பார்கள். இந்த பள்ளிகளில் அரசபள்ளிகளை விட கட்டுப்பாடுகள், கல்வித்தரம் என்பன கூடுதலாக இருக்கும் என்று சில பெற்றோர்கள் தங்களது மதம் அல்லாத மற்றைய மதநிறுவனங்களின் பள்ளிகளாக இருந்தாலும் பரவாயில்லை என்று தமக்கு அண்மையில் இருந்தால் தமது பிள்ளைகளை சேர்க்க முயற்சி செய்வார்கள். அய்யாமுத்து தன்னுடைய மகனை சேர்க்க நினைத்த பள்ளி ஒரு கத்தோலிக்க பள்ளி. பிரித்தானியாவின் பெரும்பான்மை மதம் புரட்டஸ்தாந்து மதம். கத்தோலிக்கர்கள் பெரும்பாலும் அயர்லாந்து காரர்களும் மற்றைய வெளிநாட்டுக்காரர்களும் தான். இவர்கள் போன கத்தோலிக்க கோவிலிலே ஒரு தமிழ்ப்பூசை, தமிழ் சுவாமியாரால் நடாத்தப்படுகிறது. இவர்கள் உள்ளே நுழைந்தபோது சுவாமி சபையிலே பேசிக்கொண்டிருந்தார். நாங்கள் எல்லாம் கம்பிகள். அதாவது கம்பி சூட்டிற்கு உருகுவது மாதிரி நாங்கள் கர்த்தராகிய யேசுகிறிஸ்துவின் கருணையிலே உருகுகி றோம் என்றார். உதாரணமே வில்லங்கமாக இருக்குதே என்றான் அறுவைதாசன். நமது மேய்ப்பரான யேசுகிறிஸ்து உங்களை வழி நடாத்துவார் என்று பேச்சை முடித்த சுவாமி, உங்களிற்கு ஏதாவது கேள்விகள் இருந்தால் கேட்கலாம் என்று சபையை பார்த்து சொன்னார்.

கைகளை உயர்த்தியபடி எழுந்து நின்ற அறுவைதாசனை பார்த்த சுவாமி, புதிசாக ஒருத்தன் வந்ததுமில்லாமல் அவனுடைய சந்தேகங்களையும் தன்னிடம் கேட்டுத் தெளிய விரும்புகிறானே இந்த மனம் திருந்திய மைந்தனை கர்த்தருடைய வழி நடத்த வேண்டிய பெரும் பொறுப்பு தன்னுடைய தோள்களிலே வந்தது தேவனுடைய சித்தமே என்று பெருமிதம் கொண்டு கேளுங்கள் என்றார்.
கர்த்தர் மேய்ப்பர் என்றால் நாங்கள் எல்லாம் ஆடு களோ என்று அறுவைதாசன் கேட்டான்.

ஆகா மகனின்ரை படிப்பிற்கு வைச்சானே ஆப்பு என்று அய்யாமுத்து கண்ணீர் விடாத குறையாக சுவாமி என்ரை மகனை உங்களது பள்ளிக்கூடத்திலே சேர்க்க வேண்டும், நீங்கள் தான் உதவி செய்ய வேண்டும் என்றான்.

நீங்கள் கத்தோலிக்கரோ என்று சுவாமி கேட்டார். இல்லை சைவசமயம் என்றான் அய்யாமுத்து. அப்படியென்றால் இடம் கிடைக்காது ஏற்கனவே இங்கே இருக்கின்ற கத்தோலிக்கரோடு போலந்தில் இருந்தும் கத்தோலிக்கர்கள் வருவதால் மற்றச் சமயத்தவர்களை சேர்ப்பது முடியாமல் இருக்கிறது என்றார் சுவாமி.

உன்னைப் போல் உனது அயலானை நேசி எண்டு கக்கூஸ் சுவரைக் கூட விடாமல் ஒட்டி வைச்சிருக்கிறீங்கள், ஆனால் உன்னைப் போல் உனது கத்தோலிக்க அய லானை மட்டும் நேசி எண்டது தான் உங்களது நடைமுறை யாக இருக்கிறது. பொதுமக்களது பணத்திலே நடத்துற

பள்ளிக்கு கத்தோலிக்கரை மட்டும் தான் சேர்ப்போம் என்பது எந்த வகையிலே நியாயம். அதுவுமில்லாமல் எல்லோரையும் மதப்படி பிரிக்கும் உங்களது பார்வைப்படி பார்த்தால் இந்த நாடு புரட்டஸ்தாந்து நாடு. கத்தோலிக்கரை வைக்கோலிலே போட்டு எரிச்ச நாடு.., கத்தோலிக்கரை திருமணம் செய்தால் அரசராக பதவியேற்க முடியாது என்ற மரபு உள்ள நாடு.., வட அயர்லாந்து மக்களை கத்தோலிக்கர்கள் என்பதனால் இரண்டாந்தர குடிமக்களாக நடத்தும் நாடு. இப்படியான நாட்டுப்பணத்திலே பள்ளிக்கூடம் நடத்துவதற்கு மட்டும் உங்களது மத உணர்ச்சி இடம் கொடுக்குதோ என்றான் அறுவைதாசன்.

எங்களிற்கு அரசியல் தேவை இல்லை. பரலோகத்தில் இருக்கும் எங்களது பிதாவின் சித்தப்படியே நாங்கள் நடக்கிறோம் என்றார் சுவாமியார். உங்களது பிதா பரலோகத்தில் இல்லை. இந்த உலகத்திலே இருக்கின்ற அதிகார வர்க்கம் தான் உங்களது தேவர்கள். இப்படித் தான் கொழும்பிலே இருக்கின்ற ஆண்டகையோ, ஆட்டின கையோ என்று ஒருத்தரும் இலங்கை மக்கள் அரசியலால் பிரியாமல் நாட்டு முன்னேற்றத்திற்காக பாடுபட வேணும் செபம் சொல்கிறார்.



தமிழ்மக்களை ஈவு இரக்கம் இல்லாமல் பேரினவாத அரசுகள் கொன்றபோது எல்லாம் இவர்கள் வாயே திறக்கவில்லை.

இத்தாலியிலே இருக்கின்ற மேற்கு நாடுகளின் மாப்புகளும் (போப்பு எண்டும் சிலர் கூப்பிடுகிறார்கள்) மேற்கு நாடுகளிற்கு பிடிக்காத நாடுகளிலே ஏதாவது நடந்தால் மனித உரிமை மீறல், அப்பாவி மக்களை கொல்லுகிறார்கள் என்று கண்ணீர் விடுவார்கள். மேற்கு நாடுகள் கொல்லும் போது கொள்ளையடிக்கும் போது பாதிக்கப்பட்டவர்களிடம் ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு என்று உபதேசம் செய்வார்கள். இது தான் உங்களது அரசியல் வரலாறு என்றான் அறுவைதாசன்.

இப்பிடியே விட்டால் இந்த முறை மட்டுமில்லாமல் எப்பவுமே அந்த பள்ளியிலே சேர்க்க முடியாமல் குழப்பி விடுவான் என்று யோசித்த அய்யாமுத்து நாங்கள் இன்னொரு நாள் வருகிறோம் என்று சொல்லியபடி அறுவைதாசனை இழுத்துக் கொண்டு வெளியே வந்தான். வெளியே வந்த அறுவைதாசன் உள்ளே திரும்பிப் பார்த்தான். சுவாமி சற்பிரசாதம் கொடுத்துக் கொண்டிருந்தார். பொடியன் ஒருவன் கத்தோலிக்க முறைப்படி முழந்தாளிலே இருந்தபடி சற்பிரசாதத்தை வாங்கி கொண்டிருந்தான். அவனது தலை சுவாமியின் இடுப்பிற்கு நேரே இருந்தது. எல்லாத்தையும் பிளான் பண்ணித் தான் செய்கிறார்கள் என்றபடி அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்த அறுவைதாசனை பார்த்த அய்யாமுத்து,

உனக்கு நல்லா மண்டை கழண்டு போச்சு என்றான்.

-விஜயகுமாரன்.

# புதிய தேசத்தை நோக்கி..!?

அந்துக் காலத் ஆசிரியரில் பலர்
எதுக்கெடுத்தாலும் துடி துண்டுகளால் அடிச்சு
தங்களின் வீட்டுச் சுமைகளை
மாணவரான எங்களுக்கு எம்மீது பதித்து
தேடலற்ற கல்வியினை திணிச்சுப் படிப்பிச்சதால்..!?
அவையே சரியான கருத்தென..,
எம்மனதில் அச்சடித்த பதிவாகி
எமது எதிர்காலம் நோக்கி..,
எமை வடம்பிடிக்கச் சொல்கின்றது.


அப்படி ஒரு நாட்டுக்குள்
இடதுப் புரட்சி எனச்சொல்லி
தேடற் திக்கற்று முடுமுடுத்துத் தொடங்கிய
ரோகணவின் ஜேவீபி புரட்சியும்
தெற்கிருந்து வடக்குவரை
முழுமையற்றதாய் உடைஞ்சே போச்சு.
அதற்கு முன்பு தோழர். சண்
ரோகணவுக்குச் சொன்ன சேதி
எட மேனை, உனக்குது வேண்டாமடா.., என்பதாகும்.
அந்துப் பொடியனும் குழுவும்
ஏதேதோ திணிப்புகளுக்குள்
கருத்தெண்டும்.., புரட்சியெண்டும்..,
அரசுக்கு அடிக்க வெளிக்கிட்டு
மக்களை இனங்களை உலைத்து
அரைகுறையாய் அழிஞ்சுபோச்சு.
இதில் மக்களை முடங்களாக்கி
நாட்டினை ஈட்டுக்குமேல் ஈடுவைத்து
அடக்கியாள்வதே அரசாட்சியென்று
அரச போக்குகள் அம்பாளிக்க..,

அதைத் தடுத்து வாழ – நாங்களும்
எங்களுக்குத் தெரிஞ்ச துடிகளால்
அடிக்க வெளிக்கிட்டு..? – அந்த
அடிதுடிகளை தடுக்கிறோமென
ஆராரோவெல்லாம் வந்துசேர்ந்து..!?
இப்ப எங்களிட்டை வேலியுமில்லை, காணியுமில்லை.
அட, மக்களின் சுய வாழ்வென்பது
அன்னியமாகி தொலைசே போச்சு..!?

ஏன்தான் இதுக்குள்ளால் விடுதலை
கிடைக்கவில்லை என்றால்..!?
அதற்காக அனைவரும் பழைய மரபுபோக்கி
புதிதாகச் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.
இது நாள்வரையும் மக்களை ஆட்டிப் படைச்ச
நாடாளுமன்ற கதிரைக் கருத்துகளாலும்..,
நாடறுத்து வாழ்வோம் என்ற..?
அடிகளின் அனுபவ மூலமாகவும்..,
நாம் அனைவரும் கருத்து செயல்
வாழ்வியலில் மனிதர்களாக
எங்களுக்குள் மாற்றம் பெறவேண்டும்..!?
அவைக்கான மாற்றமென்பது
சமய – சாதி – வர்க்க – இனங்களென்ற
சகதிகளை மனதிலிருந்து களைந்த கருத்தியல்
வாழ்வுநிலை என்பதாகும்.
அதன் நோக்காக முன்னணிக்கு
கருத்துரைத்து செயலாற்ற வாருங்கள்.
அடிதுடியில்லாத அடக்குமுறையற்ற சுதந்திரமான
மக்களின் தேசத்தில் வாழ்வதற்கு.

-மாணிக்கம்.

# நேர்காணல்



## தோழர் பசந்தா - பொலிட்பிரோ உறுப்பினர் ஒன்றிணைந்த நேபாள கம்யூனிஸட் கட்சி (மாவோயிஸ்ட்)

*கேள்வி :*

**புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் ஒரு வர்க்க போராட்டம் நடைபெற்று வருவதாக நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். நேபாளத்தில் எந்த விதமான சக்திகள் அது முன்னேறுவதற்கு தடையாகவோ அல்லது ஆதரவாகவோ உள்ளது என்றும் அவை அரசில் சட்டத்தை உருவாக்குவதில் எவ்விதம் வெளிப்படுகின்றன என்றும் குறிப்பிட முடியுமா? வெவ்வேறு கட்சிகளில் இந்த சக்திகளின் தாக்கம் எவ்வாறு உள்ளது. எத்தகைய கட்சிகள் பிற்போக்கானவை?**

*பதில் :*

ஒரு நாட்டில் அரசு அதிகாரத்தை முன்னெடுத்து செல்ல அரசியல் சட்டம் ஒரு முக்கியமான அரசியல் சாசனம் ஆகும். அரசு அதிகாரத்தை போன்றே அரசியல் சட்டமும் குறிப்பிட்ட வர்க்கத்தை ஒடுக்கப்படும் அல்லது ஒடுக்கும் வர்க்கத்தை சார்ந்தே உள்ளது. மக்கள் யுத்தத்தின் ஒரு கால கட்டத்தில் அரசியல் சட்டசபை முடிவு பெறாத நேபாள புதிய ஜனநாயகப் புரட்சியை முன்னெடுத்து செல்ல ஒரு செயலுத்தியாக காணப்பட்டது. இராணுவ ரீதியாக மக்கள் யுத்தத்தின் போது போர் புரிந்த வர்க்கங்கள் தற்போது அரசியல் சட்ட சபையில் கருத்தாக்க அடிப்படையிலும் அரசியல் ரீதியிலும் மோதிக் கொண்டன. வர்க்கப் போராட்டம் நடத்தப்பெறும் நிகழ்விடம் மாறியிருக்கலாம் ஆனால் அதன் நோக்கம் கைவிடப்படவில்லை.

முடியரசு வீழ்த்தப்பட்டவுடன் நேபாளத்தின் நிலப்பிரபுத்தவம் வலுவிழந்து விட்டது. அரசியல் அதிகாரத்தில் தரகு முதலாளித்துவத்தின் கை ஓங்கியது. இருப்பினும் அரசு அதிகாரத்தின் குணாம்சம் பெரிதும் மாறுபட்டுவிடவில்லை. அணைத்து ஒடுக்கப்பட்ட வர்க்கத்தை தேசத்தை வட்டாரத்தை பாலினத்தை சார்ந்த மக்கள் ஒரு புறமாகவும் பிற்போக்கு அரசு அதிகாரத்தில் உள்ள தரகு அதிகார வர்க்க முதலாளித்துவ வாதிகள் மறுபுறமாகவும் உள்ள முரண்பாட்டில் மாற்றம் ஏதும் வந்து விடவில்லை. இதுதான் முக்கிய முரண்பாடாக உள்ளது. இது அரசியல் சட்ட நிர்ணய சபையிலும் காணப்படுகிறது. எனவே இந்த அரை நிலப்பிரபுத்துவ அரைக்காலணிய நேபாள சூழலில் காணப்படும் அடிப்படை முரண்பாடுகளை தீர்வு கண்டு அரசியல் அதிகாரத்தை மறுசீரமைக்க ஏற்ற அரசியல் சாசனத்தை எழுவதை முன்னேடுத்து செல்வதே நமது கட்சி இந்த அரசியல் நிர்ணய சபையில் நிறைவு செய்ய வேண்டிய முக்கிய கடமையாக உள்ளது. இருப்பினும் அரசியல் சட்டத்தின் உள்ளடக்கத்தை பொறுத்த மட்டில் இருவழி போராட்டம் மிகவும் கூர்மையடைந்துள்ளது.

இங்கு நாம் எதிர் கொள்வது, அரசியல் நிர்ணய சபையில் எதிர்கொள்வது வர்க்கங்களையேயாகும். கட்சிகளை அல்ல. இருப்பினும் ஒரு கட்சியின் கருத்தாக்க அரசியல் வழி என்பது ஒரு குறிப்பிட்ட வர்க்க நலனை பிரநிதித்துவப் படுத்தப்படுகிறது. இந்த பின்னணியால் கட்சிகளுக்கு இடையேயும் எங்கள் போராட்டம் தொடர்கிறது. நேபாள காங்கிரசு கட்சி யூ.எம்இஎல் இன் ஒரு பிரிவினர் மற்றும் மாதேச பகுதியில் உள்ள சில கட்சிகள் நேபாளத்தில் உள்ள நிலப்பிரபுத்துவ தரகு மற்றும் அதிகார வார்க்க முதலாளித்துவ நலனைப் பிரதி நிதித்துவப்படுத்துகின்றனர். எனவே அவர்களுடன் அரசியல் நிர்ணய சபையில் நாங்கள் தீவிரமாக மோதவேண்டியுள்ளது.

*கேள்வி :*

**எழுச்சி ஏற்படுவதற்கு முன் தேவையாக இருப்பது வர்க்கம் வளர்ந்து வர்க்கம் தான் கட்சி அல்ல என்று லெனின் கூறியதாக முன்பு கூறியிருந்தீர்கள். மக்களின் புரட்சிகர எழுச்சி எதிரிகள் ஆட்டம் கண்டு நிற்கும் போது அது தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டள்ளதாக கூறுனீர்கள். அப்படியானால் உங்களுடைய குறுகிய கால செயலுத்தியை நடைமுறைப்படுத்த உங்கள் சுய வலிமையை விட பிற கட்சிகளில் அடங்கியுள்ள வர்க்கப் பிரிவினரின் தன்மையையும் கணக்கில் கொண்டுதான் தீர்மானிக்கின்றீகளா? தங்களது நாட்டில் இத்தகைய நிலை எவ்வாறு உள்ளது?**

*பதில் :*



எனது கருத்தின் படி லெனின் ரசிய சோசலிச சனநாயக தொழிலாளர் கட்சி (போல்சிவிக்) யின் மத்திய குழுவிற்கு எழுதிய கடிதத்தில் எழுச்சிக்குதேவையான மூன்று நிபந்தனைகளாக வளர்ந்துள்ள வர்க்கம் மக்களின் புரட்சிகர எழுச்சி எதிரி முகாமில் காணப்படும் வலுவான ஆட்டம் காணல் போன்றவைகளை முன் வைத்துள்ளதை முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். நான் லெனின் கூறியதை முன்வைக்கும் போது அதே அர்த்தத்தில் தான் குறிப்பிட்டேன். எனவே எமது கட்சி எழுச்சிக்காக தனியான ஒரு செயலுத்தியை உருவாக்கி விடவில்லை.
ஆனால் கட்டாயமாக புரட்சிகர நன்கு பயிற்றுவிக்கப்பட்ட கட்சியில்லாமல் வளர்ந்த வர்க்கம் வெற்றியை நோக்கி இட்டுச் செல்லப்பட முடியாது. எனவே புரட்சிகர கட்சியின் தேவை உள்ளது. லெனினை சுட்டிக்காட்டும் போது வெறும் உண்மையான கம்யுனிச கட்சியும் அதனை ஆதரிக்கும் மக்களும் மட்டும் இருந்தாலே எழுச்சியை நடத்திட போதுமானதல்ல. மாறாக வளர்ந்த வர்க்கம் முழுமையாக எதிரியை துக்கியெறிய தயாராக இருக்க வேண்டும். எதிரியும் தற்போதைய நிலையை தக்க வைத்துக்கொள்ள இயலாத நிலையில் இருக்கவேண்டும். நமது நாட்டிலும் எழுச்சி குறித்து பேசுவதாக இருப்பின் இதுவே நம்மை பொறுத்தவரை உண்மையாக இருக்க முடியும்.

*கேள்வி :*

**இந்தியாவில் புரட்சிகர சக்திகளுக்கு எதிராக பச்சை வேட்டை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டபோதும் இலங்கையில் தமிழர் மீது இனப்படுகொலை நடத்தப்பட்ட போதும் தங்கள் வெளிப்பாடு தாமதமாகவே இருந்தது. பாராளுமன்ற திரிபுவாத போக்கின் வெளிப்பாடாக இதைக் கருதுகிறீர்களா?**

*பதில் :*

இந்திய விரிவாதிக்க ஆளும் வர்க்கங்கள் பச்சை வேட்டை நடவடிக்கையை மேற்கோண்ட உடனேயேயும் இலங்கை தமிழர் மீது படுகொலைத் தாக்குதலை மேற்கொண்ட உடனேயே நாங்கள் எதிர்வினை ஆற்றியிருக்க வேண்டும். நாங்கள் அவ்வாறு செய்யத் தவறிவிட்டோம். எங்களது கட்சியில் இது குறித்தும் கூர்மையான இரு வழி போராட்டம் நடந்து வருகிறது.

*கேள்வி:*

**தெற்காசியாவைப் பொறுத்தவரை புறச்சூழலில் புரட்சிகர சூழல் நிலவுவதாகவும் நீங்கள் கூறியுள்ளீகள். இந்திய விரிவாதிக்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பாவையாக இணைந்து புரட்சிகர போக்கிற்கு எதிராக நிற்கிறது. நேபாள புரட்சியின் மீதும் இந்திய புரட்சியாளர் மீதும் அதன் தாக்கம் எவ்வாறு உள்ளது. இந்திய விரிவாதிக்கத்திற்கு எதிராக நீங்கள் என்ன செய்ய திட்டமிட்டுள்ளீர்கள்?**

*பதில் :*

தெற்காசியாவில் புறச்சூழல் புதிய ஜனநாயக புரட்சி வெற்றியை நோக்கி பயணிக்க ஏதுவாக உள்ளது. இருப்பினும் புரட்சிகர மாற்றத்தை ஆதரிக்கும் சக்திளிடையே ஒற்றுமை மிகவும் பலவீனமாக உள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியமும் இந்திய விரிவாதிக்கமும் அவர்களின் கைப்பாவைகளும் இப்பகுதியில் உள்ள புரட்சியை குறிப்பாக நேபாள புரட்சியை முழுமையாக ஒடுக்கிவிட விழைகிறார்கள். எனவே தமது அகநிலை சக்தியை வளர்தெடுக்க புரட்சிகர சக்திகள் மூன்று நிலையில் ஐக்கிய முன்னணியை கட்டியமைக்க முயலவேண்டும். முதலாவது ஒவ்வோரு நாட்டிலும் உள்ள பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான புரட்சிகர முற்போக்கு ஜனநாயக சக்திகளின் மற்றும் தேசிய விடுதலை இயக்கங்களின் ஐக்கிய முன்னணியை கட்டியமைக்க வேண்டும். இரண்டாவதாக இந்திய விரிவாதிக்கத்திற்கு எதிராக உள்ள அனைத்து சக்திகளின் ஐக்கிய முன்னணி கட்டியமைக்கப்பட வேண்டும். மூன்றாவதாக உலகம் முழுவதும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக உள்ள அனைத்து சக்திகளை ஒருங்கிணைத்து ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்னணி உருவாக்கப்பட வேண்டும். இவை மூன்றுமே இப்பகுதியில் உள்ள புரட்சிகர சக்திகளால் கட்டி எழுப்பப் படவேண்டும். இதன் மூலம் தெற்காசிய நாடுகளில் புதிய சனநாயக புரட்சியை வெற்றிப் பாதை நோக்கி பயணிக்க அகநிலை சக்தியை வலுப்படுத்த இயலும்.

*கேள்வி :*

**இந்திய மாவோயிஸ்டுகள் உங்களுடைய ஒருங்கிணைப்பு தத்துவத்தை நகர்புற பகுதிகளில் புரட்சிகர எழுச்சிப் பாதை எனவும் கிராமப்புறங்களில் நீண்ட கால மக்கள் யுத்தம் என்றும் முன்வைப்பதை விமர்சனத்துடன் அணுகுகின்றனர். மேலும் ஆளும் வர்க்கத்துடன் தேர்தல் பாதையில் அமைதி வழியில் போட்டி என்றும் அரசு அதிகாரத்தை துக்கி எறியாமல் பங்கேற்பதையும் விமர்சனத்துடன் அணுகுகின்றனர். தற்போது தங்களது இரண்டு ஆண்டு அனுபவம் என்ன சொல்கிறது. ஒருங்கிணைப்பு தத்துவமும் அமைதிவழி போட்டி முறையும் இன்றும் சாத்தியமா?**

*பதில் :*

ஒருங்கிணைப்பு என்பதை நாங்கள் தத்துவமாக முன்வைக்கவில்லை. ஆயினும் கிராமப்புற பகுதிகளில் நீண்ட கால மக்கள் யுத்தத்திற்கும் நகர் புறங்களில் மக்கள்திரள் போராட்டங்களுக்குமான உறவுகள் குறித்து அது விவாதிக்கிறது. இவ்வித வடிவத்திலான போராட்டங்களும் ஒன்றோடு ஒன்று முரண்பட்டதல்ல என்றும் ஒன்றை ஒன்று துணை நிற்பவை என்றும் தலைவர் மாவோ சரியாக குறிப்பிட்டுள்ளார். மக்கள் யுத்தம் துவங்கப்படுவதற்கு முன்பு நகர்புறங்களில் நடைபெறும் மக்கள் திரள் போராட்டங்கள் கிராமப் புறங்களிலும் மக்கள் யுத்தத்தை வளர்த்தேடுக்க உதவுகிறது. மறுபுறம் மக்கள் யுத்தம் வளர்த்து எடுக்கப்பட்ட பின்பு மக்கள் திரள் இயக்கம் அதற்கு உதவிகரமாக உள்ளது. இதன் மூலம் மக்கள் திரள் போராட்டங்களும் மக்கள் யுத்தமும் ஒன்றுடன் ஒன்று துணை புரிபவை என்றும் மக்கள் யுத்தமே அரை நிலப்பிரபுத்துவ அரைக்காலணிய நாடுகளில் முதன்மையானதாகவும் என்று குறிப்பிடுகிறார். இருப்பினும் சர்வதேச கம்யூனிச இயக்கத்தில் மாவோ குறிப்பிட்ட இந்த கருத்தை சரியாக உள்வாங்கப்படவில்லை. ஒரு தலைப் பட்சமாக மக்கள் யுத்தம் மூன்றாம் உலக நாடுகளுக்கான வடிவங்களாகவும் சித்தரிக்கப்படுகின்றது. இந்த போக்கு இரு போராட்ட காலங்களுக்கிடையில் பொரும் சுவரை எழுப்பி நிற்கிறது. நீண்ட கால மக்கள் யுத்தம் மூன்றாம் உலக நாடுகளுக்கு பொருந்தும் என்பது உண்மைதான். அதேபோன்று புரட்சிகர எழுச்சியும் வளர்ந்த நாடுகளுக்கு பொருந்தும் ஆயினும் அவை இரண்டிற்கும் இடையே எல்லைக் கோடு வகுப்பது தவறானது. அரை நிலப்பிரபுத்துவ அரை காலணிய நாடுகளில் அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் வளர்ச்சியின் விளைவாக அந்த நாடுகளில் உள்ள வர்க்கங்களின் இடையிலான உறவில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. எமது கருத்தில் புறச்சூழல் ஏற்பட்டுள்ள இந்த புரட்சிகர மாற்றம் இரண்டு வகையான போராட்ட வடிவங்களையும் ஒரே சமயத்தில் கொண்டு செல்லவும் மக்கள் யுத்தத்தை முதன்மையாக நடைமுறை படுத்தவும் கோருகிறது. இதனை தெளிவுபடுத்தலே நாங்கள் ஒருங்கிணைப்பு என்று பிரயோகித்தோம்.




அதாவது, எழுச்சியின் சில செயலுத்திகள் மூன்றாம் உலக நாடுகளில் நீண்ட கால மக்கள் யுத்தத்தின் யுத்த தந்திரத்துடன் இணைக்கப்பட வேண்டும். இந்த கருத்தாக்கம் இன்று வரை சரியானது மட்டுமல்ல அது மேலும் வளர்த்தேடுக்கப்பட வேண்டும். மேலும் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தோழர்கள் அவர்களது புரட்சிகர எழுச்சிப் பாதைக்கு இணையாக நீண்டகால மக்கள் யுத்த பாதையின் செயலுத்திகளை உள் வாங்க வேண்டிய அவசியத்தை நாங்கள் அழுத்தம் அறிகிறோம். முதலாளித்துவம் பொரும் மாற்றத்திற்கு உட்பட்டிருப்பதால் முதலாளித்துவ பாராளுமன்றம் மாற்றம் ஏதும் இன்றி துவக்கத்தில் உள்ளது போன்றே இருப்பதில்லை.

இருவகைப்பட்ட நாடுகளிலும் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் தத்தம் நாடுகளில் வர்க்கப் போராட்டத்தை முன்னேடுத்துச் செல்ல இந்த ஒருங்கிணைப்பு கருத்தாக்கத்தை மேலும் ஆய்வு செய்ய வேண்டும். இருவகைப்பட்ட செயலுத்திகளை ஒருங்கிணைப்பது என்ற பெயரில் வெறும் கூட்டுக் கலவையாக மாறிவிடாமல் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

புரட்சியானது அமைதி வழியில் இருந்து வன்முறை போராட்ட வடிவம் வரை நெளிவு நிறைத்த பாதையில் நேர் கோடற்ற பாதையில் வளைந்து செல்கிறது. வன்முறை போராட்டங்கள் யாவும் புரட்சிகரமானது என்றோ அமைதி வழிப்பாதை அனைத்தும் சீர்திருத்த வழி என்றோ நாம் முடிவு செய்ய முடியாது. கட்சியின் வழியைக் கொண்டு அது முடிவு செய்யப்படுகிறது. கட்சியின் வழி சரியானதாக இருப்பின் அமைதி வழிப்போராட்டங்கள் வலிமையை பெருக்கிக் கொண்டு உயர்மட்ட வன்முறை போராட்டத்திற்கு வளர்த்தேடுக்க பயன்படுகிறது. கட்சியின் வழி தவறானதாக இருப்பின் வலிமையான வன்முறை போராட்டங்களும் பெரும் சீர் திருத்தங்களை வென்றேடுக்க ஒரு போரட்டத்திற்கான வழியாக அமைகிறது. எனவே போராட்ட வடிவம் என்பது முதன்மையானதல்ல. அதற்காக அமைதி வழியான மாற்றத்திற்காக முன்வைக்கும் வாதமாக இதை கருதத் தேவையில்லை. முடிவாக ஆயுதம் தாங்கிய பாட்டாளி வர்க்க போராட்டமே முதலாளித்துவத்திடமிருந்து பாட்டாளிகளுக்கு அதிகார மாற்றத்தை பெற்று தருகிறது.

**நேர்காணல் : சுதாகர்**

**தொகுப்பு : பீட்டர்**

ஆஹா வென்றெழுந்தது பார் யுகப்புரட்சி...
என்ற பாரதி பாடல், கடாபியின் இறப்பை கேட்டதிலிருந்து மனதுக்குள் ஓடிக்கொண்டிருகிறது. அந்தப் பாடலுக்கு இசை அமைத்தது யார் என்று நினைவில் இல்லை.
ஆனால் அது எழாவது மனிதன் என்ற தமிழ்த் திரைபடத்தில் வந்ததாக நினைவிருக்கு. கவிதை எழுதிக்கொண்டு, எல்லாம் அறிந்த ஏகம்பரமாக, இடது சாரி வேடத்துடன் திரியும் நான், என்னுடைய ஆழ்மனதில்,கடாபி போன்றவர்கள் கொல்லப்படுவதை ரசிக்கிறேனா? அமெரிக்க, ஐரோப்பிய ஏகாதிபதியங்களின் அடவாடித்தனங்களை, என்னுடைய உள் மனது ஆதரிக்கின்றதா? நான் இடதுசாரி மார்க்சிஸ்ட் என்றல்லவா என்னை நானே நினைத்திருந்தேன்.

நான், கடாபி கொல்லப்பட்டதை ஏற்றுக்கொண்டு அதை வெளியில் சொன்னால் யாரும் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? எனது அரசியல் நண்பர்களே எனது முகத்தில் காறி உமிழ்வார்களே? அதை விட எனக்கு CIA ஏஜென்ட் என்ற முத்திரையை, குனியவிட்டுக் குத்துவாங்களே? ஒரு அரசியற் கற்புள்ள மார்க்சிஸ்ட் எப்படி ஏகாதிபத்திய எதிர்ப்பாளரான கடாபி கொல்லப்படுவதை, பின்புல இசையாக பாரதியின் பாடல் பிரவகிக்க, ஆர்த்மார்த்தமாக கடாபியின் கொலையை, என்னால் ஏறுக்கொள்ள முடிந்தது? என்னடா என்ரை அரசியல் கற்புக்கு வந்த சோதனை?

இதேபோலத்தான், தலைவர் பிரபாகன் இறந்தபோதும், எனது ஆழ்மனதில் ஒரு அழகான பாடலொன்று பின்னணி இசையாக பிரவாகித்தது. வாணி ஜெயராம் அவர்களின் குரலில், வாலியின் கவிதைக்கு M.S.விஸ்வநாதன் இசை அமைத்திருந்தார். அந்தப் பாடல் இடம்பெற்ற படம், சிறை. அந்தப் படத்தில் கதாநாயகன் ராஜேஷால் பாலியல் வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்ட லக்ஷ்மி, தனக்கு நிகழ்த்த கொடுமைக்கு நியாயம் கேட்டு, ராஜேஷின் வீட்டிலேயே குடிபூருகிறார். மனச்சாட்சியின் உறுத்தலால் பாதிக்கப்பட்டுச் சாகும் நிலையடைந்த ராஜேஷ், மரணப் படுக்கையில் இருந்தவாறு, முதன்முதலாக லக்ஷ்மியை சந்திக்கின்றான். அப்போது அவள் பாடிய பாடலை, தான் சாவதற்குமுன் கேட்க ஆசைப்படுவதாக லஷ்மியிடம் இறைஞ்சுகிறான். அவளும் மனமிரங்கி சூழ்நிலைக்கு

# கடலைபோட்ட கதையும் கொடுங்கோலர் அழிவும்..!

தக்க மாதிரி உள்ளடக்கத்தை மாற்றி அந்தப் பாடலைப் பாடுகின்றாள்.

நான் பாடிகொண்டே இருப்பேன், உன் பக்கத் துணையிருப்பேன்,
என் ஜென்மம் இருக்கும் வரை, என் ஜீவன் காக்கும் உன்னை.
நிலா வீசும் நேரம் உண்டு, அமாவாசை நாளும் உண்டு,
ஒரேவானில் இரண்டும் என்றும் பார்க்கவில்லையா..! ...யார் நெஞ்சில் காமம் இல்லை,
யார் நெஞ்சில் கோபம் இல்லை, மகாத்மாக்கள் என்றே இன்று யாரும் இல்லையே..,
ஒரே நெஞ்சம் பாவம் செய்யும், அதே நெஞ்சம் தர்மம் செய்யும்,
எந்த நேரம் செய்யும் என்பதில்லையே?.

இந்தப்பாட்டு பிரபாகரன் இறந்துவிட்டார் என கேள்விப்பட்ட மே.17.2009 காலை நாலுமணியளவில் இருந்து இந்தப் பாட்டும், பிரபாகரன் இறந்த நிகழ்வும் திருப்பத் திரும்ப எனது மனதுக்குள் ஓடிகொண்டிருந்தது. அதனால் அலுப்படைந்த நான் இருநாட்களின் பின்பு, என்னைவிட கனக்கப் படித்த நண்பி ஒருத்தியுடன் தொடர்பு கொண்டு எனது பிரச்சனைக்கு தீர்வுகாண வழிகேட்டேன்.


எனது பிரச்சினையை விபரமாகக் கேட்ட அவள் சொன்னாள், நான் Stockholm syndrome என்ற உளவியல் நிலையால் துன்புறுவதாக. வாய்க்குள் பூராத வருத்தம் எனக்கு வந்துள்ளதாக அவள் சொன்னதும், எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. சில மாதங்களுக்கு முன்பு தான், அக்காவுக்கு கல்யாணம் பண்ணிவைத்து விட்டு, எனது திருமணத்துக்கு பெண் பார்க்கும் படலம் நடக்கும் இந்த நேரத்தில், எனக்கு விசர் வந்து விட்டது என, அவள் சொன்னது தூக்கிவாரிப் போடாமல், எனக்கு சந்தோசத்தை கொடுத்திருக்காது என்பதைச் சொல்லித் தெரிய வேண்டிய விடயமல்ல.

எனது முகத்தில் வந்த சோர்வையும், தவிப்பையும் பார்த்த அவள், Stockholm syndrome என்பது உளவியல் சார்ந்த வருத்தம் இல்லையென்றும், Stockholm syndrome என்ற உளவியல் நிலைப்பாடு என்றால் “துன்பத்துக்கு கொடுமைக்கு உட்படுத்தப்படும் ஒரு மனிதம், அந்த துன்பத்தை - கொடுமையை செய்பவரின் நிலைப்பாட்டில்

இருந்து சிந்தித்து, தன் சிந்தனையை துன்பப்படுத்துபவருக்கோ - கொடுமையாளருக்கோ சார்பாக திருப்புவதுடன் அவருக்கு இசைவாக நடந்து கொள்ளல்" எனச் சுருக்கமாக கூறலாம் அல்லது வரையறுக்கலாம் என்று விளங்கப்படுத்தினாள்.

நமது அம்மாமார் பலர் கொடுமைக்கு ஆளாகி, உடல் - உள சித்திரவதை செய்யும் அப்பாக்களை, தலையில் வைத்து கொண்டாடுவர்கள். "இப்படியான கொடுமைக்காரனுடன் எப்படி தாயே சீவிக்கிறாய்" என, அவர்களை நீங்கள் வினவினீர்களானால் "ஆம்பிளை எண்டால் அப்படிதான் இருப்பினம்" "கஷ்டப்பட்டு உழைக்கிற மனுஷன், கோபத்தை என்னைவிட்டா யாரிட்டைப் போய் காட்டுறது" என, இலகுவாக பதில் சொல்லிவிட்டு போய்விடுவார்கள். அந்தப் பதிலில், பதிலளிக்கும் முறையில்... ஒருவகை பாசம் கலந்த விதத்தில்... அக் கொடுமைகளை அவர்கள் ரசிக்கும் தன்மை வெளிப்படும். நீண்ட காலப்போக்கில், கொடுமை செய்யும் ஆணின் அத்தனை நடவடிக்கைக்கும் நியாயம் கற்பிக்கும் "சட்டவாதிகாளாக மாறியிருப்பார்கள் இவர்கள். இந்நிலை எப்படி உருவாகிறது என்பதற்கு பல அகம் - புறம் சார்ந்த காரணிகள் பல இருந்தாலும், முக்கியமான காரணியாக சொல்லக்கூடியது கொடுமைக்கு உட்படுத்தப்படுவோரின் கையறு நிலை அல்லது எதுவும் செய்ய முடியாத, புறவளம் சார்ந்த தெரிவுகளற்ற சூழ்நிலை எனக் கூறலாம். அதனால் அகநிலை சார்ந்த கொடுமைக்கு இசைந்து போகும் தன்மையை, கொடுமைக்கு உட்படுத்தப்படுவோர், வாழ்க்கையை முன்னெடுக்கும் தந்துரோபாயமாக தெரிவு செய்கின்றனர்.

நமது காலாச்சாரமும் சமுதாய விழுமியங்களும், புராணங்களும், கதைகளும் Stockholm syndrome உளவியல் நிலைப்பாட்டை வாழ்விற்கான தந்துரோபாயமாக போதிக்கின்றன. கண்ணகி கதையும், உடல் அழு கிய கணவனை கடகத்தில் வைத்து விபச்சாரி வீடுக்கு காவிய பெண்ணின் கதையும், இன்று தமிழ் சினிமா வில் அலுப்புக் கொடுக்கும், வன்முறை பாவிக்கும் ஒருவனை, கதாநாயகி விழுந்து விழுந்து காதலிப்பதாகக் காட்டுவது போன்றவையும் Stockholm syndrome உளவியல் நிலைப்பாட்டை, எவ்வாறு நமது கலாச்சார ஊடகங்கள் நிறுவன மயப்படுத்துகின்றன என்பதற்கு நல்ல உதாரணம். பெண்ணிலைவாத சினிமா என பாராட்டப்பட்ட 'சிறை' திரைப்படம் கூட Stockholm syndrome உளவியல் நிலைப்பாட்டை பிரச்சாரம் செய்கிறது. ஒரு பெண்ணின் அகநிலை சார்ந்த பாலியல் ஒழுக்கத்தின் மீது நம்பிக்கையில்லாத கணவனை விட, தான் நிகழ்த்திய வன்புணர்வுக்காக மன்னிப்புக் கோரும் வன்புணர்வாளனுடன் சீவிப்பது மேலென்ற கருத்தை, பிரச்சாரம் செய்வதுதான் 'சிறை' படத்தின் கருப்பொருள். கதாநாயகி தாலியை கழட்டி எறியும்



புரட்சிகர பெண்ணாக காட்டப்பட்டும் அதே வேளை, அவள் மறுபுறத்தில் ஒரு வன்கொடுமையாளனை அங்கீகரிக்கின்றாள். சிறை திரைப் படத்தை தமிழ் சமூதாயத்தில் புரயோடிப்போயுள்ள Stockholm syndrome உளவியல் நிலைப்பாட்டை விளங்கப்படுதக் கூடிய செவ்வியல் உதாரணமாக கூறலாம். அத்துடன் Stock holm syndrome உளவியல் நிலைப்பாடு தனிமனிதத்தின் உளவியல் சார்ந்த நிலைப்பாடு மட்டுமல்ல இது ஒருவகை சமூக உளவியல் நிலைப்பாடும் கூட.

எமது தேசியவிடுதைப் போராட்டத்தின் கடந்த முப்பது வருட வரலாற்றை மேலோட்டமாக ஆராய்ந்தாலே, இந்த உளவியல் நிலைப்பாடு, சமூகத்தை பீடித்திருந்தது என்பதனை விளங்கிக் கொள்ளலாம். எண்பதுகளில், மக்கள் போராட்டமாக வளர வேண்டிய போராட்டத்தை, ஆயுதக் குழுக்கள் "சிறைப் பிடித்தனர்" மக்களும், அவர்கள் வாழ்நிலையும், ஆயுதக் குழுக்களின் பணயக் கைதிகளாக்கப்பட்டனர். ஆயுதம் தரித்வனுக்கெல்லாம் மக்கள் கைகட்டி வாய் பொத்தி சேவகம் செய்தனர். வங்கிக் கொள்ளை, நகைக்கடைக் கொள்ளை, தனி மனிதக் கொலைகள், சமூக விரோதிகள் என்ற பெயரில் மானுட தர்மத்திற்குப் புறம்பான தண்டனைகள், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளும் - கொலைகளும் எனத் தொடர்ந்த ஆயுதக் குழுக்களின் அடவாடித்தனத்தை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினார்கள். எண்பத்தியாறில் புலிகள் மற்றைய இயங்க உறுபினர்களை கொலை செய்து, பகிரங்கமாக அவர்களைத் தீ மூட்டி, அரைகுறை உயிருடன் துடிக்கத் துடிக்க எரித்தபோது, அந்தக் கொலைகாரர்களுக்கு கொக்கொ கோலா கொடுத்து, அந்தக் கொலைகளை வேடிக்கை பார்த்தார்கள்.

ஒட்டுமொத்த போராட்டத்தையும் தமது முளுக் கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்த புலிகள், பணயக் கைதிகளாக்கப்பட்ட தமிழினத்தை ஆட்டிப்படைக்கும் ஏக போக எசமானார்னார்கள். இன்னிலையில் புலிகளின் கொடுங்கோன்மையை மக்கள் நியாயப்படுத்த பழகிக்கொண்டார்கள். "அவர்களை விட்டால் யார் இருக்கிறார்கள்" "என்ன இருந்தாலும் தமிழன் என்ற பெருமையை, உலகம் முழுக்கப் பரப்பியது அவர்கள் தானே" "புலிகள் இல்லாதுபோனால்..! சிங்களவன் நம்மளை எப்பவோ கொன்று போட்டிருப்பான்" என்பது போன்ற நூற்றுக் கணக்கான நியாயங்களைக் கூறி, புலிகளின் "சட்டத்தரணிகளாகி" அவர்களின் கொடுமைக்கு இசைவாக்கம் அடைந்தார்கள். புலம்பெயர்ந்த உலகின் எந்த மூலைக்குப் போனாலும் கூட, புலிகளின் கொடுமைக்கு இசைவாக்கம் அடைந்த பணயக் கைதிகளாகத் தமது சீவியத்தைத் தொடர்ந்தார்கள்.

ஏன், புலிகளை அரசியல் அடிப்படையில் எதிர்த்தவர்கள் கூட, அவர்களின் இருப்பை நியாயப்படுத்தினார்கள். புலிகளின் அரசியல் மற்றும் ஆயுதச் செயற்பாடு தவறெனத் தெரிந்திருந்த பலர், காலப்போக்கில் புலிகளின் இருப்புத்தான் தமிழினத்தின் விடுதலைக்கான ஒரேவளி என்று கூறி, புலிகளுக்கு சேவகம் செய்தார்கள். ஆரம்பத்தில் கூறியது போன்று தெரிவுகளற்ற நிலையில், ஒரு பெண் எவ்வாறு கொடுமை செய்யும் கணவனுக்கு இசைவாக்கம் அடைகிறளோ அதேபோல, வங்கிக் கொள்ளையர்களால் பணயக் கைதிகளாக்கப்பட்ட வங்கி ஊழியர்கள் எவ்வாறு கொள்ளையர்களின் கொடுமைக்கு இசைந்து, அந்தக் கொள்ளையர்களின் கோரிக்கைக்காக குரல் கொடுக்கிறார்களோ அதே போன்றே.., புலிகளிடம் பணயக் கைதிகளான கையறு நிலையடைத்த தமிழ் சமூகமும் Stockholm syndrome உளவியல் நிலைப்பாட்டில் உழல்கிறது.

பிரபாகரனின் இறப்பும் - புலிகளின் அழிவும், புலிகளை விமர்சித்து சமூக மாற்றதுக்காக போராடும் பலருக்கு ஒருவகை மன அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. சமூக அரசியலின் ஆதிக்க சிந்தனைக்கு வெளியில் உனைப் போன்றவர்கள் இயங்கினாலும், நீங்களும் தமிழ் சமூகத்தின் அங்கத்தவர்கள் தானே? இப்போ விளங்குகிறதை உனது பிரச்சினைக்கான காரணத்தை? பெருமூச்சு விட்டபடி, தனது விளக்கவுரையை நிறைவு செய்தாள் எனது நண்பி. அவளின் விளக்கவுரையை, ஒரு மாணவன் போலக் கேட்டு முடித்த பின்புதான் எனக்கு நெஞ்சுக்குள் தண்ணீர் வந்தது. என்னை ஆசுவாசப்படுத்திய அவள், தொடர்ந்து வந்த நாட்களில் எனது Stockholm syndrome உளவியல் நிலைப்பாடு தீர, எனக்கு சிகிச்சை தருவதாகவும் வாக்களித்தாள். இருபது வருடங்களாக எனக்கு அவளைத் தெரிந்திருந்தும், அன்று தான் அவளின் மீதும், அவளின் உளவள ஆலோசகர் தொழில் மீதும் எனக்கு மதிப்பு வந்தது. நானும் ஒரு சாதரண தமிழ் ஆண் தானே.

பின் வந்த நாட்களில், நான் அவளின் ஆலோசனைப்படி நித்திரைக்குப் போகுமுன், ஒவ்வொரு நாளும் அவளுடன் தொலைபேசி மூலமாகவும், facebook chat - skil மூலமும் தொடர்பு கொண்டு, அவளின் வளிகாட்டலின் அடிப்படையில், மன ஆற்றுகைப் பயிற்சியில் ஈடுபட்டேன். சில வாரங்களிலேயே “நான் பாடிக் கொண்டே இருப்பேன்” என்ற பாடலின்... யார் நெஞ்சில் காமம் இல்லை..,
யார் நெஞ்சில் கோபம் இல்லை.., மகாத்மாக்கள் என்றே, இன்று யாரும் இல்லையே.., ஒரே நெஞ்சம் பாவம் செய்யும்.., அதே நெஞ்சம் தர்மம் செய்யும்.., எந்த நேரம் செய்யும் என்பதில்லையே..!” என்ற வரிகளும் அப்பாடலின் இசையும், தலைவர் பிரபாகரனின் மறைவும், என் ஆழ் மனதில் இருந்து அகன்று “கண்கள் இரண்டால்.., உன் கண்கள் இரண்டால்” என்ற பாடலின்

இரவும் அல்லாத பகலும் அல்லாத பொழுதுகள் உன்னோடு கழியுமா?
தொடவும் கூடாத படவும் கூடாத இடைவெளி அப்போது குறையுமா?
மடியினில் சாய்ந்திட துடிக்குதே மறுபுறம் நாணமும் தடுக்குதே
இது வரை யாரிடமும் சொல்லாத கதை...

என்ற வரிகளும், பிரபாகரனின் கொத்தப்பட்ட தலைக்குப் பதிலாக அவளின் முகமும், என் மனதை ஆட்கொண்டன. அவளும், தனக்கும் இரவு பகல் என்ற வித்தியாசம் இல்லாமல் “கண்கள் இரண்டால், உன் கண்கள் இரண்டால்” என்ற பாடலும் என் முகமும் ஆழ்மனதில் தெரிவதாக, நேரடியாகச் சொல்லாமல் SMS அனுப்பியிருந்தாள். இந்த விடயம் அறிந்த எனக்கும் அவளுக்கும் பொதுவான என் நண்பன் ஒருவன் “என்ன இரவு பகல் பாராமல், நீங்கள் ரெண்டு பேரும் ஒருத்தருக் கொருத்தர் மாறிமாறி கடலை போடுறியாளாம்..! உண்மையா..!?” என்று எமது facebook பக்கத்தில் பின்னூட்டம் விடும்வரை தொடர்ந்தது.

நான் ஆரம்பத்தில் சொன்னது போல, கடாபியின் அழிவின் பின்பு, பாரதி பாடல் எனக்குள் ஒலிக்கிறது. பிரபாகரன் இறந்த போது இருந்த மனவழுத்தம் எனக்குள் இப்போது இல்லை. லிபிய மக்களை ஆட்டிப் படைத்த கொடுங்கோலன் அழிந்தான் என்ற மகிழ்வே என்னுள் பிரவாகிக்கிறது. ஏகாதிபத்தியத்திற்கு எதிரானவன், பேரினவாத அரசுக்கு எதிரானவன் என்ற ஒரே காரணத்துக்காக, தன் சொந்த மக்களை கொடுமைப்படுத்திய கொடுங்கோலர்களுக்காக கவலைப்படும் மனநிலை இன்று என்னிடமில்லை. ஆனாலும் எனது நிலைப்பாட்டை பகிரங்கமாக எனது தோழர்களிடம் சொல்ல, எனக்கு மனத்திடம் தேவை என உணர்கிறேன். அந்த மனத்திடம் எனக்குள் உருவாக எனக்கு இப்போ உதவி தேவை. நான் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?
நீங்கள் சொல்லவருவது எனக்கு விளங்குகிறது. ஆம், மீண்டும் அந்தத் தோழியுடன் தொடர்பு கொண்டு, எனது மனத்திடம் சம்பந்தமாக, அவளுடன் கடலை போடலாமென நினைத்துள்ளேன்.

உசாத்துணை :

1. http://en.wikipedia.org/wiki/Stockholm_syndrome
2. http://www.youtube.com/watch?v=DfqohSqlIc8
3. . http://www.youtube.com/watch?v=-VJdkXG30XQ

-கார்த்திகேசு கலியுகவரன்.

# இலங்கையின் வரவு செலவு ஒதுக்கீடுகள்

## சிங்கள தேசியம் சார்ந்ததா..? தமிழ் மக்களுக்கு எதிரானதா..?



இப்படிக் கருதுவதும், நம்புவதும் தவறானது. உண்மைக்கு புறம்பானது. அனைத்து தகவல்களும் வெளிப்படையாக இருக்க, திட்டமிட்டு திணிக்கும் இனவாதம் மட்டுமே எம்மை இங்கு குருடாக்குகின்றது.

அப்படியாயின், ஒரு நாட்டின் வரவும் செலவும் யாருக்குச் சேவை செய்கின்றது?

பேரினவாதம் தமிழ் மக்கள் மேலான தொடர்ச்சியான ஒடுக்குமுறையைச் சார்ந்து, அது சிங்கள தேசியத்துக்கு சேவை செய்வதாகவே தமிழ் பொதுப்புத்தி தொடர்ந்து விளக்கம் கொண்டுள்ளது. இது, அனைத்தையும் இனவாதத்தின் ஊடாக பார்க்கின்ற குருட்டுத்தனமான பார்வையாகும். இது இயல்பில் தன் கண்ணில் தானே குத்துவதில் தான் போய் முடிவடைகின்றது. இலங்கையின் வரவு செலவு ஒதுக்கீடுகள் தமிழ் மக்களுக்கு எதிராக, சிங்கள மக்களுக்கு சார்பா-னதாக கருதுகின்ற போக்கு, தமிழ்மக்களுக்கே எதிரானதாக இருக்கின்றது. உண்மையை உண்மையாகப் பார்க்காது, அதைக் கூர்ந்து ஆராயாது எம்மை நாம் முட்டாளாக்குவது தான் எம்மை சுற்றி தொடர்ந்து நிகழ்கின்றது. இலங்கையின் வரவு செலவு திட்டம் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, அது சிங்கள மக்களுக்கும் எதிரானது என்பதை நாம் வரவு செலவு தரவுகள் மூலம் புரிந்துகொள்வது அவசிய மாகும். இதன் மூலம் ஏன் இந்த அரசு இனவாதத்தை தமிழ் மக்களுக்கு எதிராக முன்தள்ளுகின்றது என்பதை நாம் புரிந்து கொள்ள உதவும். இதன் மூலம் மக்களின் எதிரி யாரென்ற அரசியல் பார்வையை விரிவாக்கவே இக்கட்டுரை முனைகின்றது. நாம் முன்வைக்கும் கோட்பாடு, எப்படி யதார்த்தத்துடன் ஒன்றியிருக்கின்றது என்பதை இக்கட்டுரை எடுத்துக்காட்ட முனைகின்றது.

இன்று பொதுவாக வரவு செலவுத் திட்டம் மீதான விமர்சனத்தை செய்யும் அரசியல்வாதிகள் முதல், பொருளாரதார நிபுணர்கள் வரை செலவின் பெரும் பகுதிக்கு என்ன நடக்கின்றது என்பதை மக்களுக்கு சொல்வது கிடையாது. அது ஏனெனில் இந்த மக்கள் விரோதத்துடன், அவர்கள் கொண்டுள்ள அரசியல் உடன்பாடு தான் இதற்குக் காரணம். இதிலிருந்து அவர்கள் யார் என்பதையும் நாம் அறிய முடியும். வரவின் பெரும்பகுதியை யாருக்குக் கொடுக்கின்றனர் என்ற உண்மையை மக்களுக்கு மறைக்கின்றனர். தாங்கள் கொடுப்பதை மூடிமறைத்து தங்களைப் பாதுகாக்கும் பிரிவுக்கும், மக்களை ஒடுக்கும் பிரிவுக்கும் 2012இல் சிறப்புச் சலுகைகள். இந்த வகையில் ஊடகவியலாளருக்கு வட்டியில்லாக் கடனான 12 இலட்சம் ரூபாவை வழங்க உள்ளது.

இதேபோல் இந்த ஆளும் வர்க்கத்தின் மக்கள்விரோத கூறுகளை உணர்ந்து போராடும் மக்களை, ஒடுக்கும் பொலிசாரின் மூன்றாவது குழந்தைக்கு, ஒரு இலட்சம் ரூபா நன்கொடை என்று அறிவித்திருகின்றது. தமிழின அழிப்பை நடத்திய படையினருக்கு வழங்கிய அதே சிறப்புச் சலுகையை, பொலிசாருக்கு விரிவாக்கி இருக்கின்றது இந்த அரசு. ஆளும் வர்க்கத்துக்கு தலைமை தாங்கும் சர்வாதிகார கும்பல், தன்னை இதன் மூலமாக பாதுகாத்துக் கொண்டு, யாருக்கு சேவை செய்ய முனைகின்றது? இது சிங்கள மக்களுக்கு மட்டும் என்பதாக இல்லை. 222000 கோடி (2220 பில்லியன்) ரூபாவாக உள்ள வரவும் செலவும், இதில் யாருக்கு சேவை செய்கின்றது? கோட்பாட்டுரீதியாக நாம் கூறிய உண்மைகளை, நடைமுறையில் எப்படி என்பதை புரிந்து கொள்ளவேண்டும்.

ஆம் இலங்கையின் வரவு செலவு என்பது கடன் கொடுப்பனவையும், அதற்கான வட்டிக்

கொடுப்பனவையுமே மையப்படுத்துகின்றது. இதைப் பாதுகாத்து, மக்களை ஒடுக்கி ஆள்வதற்காகத்தான் நிதியின் பெரும் பகுதியை அரசு இங்கு ஒதுக்கியிருக்கின்றது. 222000 கோடி (2220 பில்லியன்) ரூபாய் வருமானத்தில் 57000 கோடி (570 பில்லியன் - 25.67 சதவீதம்) ரூபாவை, உலகிடமிருந்து வாங்கிய கடனில் ஒரு பகுதியைக் கொடுப்பதற்கு செலவுப் பக்கத்தில் மறைத்துக் காட்டுகின்றது. அதே போல வாங்கிய கடனுக்கு வட்டியாக 37003 கோடி (370 பில்லியன் - 16.66 சதவீதம்) ரூபாவை கொடுக்கின்ற நிலைக்குள் அது உள்ளது. ஆக மொத்தத்தில் இலங்கையின் வரவு செலவில் 42 சதவீதத்தை, கடன் மற்றும் வட்டி கொடுப்பதற்காகவே ஒதுக்கியுள்ளது. இது எதை எடுத்துக் காட்டுகின்றது என்றால், முழு வரவு செலவுத் திட்டமும், கடன்வாங்கி வட்டி செலுத்தும் நோக்கில் தான் தொடர்ந்து தயாரிக்கப்படுகின்றது.

இங்கு உங்களுக்கு தேசியப் பற்றுடனான ஒரு சந்தேகம் வரலாம். அதாவது கடனையும் வட்டியையும் கொடுத்து, நாட்டை விடுவித்து விட்டால் நல்லதுதானே என்ற நல்ல சிந்தனையாக அது இருக்கலாம். ஆனால் அதுதான் நோக்கம் என்றால், உங்களைப் போல் நாங்களும் மகிழ்ச்சி அடைய முடியும். உண்மைதான் என்ன? கடன் வைத்திருப்பதும், வட்டி செலுத்துவதும் தான் உலகமயமாக்கலில் கட்டாயமாக்கப்பட்ட ஒரு கொள்கை. நிதி மூலதனம் வருடம் வருடம் தன்னைப் பெருக்கிக் கொள்ளும் கொள்கைதான், நாட்டின் வளத்தின் பெரும்பகுதியை மக்களுக்கு கிடைக்காத வண்ணம் தொடர்ந்து திருடுகின்றது. அதற்கு அரசு உதவுகின்றது. இந்தச் சூறைாடலை தொடர்ந்து நடத்த, பெரும் நிதிமூலதனத்தை இலங்கையின் கடனாக கணக்கு வைத்திருக்கின்றது. இப்படி 2010 இறுதியில் இலங்கையின் மொத்தக் கடன் 330100 கோடி (3301 பில்லியன்) ரூபாவாக இருந்தது. அதேநேரம் 2010 மொத்த வரவு செலவுத் தொகை 175111 கோடி (1751 பில்லியன்) ரூபாவாகும். ஆக தேசிய வருமானத்தை விட கடன் அண்ணளவாக இரண்டு மடங்கு அதிகமாகும். 2012 இல் தேசிய வருமானம் 222000 கோடி (2220 பில்லியன்) ரூபாதான். இதில் இருந்து என்ன தெரிகின்றது, தேசிய வருமானத்தை மொத்தமாகக் கொடுத்தாலும், கடனை அடைக்க முடியாது. 2010 முடிய உள்நாட்டின் மொத்த உற்பத்தியுடன் ஒப்பிட்டால், கடன் 86.76 சதவீதமா-கும். உலகில் மொத்த உள்நாட்டின் உற்பத்தியில் அதிக கடன் கொண்ட நாடுகளின் தரவரிசையில், இலங்கை 13 ம் இடத்தில் உள்ளது. வட்டி கொடுக்க முடியாத பொருளாதார நெருக்கடிக்குரிய நாடுகளின் வரிசையில் இலங்கை முன்னேறுகின்றது.

2012 வரவு செலவு மூலம் வட்டி மற்றும் கடன் கொடுப்பனவை கொடுக்க முடியாது மீளவும் 26243 கோடி (262 பில்லியன் - 11.82 சதவீதம்) ரூபாய் கடன் வாங்குகின்றது. அதாவது வட்டிக்கு வட்டி கட்டுகின்றது. கடன் வாங்குவதும், வட்டி கொடுப்பதுவும், வட்டிக்கு வட்டி கொடுப்பதுவும் நாட்டின் கொள்கையாகிவிட்டது. இது எப்படி தொடருகின்றது என்பதை நாம் மற்றொரு புள்ளிவிபரம் மூலமும் தெரிந்து கொள்வோம். இங்கு கடன் மற்றும் வட்டி கொடுப்பனவை புரிந்துகொள்ள, 2010 முதல் 2014 வரையான காலத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராய்வோம். 2010 இல் கடனின் ஒரு பகுதியையும், வட்டியாகவும் கொடுத்தது 80483 கோடி (804 பில்லியன் மொத்த வரவு செலவில் 45.96 சதவீதம்) ரூபாவாகும். இது 2011 இல் 84048 கோடி (840 பில்லியன் மொத்த வரவு செலவில் 42.67 சதவீதம் ) ரூபாவைக் கொடுத்தனர். 2012 இல் 94003 (940 பில்லியன் - மொத்த வரவு செலவில் 42.34 சதவீதம்) ரூபாயைக் கொடுக்க ஒதுக்கி உள்ளனர். 2013 இல் 91847 கோடி (918 பில்லியன் - மொத்த வரவு செலவில் 40.0 சதவீதத்தையும்) ரூபாயையும், 2014 இல் 98033 கோடி (980 பில்லியன் - மொத்த வரவு செலவில் 42.63 சதவீதம்) ரூபாயை கொடுக்க முடியும் என்று கணிப்பிட்டுள்ளனர். இப்படி தேசிய வருமானத்தை கொடுப்பதை அடிப்படையாக கொண்ட இலங்கைத் தேசியம், சிங்கள தேசியமல்ல.



2010 - 2014 வரையான ஐந்து வருடத்தை எடுத்தால் மொத்த கடனின் மீள்கொடுப்பனவு 258134 கோடி (2581 பில்லியன்) ரூபாவாக இருக்கின்றது. இது போல் வட்டி கொடுப்பனவு 190280 கோடி (1902 பில்லியன்) ரூபாவாக இருக்கின்றது. ஐந்து வருடத்தில் மொத்த கொடுப்பனவு 448414 கோடி (4484 பில்லியன்) ரூபாவாகும். நாட்டின் மொத்த கடன் 330100 கோடி (3301 பில்லியன்) ரூபாவாகும். ஐந்து வருடத்தில் மொத்தக் கடனை விட, மேலதிகமாக 118314 கோடி (1184 பில்லியன்) ரூபாவை கொடுத்து இருப்போம். ஆனால் கடன் தொகை முன்னையதை விட மேலதிகமாக தொடர்ந்து அதிகரித்தே இருக்கும். இப்படி சூறையாடுவது தான் உலகமயமாதல் கொள்கை.

இதுதான் பல வருடமாக தொடரும் தேசியக்கொள்கை. இது சிங்கள மக்கள் நலன் சார்ந்த இனக் கொள்கையல்ல. இதனால் தான் உலகவங்கி இதை ஆதரித்து, கண்காணிக்கின்றது. இதை சிங்கள மக்களிடம் மூடிமறைக்க, தமிழ்மக்கள் மேலானா இனவாத ஒடுக்குமுறையை ஏவுகின்றது. தமிழ் மக்கள் இதை தெரிந்து கொண்டு சிங்கள மக்களுடன் சேர்ந்து போராடாமல் இருக்க, தமிழ் குறுந்தேசிய இனவாதம் அரசுக்கு உதவுகின்றது. இந்த உண்மையை எந்த அரசியல் கட்சியும் இன்று முன்வைப்பதில்லை.

*2010 முதல் 2014 வரையான காலத்தில் நாட்டையும் மக்களையும் சூறையாடி வட்டி கொடுப்பனவாக மொத்த தேசிய வருமானத்தில் இருந்து கொடுப்பதைப் பார்ப்போம். இது 2010 இல் 19.85 சதவீதமும், 2011 இல் 18.4 சதவீதமும், 2012 இல் 16.66 வீதமும், 2013 இல் 17.42 சதவீதமும், 2014 இல் 18.69 சதவீதமாக இருப்பதை இங்கு நாம் காண்கின்றோம். மறுதளத்தில் மக்கள் வாழ்வு சார்ந்த கல்வி மற்றும் சுகாதார ஒதுக்கீடுகளைப் பார்ப்போம். சுகாதாரத்துறைக்கு 2012 ஒதுக்கியது 74 பில்லியன் ரூபாவாகும். அதாவது 3.33 சதவீதமாகும். இது 2010 இல் 3.01 சதவீதமாகவும், 2011 இல் 2.54 சதவீதமாகவும் இருந்தது. இதுபோல் கல்விக்கு ஒதுக்கியது 33 பில்லியன் ரூபாவாகும். அதாவது 1.49 சதவீதமாகும். இது 2011 இல் 1.61 சதவீதமாகவும், 2010 இல் 1.61 சதவீத மாகவும் இருந்தது. இது எதை எடுத்துக் காட்டுகின்றது? மக்கள் சாாந்த அடிப்படைத் தேவைகளை புறக்கணித்து, வட்டிக்கொடுப்பனவை திருப்தி செய்யும் கொள்கை இங்கும் அப்பட்டமாக அம்பலமாகின்றது. ஆக இந்த அரசு சிங்கள் மக்கள சார்ந்த இனவாத தேசியத்தைக் கூட கொண்டதல்ல. மாறாக நிதிமூலதனத்தையும், மூலதனத்தையும் திருப்தி செய்யும் அரசுதான் இது. இதை சிங்கள மக்கள் முன் மூடிமறைக்கத்தான், தமிழ் மக்களுக்கு எதிரான குறுகிய சிங்கள இனவாதத்தை திணிக்கின்றது. தமிழ்மக்கள் இந்த உண்மையை புரிந்துகொள்ளாது இருக்க, சிங்கள மக்களுக்கு எதிரான குறுந் தமிழ்தேசியத்தை தமிழ்மக்கள் மேல் திணிக்கின்றனர். மக்கள் விரோத இந்த அரசு, மூலதனத்தைப் பாதுகாப்பதையே அடிப்படையாகக் கொண்டது. இதனால் படைப்பலத்தை நம்பி, அதை தொடர்ந்து பெருக்குகின்றது. அதற்கான பாரிய நிதி ஒதுக்கீட்டை செய்கின்றது. நாட்டை இராணுவ மயமாக்கிவரும் அரசின் இந்தக் கொள்கைக்கு அமைய பாதுகாப்புக்கு 2012 இல் ஒதுக்கியது 22993 கோடி (230 பில்லியன் 10.35 சதவீதம்) ரூபாவாகும். இது கூட நேரடியான ஒதுக்கீடு. இதை சுற்றிய மறைமுகமான ஒதுக்கீடுகள் உண்டு. தொடர்ந்து இராணுவ மயமாக்கும் கொள்கையின் அடிப்படையில் 2013 இல் 249 பில்லியன் ரூபாவும், 2014 இல் 258 பில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்ய உள்ளதாக 2012 வரவு செலவு திட்டம் உறுதியளிக்கின்றது. நாட்டை இராணுவமயமாக்கல் மூலம், மக்களை ஒடுக்கி வட்டியை கொடுப்பதை உறுதி செய்கின்றது இந்த அரசு. இதை சிங்கள மக்கள் நலன்சார் அரசு அல்ல. இனவாதத்தைத் தொடர்ந்து தூண்டுவதன் மூலம் மக்களை பிளந்து மோதவிடுதவன் மூலம், அவர்களைச் சுரண்டி அதை நிதிமூலதனத்துக்கு கொடுக்கும் மக்கள் விரோத அரசு இது.*

மொத்தத்தில் நாட்டையும் மக்களையும் இந்த இந்த எல்லைக்குள் தான் ஒடுக்கியாளுகின்றனர். இங்கு அரசு பீற்றிக்கொள்ளும் சிங்கள் பேரினவாத தேசியம் என்பது, சிங்கள மக்களுக்கானதல்ல. இதை தமிழ்மக்கள் புரிந்துகொள்வதன் மூலம், எதிரிகள் யார் என்பதையும் நண்பர்கள் யார் என்பதையும் அடையாளம் காணமுடியும். தமிழ்மக்கள் போல்தான் சிங்கள மக்களையும், இந்த அரசு ஒடுக்கி சுரண்டிக் கொழுக்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

*கட்டுரைக்குரிய தரவுகள் :*
*2012 க்கான இலங்கை அரசு சமர்ப்பித்த வரவு செலவு திட்ட அறிக்கை*
*அமெரிக்க உளவு அமைப்பான சிஐஏ இலங்கை பற்றி வெளியிட்டுள்ள அறிக்கை*

**-பி. இரயாகரன்.**

## புதைகுழியினை நோக்கும் முதலாளித்துவமும் ஆர்த்தெழும் மக்கள் போராட்டங்களும்!

உலகை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நினைக்கும் அமெரிக்காவில் தனது மக்களின் அடிப்படைப் பிரச்சனைகளைக் கூட கண்டறியாது செயற்பட்டு வருவதை எடுத்துக் காட்டும் வகையிலும் பெருமுதலாளிகள் தான் உலகை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர் என்பதை உணர்த்தும் வகையில் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் துவங்கிய வால் தெரு ஆக்கிரமிப்பு போராட்டம் தற்போது அமெரிக்கா முழுவதும் நடந்து வருகின்றது. குறிப்பாக இப்போராட்டமானது வாஷிங்டனிலும் இரண்டு வாரமாகத் தொடரந்து நடந்து வருகின்றன. அமெரிக்கா உட்பட உலகின் நிதி மேலாண்மையை தனியார் நிறுவனங்களின் ஆதிக்கம் அதிகரித்து வருவதை எதிர்த்து கடந்த ஒரு மாத காலமாக உலகப் பெரருளாதாரத்தையும் அமெரிக்காவின் பொருளாதாரத்தையும் நிர்ணயிக்கும் தெருவான வால் தெருவில் தொடர் போராட்டங்களை அங்குள்ள சமூக அக்கறை கொண்டவர்கள் நடத்தி வருகின்றனர்.




இப்போராட்டம் இன்று முதல் பிரித்தானியாவிலும் ஆரம்பிக்கப்படுகின்றது. இது வால் தெரு போராட்டத்தின் தொடர்ச்சியே. அரபு நாடுகளில் மக்களின் எழுச்சியை அரபு மக்களின் வசந்தம் என வர்ணித்த அமெரிக்கா தற்போதுஇ தனது நாட்டில் சுய அரசின் மூலதனக் கொள்கைக்கு எதிராக தொடங்கிய போராட்டத்தை என்னவென்று சொல்லப்போகின்றது? இப்போராட்டம் மக்களின் கவனத்தை பெற்று மிகப் பெரிதாக வளரும் பட்சத்தில் இந்த போராட்டத்தை எதாவது ஒரு வகையில் நசுக்க முற்படும். ஆனால் தற்போது உலக பொருளாதார நெருக்கடியின் காரணமாக மீளவும் இவ்வாறான போராட்டங்கள் வெடிப்பதை எவராலும் தடுக்க முடியாது.

அமெரிக்காவில் நடக்கும் இப்போராட்டத்திற்கு தமிழர்களாகிய நாமும் எமது ஆதரவை வழங்க வேண்டும். உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்ற வாசகத்திற்கு ஒப்ப நாமும் இப்போராட்டத்துக்கு ஆதரவை வழங்குவோம்.

# புதிய உலக ஒழுங்கமைப்பும் பொலித்தீன் பூக்களும்.. !



இன்று உலகத்தின் மிகப்பெரிய பிரச்சனையாக இருப்பது பொலித்தீன் பூக்கள் என்றால் வாசகர்களுக்குச் சிரிப்புத்தான் வரும். இது என்ன பொலித்தீன் பூக்கள்' என்று நீங்கள் கேட்கலாம். இன்று ஆபிரிக்க மற்றும் மூன்றாம் நான்காம் உலக வீதிகளின் ஓரங்களில் தினமும் மிகையாகப் பூத்துக்கிடப்பவைதான் இந்தப் பொலித்தீன் பூக்கள்! ஐரோப்பா முதல் உலகம் பூராகவும் பூங்காக்களிலும் காடுகளிலும் என்று பூத்துக் குலுங்குபவை இந்த பொலித்தீன் பூக்கள் என்றால் அது மிகையாகாது! ஆனால் அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் இன்று இதை ஆபிரிக்காவின் பூக்கள் என்று செல்லமாக அழைப்பதை நாம் காணலாம்.

உலகில் காணப்படும் பொலித்தீன் கொள்ளளவுகளில் மட்டும் 44சதவீதத்தை ஆசிய பசுபிக் நாடுகள் கொண்டுள்ளன. இது கிட்டத்தட்ட 12மில்லியன் தொன்களுக்கு மேலாகக் காணப்படுகிறது. இதில் இந்தியாவும், சீனாவும் மட்டுமே 8மில்லியன் தொன்களுக்கு மேலாகக் கொண்டுமுள்ளது. இன்றைய புதியஉலக ஒழுங்கமைப்பு நகர்வில் (2006) உலகின் இரண்டாவது பெரிய உற்பத்தியாகிய பொலித்தீன் பிளாஸ்திக் உற்பத்திகள் ஆசிய பசுபிக் நாடுகள் மத்தியகிழக்கு நாடுகளின் சந்தைப் பகிர்வின் ஊடாக மொத்த உலகக் கொள்ளளவில் 80 சதவீதத்தை கைப்பற்றும் புதிய உலக ஒழுங்கமைப்பு சாத்தியப்பாடான நிலைகளை எட்டியுள்ளது. (இது மொத்த பிளாஸ்திக் உற்பத்தியையும் உள்ளடக்கியது) ஆசிய பசுபிக் நாடுகளில் அன்றாடம் பாவிக்கப்படும் குடிநீர், பால், எண்ணெய், சாராயம் போன்றவை பொலுத்தீனில் பாவனையில் வந்துள்ளது. சாப்பாட்டுக் கடைகளின் கட்டுணவு வாழையிலை மற்றும் இலை-வகைகளை இழந்து இது பொலித்தீன் மயமாக-வே மாறியும் இருக்கிறது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக்குக்கள் நூறாண்டுகள் தொடக்கம் பலநூற்றாண்டுகள் வரை மண்ணுக்குள் உக்கிப்போகாமல் இருப்பதால் இது பெரும் பிரச்சனையாக பின்தங்கிய நாடுகளில் சீர்கேடுகளாகக் காணப்படுகிறது. மேலைத்தேய நாடுகளில் இது மறு உற்பத்தி அரங்குக்கு வெகுவாக வராதபோதும் இவை எரியூட்டப்பட்டு வளிமண்டலத்தில் கரியமிலவாயுவாக கரைந்து கலந்தும் விடுகிறது.

உலக உற்பத்தியில் பொலுத்தீன் மற்றும் பிளாஸ்திக் 03 சதவீதமே மீள அரங்குக்கு (றிசேக்கிள்) வருகிறது. கடதாசி 30 சதவீதமும் உலோகங்கள் 35 சதவீமும் கண்ணாடிச் சிதைவுகள் 18 சதவீதமும் மீளப் பெறப்படுகிறது. இந்நிலையில் தான் வளிமண்டலத்தில் பொலுத்தீன் மற்றும் பிளாஸ்திக் கரியமிலவாயு மற்றும் வளிமண்டலச் சீர்கேடுகளை ஏற்படுத்துவதாக உலகில் பெரும் குரல்கள் எழுந்தும் வருகின்றன. இதனால் இன்றைய புதிய உலக ஒழுங்கமைப்புக்குள் இப்பிளாஸ்திக் உற்பத்தி (பொலுத்தீன் உட்பட) மறுசீர் அமைக்கப்பட வேண்டும் என்ற புதிய கடுமையான நிபந்தனைகளுக்கு உள்ளாகின்றன. இதன் அடிப்படையில், அண்மையில் இலங்கையில் வெளியாகிய இரு செய்திகளைக் கவனித்துப் பாருங்கள்.

ஒன்று, யாழ்.போதனா வைத்தியசாலையில் ஏற்கனவே தாம் பொலித்தீன் பாவனைகளுக்கு தடை விதிப்பதாக தெரிவித்திருந்தும் இதுவரையில் செவ்வனே அந்த நடவடிக்கையை முன்னெடுக்காததினால் இத் திட்டத்தை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் மூலம் உத்தியோகபூர்வமாக அமுல்படுத்தி இச்சட்டத்தை மீறுபவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர். பவானி பசுபதிராஜா தெரிவித்துள்ளார்.

அதிகளவில் பொலுத்தீன் பாவனை காரணமாக யாழ்போதனா வைத்தியசாலை நீர் வடிகாலமைப்பில் தடங்கல்கள் ஏற்படுவதாகவும் இதனால் டெங்கு காரணியான நுளம்புகள் உண்டாகும் வாய்ப்பு அதிகமுள்ளதாகவும் இதுபோன்ற காரணங்களிலாலேயே இந்நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக. (July28,2010 - 01:03pm) இந்தச்செய்தி கூறிச்செல்கிறது. இச்செய்தி உள்ளிட்ட சூழலில் இதன் பின்னணியில் கடந்த 30 வருட கால யுத்தத்தில் யாழ் பெரியாஸ்பத்திரியில் மருத்துவத்துக்காக பாவிக்கப்பட்ட ஏராளமான பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக் உரிய முறையில் மீள் உற்பத்திக்கு அல்லது எரியூட்டலுக்கு கொண்டுவரப்பட்ட மீள் ஒழுங்கமைப்பையும் கொண்டிருந்ததா? என்று இன்னொரு கேள்வியும் உண்டு. இச்செய்திகளோடு செய்தியாகத் தெற்கிலே இரண்டாவதாக இன்னொரு செய்தியும் வந்திருந்தது. இம்முறை கண்டி ஷெபெரகெரா திருவிழாவின் போது பொலித்தீன் மற்றும் பிளாஸ்த்திக் பாவனைப் பொருட்களுக்காக புதிய ஒழுங்குவிதிகளை அரசு அறிவித்திருந்தது. இவை நல்ல விடயம் என்றாலும் இந்த அரசியல் விளையாட்டில் தேர்தல், பொங்குதமிழ், மாவீரர் தினம், அரசியல்வாதிகள் கூட்டம், ஜனாதிபதியின் வருகை... போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளில் பாவிக்கப்படும் பிளாஸ்திக் மற்றும் பொலித்தீன் கொடிகள் போன்றவற்றின் தொகை கொஞ்ச நஞ்சமல்லவே!

கடந்த தேர்தலின் போது மட்டும் வேட்பாளர்களுக்காக தொங்கவிடப்பட்ட வர்ண பொலித்தீன் கொடி களில் அகற்றப்பட்டவை மட்மே 16754 கிலோ!

கடந்தகால யுத்தத்தில் யுத்தமுனையில் பாவிக்கப்பட்டு கேட்பாரற்று கைவிடப்பட்ட பொலித்தீன்களின் நிறை கணக்கில் அடங்காது. ஆனையிறவுச் சமரின்போது அந்தச் சமர்வெளியில் சிதறிக்கிடந்த உடல்களோடு உடல்களாக கிடந்த (புலிகளின்) வெற்றிக்காட்சிப் படங்கள் பொலித்தீன் காடாகவே காட்சியளித்தும் இருந்தது. முள்ளிவாய்க்கால் யுத்தப் பிரதேசமும் இன்றைய வன்னி அகதிகள் முகாமும் அதன்கூடாரமும் பிளாஸ்திக் பாவனையை உள்ளடக்கிய பொலுத்தீன் குப்பைக்காடுகள் என்பதுதான் மறுதலை உண்மையுமாகும்.

இன்று உலகத்து அரசியல்வாதிகள் முதல் உள்நாட்டு அரசியல்வாதிகள் வரை பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக் பற்றி வாய்கிழியப் பேசுவது எதற்காக என்பதுதான் நாம் பகுத்தறியவேண்டிய ஒன்றாகவுள்ளது. இந்த பிளாஸ்திக் என்ற சொல் கிரேக்க சொல்லில் (plast kos) இருந்து பெறப்பட்டது. இதன் மூலப் பொருளான (cellofan) *1866* இல் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும் இரண்டாவது உலகமகாயுத்தத்தின் பின்னரே பிளாஸ்திக் வகையானவை உலகில் உருவாகியும் இருந்தன. அதுவரை சுப்பர் மாக்கெட்டில் இருந்துவந்த பிறவுன் பேப்பர் (எமது நாட்டில் மாட்டுத்தாள் பேப்பர் தடிப்பான பாவனைக்கு) படிப்படியாகச் செயலிழந்தன. *1958* ஆம் ஆண்டு முதல்முதலாக பிளாஸ்திக் போத்தலில் கொக்கோ கோலா வெளியானதுடன் இந்தப் பிளாஸ்திக் பிரசித்தமானது அல்லது வியாபாரத்துக்காகப் பிரசித்தப்படுத்தப்பட்டது. இந்த பிளாஸ்திக்கின் வருகை மலிவான ஆகாத மூலங்களைக் கொண்டது என்பது இந்த உலக வியாபாரத்துக்குத் தெரியாததுமல்ல. இலேசான நுகர்வை மையப்படுத்தியும் இன்று கருத்தடை சாதனங்கள் (பிரிதி) முதல் ஆகாயவிமானத்தில் உதிரிப்பாகங்கள் வரை இது உலகில் நிறைந்தும் விட்டது.



*1950 ஆம் ஆண்டு முதல் பத்து வருடங்களான 1960 வரை 1.5 மில்லியன் மக்கள் இதைப் பாவிக்கும் நிலைக்குள் இது நகர்த்தப்பட்டும் இருந்தது. இது இன்று 250 மில்லியன் தொன்னைத் தாண்டி இன்று தலைவிரித்தாடும் உலகப் பிரச்சனையாக மாறியும் விட்டது. இந்தப் பிளாஸ்திக் மற்றும் பொலித்தீன் உற்பத்தியை இவர்களால் கைவிடவும் முடியாது!* ஏனென்றால் கடந்த *30* வருடங்களில் இதில் சாதாரண மனிதனின் பாதத்திலிருந்து ஆகாயம் வரை அவனது தேவைகளாகக் கலந்து இந்த உலகத்தை AK47 வரை (இலகுவான பாரம் குறைவான சுடுகலன் உற்பத்திவரை) வளர்ந்து வந்த உலக மனிதவிரோத உற்பத்தியில் ஊறிப்போன நாறிப்போன முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் தேவைக்கான உலகமிது.

உலகத்தில் குழந்தைகள் கடற்கரையில் மணல்வீடு கட்டியும் முற்றத்தில் காலைமுதல் மாலை வரை (நிலாச்சோற்றில் படுத்துறங்கும் வரை) அவர்கள் பாவித்து வந்த இயற்கையான விளையாட்டுச் சாமானான மரஉற்பத்தி மற்றும் (இயற்கை சார்ந்த) அவர்களின் விளையாட்டுச்சாமான்கள் இந்த விளையாட்டுப் பொருட்கள்- இன்று உலகத்தின் நடைமுறையில் காணாமலும் போய்விட்டது. உலகத்துக்கான குழந்தைகளின் விளையாட்டுப் பொருட்கள் பிளாஸ்திக் உருவாக்கமாக இன்று உலகச்சந்தையில் 60பில்லியன் ஈரோவில் உருவாக்கி இவர்கள் குழந்தைகளைப் பிராக் காட்டப் பாடுபடுகிறார்கள். இவர்களை விட இவ்வுலகத்தில் *20*மில்லியன் வரையிலும் மேலான குழந்தைகள் ஒருநேர வயிற்றுக்கு உணவின்றி (கடந்தகால யுத்தங்களால்) கதறியழும் எந்தக் குரலும் இந்தப் புதிய உலக ஒழுங்கமைப்பு ஜனநாயக விளையாட்டு உலகுக்கு நடைமுறையில் கேட்காமல் போனதேன்?

*2009* ஆம் ஆண்டு (G-8) மாநாட்டில் வறியநாடுகளின் உணவுத் தேவைகளுக்கான பாதுகாப்புக்காக *20*பில்லியன்($) மூன்று வருடங்களுக்குத் தேவைப்படுவதாக இது பரிந்துரைத்திருந்தது. இது சாராம்சத்தில் உலக உணவுத் தேவையின் அடிப்படையில் இவை இன்றைய உலகத்தின் பட்டினியையும் பசியின் கொடுமையையும் நிர்வாணப்படுத்தியுமுள்ளது. இன்று ஐரோப்பாவில் *(2008*ஆம் ஆண்டு) *250*மில்லியன் பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக் பாவனையில், *12*மில்லியன் தொன் குப்பையாய்ப் பெறப்படுகிறது. இதில் *5.3*மில்லியன் தொன் மீள்அரங்க உற்பத்திக்குச் செல்கிறது. கிட்டத்தட்ட *7.5*மில்லியன் தொன் எரியூட்டப்படுகிறது. மீளப்பெறப்படும் பிளாஸ்திக் மற்றும் பொலித்தீனில் மீள் உற்பத்தியில் *7*ஆயிரம் தொன் நிலப்பயன்பாட்டுக்கும் காட்டுப் (வீட்டுத் தோட்டம் உட்பட) பயன்பாட்டுக்கும் சென்றுவிடுகிறது. (இது புதிய பிளாஸ்திக் மற்றும் பொலுத்தின் தெரிவுக்கு கலக்க முடியாதவையாகத் தவிர்க்கவும் பட்டிருக்கிறது)

இன்று உலகத்தில் சந்தைப் பாவனைக்காகப் பயன்படுத்தப்படும் சொப்பிங் பாக் வீட்டுவாசல் வரையான வரவுக்குப்பின் இது பெரும்பாலும் வீசியெறியப்படுகிறது. மேற்கூறிய *250*மில்லியன் தொன் பாவனையில் இது *100* மில்லியன் தொன்கள் கண்கடையற்று சூழலில் வீசப்பட்டும் விடுகிறது. 2007ஆம் ஆண்டு அமெரிக்காவின் சாண் பிரான்சிஸ்கோவில் சொப்பிங் பாக்கின் தடை வந்ததை அடுத்து சீனா இலவசமாக வழங்கிய சொப்பிங் பாக்கை காசாக்கியது.

இதனால் சீனா 40 மில்லியாடர் சொப்பிங் பாக்கை மிச்சம் பிடித்தது 1.6மில்லியேனர் தொன் உற்பத்திக்கான தூய எண்ணையை பசுந்தாக மிச்சமும் பிடித்தும் வைத்தது. இன்றைய பொலுத்தீன் மற்றும் பிளாஸ்திக் உற்பத்தியால் வெளியேறும் கரியமிலவாயுவை பயோ BIO பிளாஸ்திக்கால் (தாவர மூலங்களில் இருந்து உருவாக்கப்படும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக்) நாலில் ஒரு பங்காகக் குறைக்க முடியும். அதாவது பயோ பிளாஸ்திக் உருவாக்கத்தால் ஒரு கிலோவில் முன்னர் தயாரிக்கப்பட்ட உற்பத்தி முறையிலிருந்து நாலில் மூன்று பங்கு கரியமில வாயுவெளியேற்றத்தை வளிமண்டலத்துக்குத் தடுக்கலாம் என்பது இதன் பிரதான தொனியாக அமைகிறது.

இன்று உலகத்தில் இருக்கும் மனிதப் புழக்கத்துக்கான உலகப் பரப்பளவு 45.45 சதவீதமாகும். இதில் தொழில் புரியும் மனிதத்தின் (இயற்கை சார்பான தொழில் பாரம்பரிய விவசாயம் உட்பட) இயற்கைவளம் 24.24 சதவீதமாகும். 2006 ஆம் ஆண்டு இயற்கையில் வெறுமனேயான நிராகரிக்கப்பட்ட நிலப்பரப்பு 13.04 சதவீதமாகும். இதில் 3 வீதமானவை போக்குவரத்து வீதிகள் புகையிரதப் போக்குவரத்துக்கள் போக எஞ்சிய 10.4 சதவீதமான நிலங்கள் இன்று எல்லாப் பிரச்சனையையும் போக்கும் மூல மருந்தாக எஞ்சியும் இருக்கிறது. (இங்கு மூலமருந்து என்பது புதிய உலக ஒழுங்கமைப்பின் நிலச்சார்பான எதிர்காலத்துக்கான சந்தை நுகர்வுக்கான புதிய வழிகள். இதை விடவும் எஞ்சிக் கைவிடப்பட்ட நிலமாக இருக்கும் 17.27 சதவீதமான நிலங்கள் இருக்கின்றன. இது ரசியா, ஆபிரிக்கா, சவுத் அமெரிக்கா மற்றும் கசத்தான் ( Kazahstan) ஆகியவையை பெரும்பாலும் கொண்டும் இருக்கிறது. இதில் 2006 ஆண்டுமுதல் 2020 ஆண்டுவரைக்காக பாவனைக்காக சில திட்டங்கள் வரையறுக்கப்பட்டுமுள்ளது. இதில் 6.36 சதவிகிதம் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. அதாவது 210 மில்லியோன் கெக்கர் பயன்படுத்தப்படுகிறது. (மொத்தமாகவுள்ள 570 மில்லியன் கெக்கரில்) மிகுதியாக உள்ள 360 மில்லியன் கெக்கர் சும்மா கிடக்கிறது. பயன்படுத்தப்படும் 6.36 சதவீதத்தில் இறைச்சிக்கான தேவைக்காக மட்டும் 2.9சதவீத நிலம் பயன்படுத்தப்படுகிறது (96 மில்லியன் கெக்கர்). இந்த முனைப்பில் மனிதருக்கான உணவு உற்பத்தியின் மேலதிகத் தேவைக்காக 1.9சதவீதமே இந்த உலகம் ஒதுக்கியுள்ளது (64 மில்லியன் கெக்கர்) இதில் 0.97 சதவீதம் புதிய பாதைகளுக்காக புகையிரதப்பாதைகள் உட்பட வடிவமைக்கிறது (32 மில்லியன் கெக்கர்) மற்றும் தாவர உரங்கள் விறகுகள் பயோபொலித்தீன் பிளாஸ்திக்குக்களுக்கான பிரயோகங்கள் 0.5சதவீதமாகவே காணப்படுகிறது.

இன்று உலகத்தில் பாவிக்கப்படக் கூடிய விவசாய நிலங்களில் 92சதவீதமன நிலங்கள் உலக சனத்தொகைக்காகவும் அதன் பயன்பாட்டு விலங்குகள் (கால் நடைகளுக்காகவும்) உட்பட்ட நித்த உணவுத் தேவையை தயாரித்தும் வருகிறது. 6 சதவீதம் தொழிற்சாலைக்கான மூல உற்பத்திகளும் இதில் 2 வீதமானவையே எரு விறகுகளைத் தயாரிக்கின்றன. மொத்தத்தில் இன்றைய பயோ தாவர மூலத்துக்கான தயாரிப்புக்கள் 0.1 சத விகித நிகழ்தகவுக்கும் குறைவான நிகழ்தகவையே இன்றைய நடப்பு உலக அமைப்புக் கொண்டும் இருக்கிறது.

இப்படி இருக்கையில் எப்படி இவர்களால் (மேற்குலக ஏகாதிபத்தியங்களால்) பயோமாசை உற்பத்தி செய்யலாம்? முதலில் பிளாஸ்த்திக் பொலித்தீன் போன்ற அடிப்படைத் தயாரிப்புக்களான மூலங்களில் குறைந்தது 14 சத வீத உலர் தாவரமூலங்களைக் கொண்டே இவை தயாரிக்கவும் படுகிறது. ஆனால் 2025ஆம் ஆண்டு பயோபிளாஸ்திக்கை ஐரோப்பிய யூனியன் 31 சதவீதத்தையும் அமெரிக்கா 28 சத விகித்தையும் ஆசியா 32 சதவீதத்தையும் உலக சந்தைக்குக் கொண்டுவரும் என்று இவ் ஆய்வுகள் கூறுகின்றன.

பயோபிளாஸ்திக் உற்பத்தி என்பது புற்கள் சோளம் கரும்பு. வகைகளை மையமாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் தாவர மூலங்களைக் கொண்ட அதி உயர் புரோட்டின் உற்பத்தியுமாகும். இதனால் கால்நடைகளுக்குத் தேவையான பெருமளவு புரோட்டின் நெருக்கடிகளைச் சந்திக்கும் என்பதைப்பற்றி இவர்கள் அதிகம் கவலைப்படப் போவதில்லை. பயோபிளாஸ்திக்கின் உற்பத்தியில் சோளம் பிரதான பங்கை இங்கே வகிக்கிறது என்பது முக்கியமானது. அதனால் சோளக்காடுகளையும் கரும்புத் தோட்டங்களையும் பொலித்தீனுக்காக (பிளாஸ்திக்குக்காக) இவர்கள் உருவாக்கப் போகிறார்கள்.

யூ.எஸ் (US) நாடுகளில் உற்பத்தியாகும் சோளம் மனித உணவுக்கு அதிகம் பயன்படுவதில்லை. இதில் 70 சதவீதமானவை கால்நடை உணவுக்கே பயன்படுகிறது. யூ.எஸ் (US) நாட்டில் ஒரு மனிதனுக்கான இறைச்சித்தேவை 1950 இல் 62 கிலோவாக இருந்தது. இது இன்று 170 கிலோவாக அதிகரித்துமுள்ளது. சீசும் பாலும் 81 கிலோவால் அதிகரிக்கிறது. மேலதிகமான நிலஉற்பத்தி சராசரி 29 கிலோவால் அதிகரிக்கிறது. யூ.எஸ் (US) நாடுகளின் இறைச்சித் தேவை இனிவரும் 40 வருடங்களில் (2050) பிளஸ் 103 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளது. 229 மில்லியன் தொன்னில் இருந்து 465 மில்லியன் தொன்னாக அதிகரிக்கிறது. பால் உற்பத்தி பிளஸ் 90 சதவீதத்தால் அதிகரிக்கிறது.580 மில்லியன் தொன்னில் இருந்து 1043 தொன்னாக அதிகரிக்கிறது. இவ்வாறு அதிகரித்துவரும் சந்தைத் தேவைகளுக்கான பக்கிங் மற்றும் நுகர்வுக்கான பணப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான இலாபங்கள் கருதியே இந்த பயோபிளஸ்திக் கோரவும் படுகிறது.

உலக பொலித்தீன் மற்றும் பிளாஸ்திக் உற்பத்தியில் 1.6 மில்லியோனர் தொழிலாளர்கள் ஈடுகின்றனர். இதேபோல உலக விவசாயத்தில் நூற்றுக்கு மேற்பட்ட மில்லியோன் தொழிலாளர்கள் ஈடுபடுகின்றனர். இந்த விவசாயிகளில்

75 வீதமானவர்கள் தமது வாழ்வாதாரத்தை நிறைவு செய்யமுடியாது திண்டாடுகின்றனர். தாங்கமுடியாத வறுமையால் தற்கொலையும் செய்கின்றனர். உலகத்துக்காக உணவு உற்பத்தியின் தேவையோடு ஒப்பிடும்போது பயோபிளாஸ்திக்கின் தேவை 250 மடங்கு குறைந்ததாகக் கருதவும் படுகிறது.இன்று பேசப்படும் சூழல் மாசுபடுதல் என்ற பேச்சுக்கூட இயற்கையோடு இணைந்து உற்பத்திசெய்யும் விவசாயி களையும் கால்நடைகளையும் எவ்வாறு பாதிக்கின்றது என்ற கருசனையில் கூட எழுப்பப்படவில்லை. இந்த முதலாளித்துவத்தின் சந்தைத் தேவைகளின் நெருக்கடிகளாலேயே இவை கதிரையில் இருந்தபடி எழுப்பப்படுகிறது.



அண்மையில் ஒரு நிகழ்ச்சியைத் தொலைக்காட்சியில் பார்க்கமுடிந்தது. இந்தியாவில் ஒருமாடு தீவனம் இல்லாமல் குப்பைத்தொட்டியை மேய்ந்தும் இருந்தது. இதை நிற்கவைத்து அதன் வயிற்றைக் கீறி சுமார் 14 கிலோ பொலித்தீனை அகற்றியும் இருந்தனர். இது ஜரோப்பாவில் ஒரு மனிதன் சுமார் நான்கு நாட்கள் பாவிக்கும் பொலுத்தீனுக்குச் சமமாவும் இருந்தது. இவ்வாறு கால்நடைகளுக்கே போதிய அளவு தீவனம் இல்லாத நிலையில் தான் இந்த பயோபிளாஸ்திக் உற்பத்தியும் பேசப்படுகிறது.

உண்மையில் ஆசிய, பசுபிக் மத்தியகிழக்குச் சந்தைகள் இப்புதிய ஒழுங்கமைப்புக்குள் இணைவதே இங்கு முக்கிய சந்தைப் பிரச்சனையாக இருக்கிறது. பொலித்தீன் உலகச்சந்தையில் 80 வீதத்தை இவைகள் கொண்டிருப்பதால்இ மேற்குலக நாடுகள் பயோ பிளாஸ்திக்கை உருவாக்கி மீள் உற்பத்திக்கான மூலமாக இவற்றைத்தாம் எதிர்காலத்தில் தக்கவைப்பதே இவர்க ளின் முதன்மை நோக்கமும் ஆகும். இதனால் இவர்கள் தமது உற்பத்திகளை இலகுவாகச் சந்தைப்படுத்தும் பணப்பிரச்சனையை சரிக்கட்டுவதுமே பிரதான நோக்கங்களாக அமைகிறது.

-சுதேகு

## பத்து மாதத்தில் உயர்சாதி குழந்தை பெறுவது எப்படி..?



**எல்லோரும் தமிழர்கள் தான். ஆனால் நாங்கள் வெள்ளாளர். நீங்கள் கரையார். எங்கள் மகன் உங்களது மகளை காதலிக்கிறேன் என்று அடம் பிடிப்பதனால், தான் நாங்கள் வேறு வழியில்லாமல் உங்களது மகளை மணம் செய்ய எங்களது தராதரத்தை விட்டு இறங்கி வந்து சம்மதித்திருக்கிறோம். திருமணத்திற்கு நீங்களும் உங்கள் பிள்ளைகளும் மட்டும் தான் வரலாம். உங்களது உறவினர்கள் ஒருவரும் வரக் கூடாது. உங்கள் சாதிக்காரர்கள் திருமணத்திற்கு வந்தால் எமது சொந்த பந்தங்கள் எம்மைக் கேவலமாக பார்ப்பார்கள்.....**

இது நடந்தது இலங்கையிலோ அன்றி தமிழ் நாட்டின் தொலை தூரக் கிராமம் ஒன்றிலோ அல்ல. என்ன எங்கே என தலையை போட்டு குழப்புகின்றீர்களா? இப்படியான கேவலம் நடந்தது லண்டனில் தான். லண்டனில் பிறந்து கல்வி கற்று தொழில் புரியும் ஒரு ஆணும் பெண்ணும் திருமணம் செய்ய முற்பட்ட போது, குறுக்கே வந்து குரைத்த ஒரு சாதி வெறிக் கும்பலின் கூச்சல்கள் தான் இவை.

இரண்டாவது நிகழ்வும் லண்டனிலேயே நிகழ்ந்துள்ளது. ஒரே இடத்தில் வேலை செய்த ஒரு உயர்சாதி வெள்ளாள ஆணும், தாழ்த்தப்பட்ட சாதிப் பெண்ணும் காதலித்தனர். அப்பெண் தனது சாதி பற்றி ஆரம்பத்திலேயே தன் காதலனுக்கு சொல்லியுமிருந்தார். பெண் வீட்டில் திருமணம் முடிக்கும்படி வற்புறுத்தியதால் காதலன் அவரின் வீட்டில் தனது காதல் கதையினைக் கூறி, தான் அப் பெண்ணை மணம் முடிக்க வேண்டும் என்று சம்மதம் வேண்டி நின்றான். சாதி குறைந்தவர்களின் வீட்டில் நாங்கள் தண்ணீர் கூட குடிக்க மாட்டோம். நீ பெண் எடுக்க போறியோ? நீ அந்த பெண்ணை மணம் செய்தால் நான் நஞ்சு குடித்து சாவேன் என்று அந்த மணாளனைப் பெற்ற மகராசி வீரசபதம் செய்தாள். ஆப்பிள் யூஸ் குடிப்பேன் என்பது போல சர்வசாதாரணமாக நஞ்சு குடிப்பேன் என்கிறாளே, மணந்தால் மரணதேவி என்ற வசனத்தினை மாற்றி பொம்பிளை வீரப்பா மாதிரி பேசுகின்றாளே அம்மா என்று பொடியன் பயந்து போனான்.

தாயில்லாமல் நானில்லை என்று குழந்தை அழுதது. சிறிது காலம் பொறுத்துப் பார்த்த பெண் இன்னொருவரை வீட்டாரின் நெருக்குதலினால் மணம் செய்ய போனபோது, உன்னை விட்டால் யாருமில்லை என்று காதலன் வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியது. அம்மா சாகும் வரை எனக்காக பொறுத்திரு என்றது. உன்னைப் போன்ற கோழைக்கு என் வாழ்வில் இடமில்லை என்று உறுதியாக மறுத்து விட்ட அப்பெண்

தனது வீட்டாரின் விருப்பத்திற்கு இணங்கி புது வாழ்வு தொடங்கினாள்.
தமிழ் இளைஞர்கள் போல், குறிப்பாக யாழ்ப்பாண தமிழ் இளைஞர்கள் போல் நல்லவர்கள் யாருமில்லை. ஏனென்றால் வாலிப வயதில் புகைபிடித்தல், மது அருந்துதல், பாடசாலைக்கு போகாது வெளியே சுற்றித் திரிதல், கள்ளக் கோழி பிடித்தல், சந்தர்ப்பம் கிடைத்தால் காதலிக்கும் பெண்ணுடன் உடல் உறவு கொள்ளுதல் போன்றன எல்லாவற்றினையும் செய்தாலும், திருமணம் என்று வரும் போது தாய் தந்தையின் சொற்கேட்டு நடக்கும் புத்திரசிகாமணிகளாக மாறிவிடுவார்கள். அப்போது தான் பெற்றோர் பார்க்கும் சொந்த சாதிப் பெண்ணை கொழுத்த சீதனத்துடன் கட்டிட முடியும். யாராவது வீணாய் போனவர்கள் காதல், கத்திரிக்காய் என்று கதைத்தால், நாங்கள் அப்பா அம்மாவிற்கு அடங்கின பிள்ளைகளாக்கும் என்று கைகட்டி வாய் பொத்தி சொல்லிவிடுவார்கள்.மேலை நாடுகளில் சிறுவகுப்புகளில் இருந்தே ஆசிரியர்களினால் ஒருவரை மனரீதியாகவோ, உடல் ரீதியாகவோ துன்புறுத்துவது சட்டப்படி குற்றம் என்பது சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. ஆனால் தமிழ் குழந்தைகள் சிறு வயதிலிருந்து தமது பெற்றோரின் பிற்போக்கான நிலப்பிரவுத்துவ சிந்தனை முறைகளிற்கூடாக வளர்க்கப்படுவதினால் தாராளவாத பொருளாதார முதலாளித்துவ வாழ்க்கையினை வாழ்ந்தாலும், சிந்தனைமுறைகளில் பல நூற்றாண்டுகள் பின்னோக்கிய இருண்ட காலத்தினுள் வாழ்கின்றார்கள் என்பதற்கு மேலே கூறிய நிகழ்வுகள் எடுத்துக்காட்டாக இருக்கின்றன.

பெரும்பாலான தமிழ் பெற்றோர்கள் மேலைநாடுகளில் இரண்டு இடங்களிற்குத் தான் தமது குழந்தைகளை கூட்டிச் செல்வார்கள். சைவ பெற்றோர் என்றால் கோயில்களிற்கும், கிறீஸ்தவ பெற்றோர்கள் தேவாலயங்களிற்கும் இரண்டாவதாக இந்த இடங்களை விட மிகவும் பயங்கரமான இடமான தமிழ்ப் படங்கள் ஓடும் திரையரங்குகளிற்கு கூட்டிச் செல்வார்கள். கோவில்களிற்கு போகும் ஒரு குழந்தை சமஸ்கிருதத்தில் வழிபாட்டினைச் செவிமடுக்கின்றது. சமஸ்கிருதம் தான் கடவுளுக்கு பூசை செய்யும் பாசை என்பதைக் கேட்டு வளர்கின்றது. மொழிகளிற்கிடையே உயர்வு, தாழ்வு கற்பிக்கப்படுகின்றது. தாழ்வு என்று சொல்வது போதாது என்று தமிழ் ஒரு நீச பாசை என்று மூத்த சங்கராச்சாரி வாக்குமூலமே கொடுத்து விட்டு பரலோகம் போயிருக்கின்றது.

# பத்து மாதத்தில் உயர்சாதி குழந்தை பெறுவது எப்படி..?

தனது தாய் மொழியான தமிழை விட ஒருவராலும் பேசப்படாத செத்த மொழியான சமஸ்கிருதம் தான் உயர்ந்த மொழி என்று கற்பிக்கப்படும் ஒரு குழந்தை, எப்படி தன் தாய் மொழியினை பேசவோ அன்றி கற்றுக் கொள்ளவோ முன்வரும். தமிழை ஒரு விருப்பப் பாடமாகவோ அல்லது இரண்டாவது மொழிப் பாடமாகவோ இங்கிலாந்தில் கற்க முடியும். ஆனால் பெரும்பாலான பெற்றோர்கள் தாமே சொல்லிக் கொடுக்க கூடிய தமிழ் மொழியை விட்டு விட்டு பிரெஞ்சு அல்லது ஜேர்மன் மொழிகளை பெரும் பணம் செலவழித்து கற்பிக்கும் அவலநிலை தான் இங்கிருக்கின்றது.

ஐயர் மட்டும் தான் பூசை செய்ய முடியும். ஏனென்றால், அவர் உயர்ந்த சாதியில் பிறந்தவர் என்றும், நாங்கள் வெள்ளாளர் அவர்களிற்கு அடுத்த நிலையில் இருப்பவர்கள் என்றும் பிஞ்சு வயதிலேயே நஞ்சூட்டப்படுகின்றது. இதுவே கரையாரை விட பள்ளர்கள் குறைந்தவர்கள் என்றும் பள்ளரை விட பறையர் குறைந்த சாதியினர் என்னும் சங்கிலித் தொடராக நீள்கின்றது. மனிதத்தினை மண்ணில் போட்டு மிதித்துக் கொண்டு மனங்களில் சாதிவெறியை மூட்டி மனிதர்களை ஒன்றுபடவிடாமல் செய்து அதிகார வர்க்கத்தின் சுரண்டல்களை சுலபமாக செய்வதற்கு வழி செய்து கொடுக்கின்றது. உயர்சாதிக் கொழுப்பை அதிகார வர்க்கத்தின் போலி வாழ்க்கையை எளிய உழைக்கும் மக்கள் தமக்கே உரித்தான கிண்டல் மொழியில் வெளிப்படுத்துவார்கள். அதன் ஒரு வெளிப்பாடு தான் உடையார் உடலுறவு கொள்ளும் போது இடுப்பிலே சலங்கை கட்டிக் கொண்டு செய்தார் என்பது. அவரது இடுப்பு அசைய அசைய மணிச் சத்தம் வெளியே வந்து அவர் ஒரு பிரதான வேலையாக இருக்கின்றார் என்பதனைச் சொல்லுமாம். ஒரு ஆணும் பெண்ணும் கூடும் போது குழந்தை பிறக்கும் என்று தான் உலகம் முழுக்க அறிந்து வைத்திருக்கின்றார்கள். உயர் சாதிக் குழந்தை பெற என்ன செய்ய வேண்டும். உடையார் இடுப்பினிலே சலங்கை கட்டிக் கொண்டு செய்தது போல இவர்கள் அதிலே எதையாவது கட்டிக் கொண்டு செய்வார்களாக்கும்.

**பறைச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா?**
**இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டு இருக்குதோ?**
**பறைச்சி போகம் வேறதோ? பணத்தி போகம் வேறதோ?**

பணத்தி - பிராமணப் பெண். இது 18ம் நூற்றாண்டின் போது வாழ்ந்ததாக சொல்லப்படும் சிவவாக்கியர் எனும் சித்தரின் பாடல். 18ம் நூற்றாண்டில் நாடோடியாகச் சுற்றித் திரிந்த ஒரு மனிதனிற்கு இருந்த அறிவு இன்றைய நூற்றாண்டு மனிதர்களிற்கு இல்லாமல் போனது வெட்கித் தலை குனிய வைக்கின்றது.
வானம் தேன் சிந்தும் பொன்மாலைப் பொழுதுகளில் வண்ணம் மிகு நறுமலர்கள் பூத்துச் சொரிய காதல் கீதங்கள் தாலாட்டுப் பாடும் போது, ஊனாய் - உயிராய் - உள்ளொளியாய் ஒளிர்ந்த காதல், திருமணம் என்று வரும் போது சாதி, மதம், அந்தஸ்த்து, பணம் என்ற சகதிகளில் சிக்கிக் கொள்வதேன்.

இருவர் மனம் ஒப்புதலே சேர்ந்து வாழ தேவையான அடிப்படை என்பது எம்மவருக்கு தெரியாமல் போவதேன்.?

**-விஜயகுமாரன்.**

# ජ.වි.පෙට කරන ප්‍රසිද්ධ ඉල්ලී (ஜே.வி.பி.க்கு விடுக்கும் பகிரங்க வேண்டுகோள்!!)

ලංකාවේ පංතියක් නියෝජනය කරන පක්ෂයක් ලෙස වෙනස් කිරීමේ අරගලය සිදුකරන මෙන් ජ.වි.පෙ සාමාජිකයන්ට ප්‍රසිද්ධියේ ඇරයුම් කරන්නෙමු. ජාති වාද දේශපාලනය තුරන්කර, මැතිවරණ දේශපාලනය අතහැර සිය පංතියක පක්ෂයක සේ පෙන්නුම් කරන ලෙසට ඇරයුම් කරන්නෙමු. අතීතයේ පුද්ගල ත්‍රස්තවාද දේශපාලනය ගැන ස්වයං විචාරයක් කිරීමෙන් මහජන දේශපාලනය ක්‍රියාවට නංවන ලෙස ඉල්ලා සිටිමු.

ජ.වි.පෙ අභ්‍යන්තර ගැටුම් හේතුවෙන් දෙපිලක් වීම සහ තවත් අතකින් නායකත්වය අත්පත් කරගැනීමේ අරගලයක් ඇතිවීම පිළිබඳ ප්‍රවෘති එලවමින් පවති. තව පැත්තකින් මහින්දට සහයෝගය දීම පටන් සරත්පොන්සේකාට සහයෝගය දැක්වීම දක්වා වූ සිදුවීම් ආන්දෝලනයකට ලක්වී ඇත.මෙවැනි පසුබිමක ජ.වි.පෙ හි ජනවාර්ගික ගැටලු පිළිබඳ දැක්මත් මැතිවරණ දේශපාලනයත් ප්‍රශ්නයකට ලක්වී ඇත.මෙහි සාරාංශය පන්ති දේශපාලනයට ප්‍රමුඛත්වය දෙමින් පවතී.මෙම කාරණය පිටුපස සිදුවන සත්‍ය, වාද විවාද මෙතෙක් දැනගැනීමට නොහැකි වී ඇත.කෙසේ නමුත් පොදු දේශපාලන සාරාංශය නම් මෙසේය.

කෙසේ නමුත් මත බේදය අවශ්‍ය වේ.එය මූලික කාරණාවකි.එය විප්ලවීය පසුබිමකට සාධකයකි.මෙය කුමන ආකාරයකට මතුවුවත් ලංකාවේ දේශපාලනමය වෙනසක් ගෙන එයි. සිංහල ජනතාව අතරේ මාක්ස්වාදය යනු ජ.වි.පෙ හි ජාතිවාදය හරහාද මැතිවරණ දේශපාලනය හරහාද හදුනාගත් තත්වය පළවෙනි වතාවට අද ප්‍රශ්නයකට ලක්වී ඇත.

ජ.වි.පෙ හි නායකත්වය සමග මතබේදය ඇතිවූ කොටස තමුන් බෙදුම්වාදය පිළිනොගන්නා බවට කරන ප්‍රකාශය මගින් එහි අනෙක් කොටස් බෙදුම්වාදය කෙරෙහි දක්වන පක්ෂපාතී බව පෙන්නුම් කරයි.එම මතබේදය දරන කොටස රෝහණ විජේවීර ගේ ප්‍රතිපත්ති වලට විරුද්ධව ක්‍රියාකරන බවට ජ.වි.පෙ නායකත්වය චෝදනා කරයි.


කෙසේ නමුත් මෙම විවාදය ලංකාවේ ප්‍රධාන අර්බුධයක් වන ජනවාර්ගික ගැටලුව පිටුපස සිදුවෙමින් පවතී.එහි බෙදුම්වාදයට එරෙහිව වෙන්වී යන අයිතිය තබමින් එක්තරා වෙනසක් සිදුවේනම් එය ලංකා ඉතිහාසයේ නව පරිච්ඡේදයක් ආරම්භ කරයි.මෙම දේශපාලන දැක්ම මෙතෙක් කිසිදු පක්ෂයක් තුළ නොතිබුනි. ජ.වි.පෙ ප්‍රකාශ කරන්නේ මෙම තත්වය ගැනදැයි සත්‍ය ලෙසම දැනගත නොහැක.


මෙම අර්බුදය "දෙමළ නායකත්වයෙන් වෙන්වීමක්" යන ශ්‍රී ලංකා රජයේ සහ වෙනත් උදවිය ගේ ජාතිවාද ප්‍රචාරය අභිබවා සිංහල තරුණ පිරිස මෙම සිදුවීම පිළිබඳව දේශපාලනමය වශයෙන් නිවැරදි දැක්මක් ඇතුව කටයුතු කරයිනම් එයද එක්තරා දේශපාලන වෙනසක් වේ.

අද ලංකාවේ විප්ලවීය පසුබිමේ වෙනසකට අවශ්‍ය සහ ජ.වි.පෙ ආරම්භ කිරීමට ද අවශ්‍ය,

1.බෙදුම්වාදයෙන් තොර වෙන්වී යන ස්වයංනිර්ණය අයිතිය මූලික කරගෙන අරගල කිරීම
2.පසුගිය කාලයේ සිදුවූ පුද්ගල ත්‍රස්තවාදයේ ප්‍රමුඛ පන්ති දේශපාලනයෙන් තොරකරන ලද දේශපාලන මාවතේ ප්‍රතික්ෂේප කර මහජන පන්ති දේශපාලනය මූලික කරගෙන ක්‍රියාකිරීම
3.පන්ති අරගලයට ප්‍රමුඛත්වය දෙමින් ක්‍රියාකිරීම කිරීම
4. දේශපාලන මාර්ගය ප්‍රතික්ෂේප කර අතීතයේ සිදුවූ කටුක දේශපාලන මාර්ගය ස්වයං විචාරණය කිරීම
5. අතීතයේ ජාතිවාදී මතවාදය ප්‍රශ්නයකට ලක්කිරීම සහ ස්වයං විචාරණය කිරීම අවශ්‍යවේ.
නව ප්‍රජාතන්ත්‍රවාද මහජන පෙරමුණ

28.09.2011
අත්පත්‍රිකා අංක 009


එදා අත්අඩංගුවට පත් ටිල්වින් මෙදා ටිල්වින්








## கடாபியின் முடிவும் அதே தொடர்ச்சியும்


மரணத்தின் பின்னான மகிழ்ச்சி ஆரவாரங்கள்
துப்பாக்கி ரவைகளாகவே
வானை நோக்கி தீர்க்கப்படுகின்றன
எண்ணையை நோக்கியவர்கள்
குண்டுகட்கான பெறுமதியை வென்று விட்டார்கள்
உத்தியோக பூர்வமாக
லிபிய மக்களை கிளர்ச்சியாளர்கள் மீட்டு விட்டதாய்
வீழும் முதலாளித்துவம்
கிலாரி வடிவில் “வாவ்“ எனும் போதே
ஈராக் ஆப்கான் லிபிய இரத்தம் உதட்டில் சிவந்திருக்கிறது

தாக்குதலின் போது மகிந்தவைப் போலவே
மக்கள் பாதுகாக்கப்பட்டதாய்
ஐரோப்பிய அமெரிக்க அதிபர்கள் வாய்பிளக்கிறார்கள்
உள்ளூரவே மக்கள் புரட்சி தடுக்கப்படுவதில்
ஆக்கிரமிப்பாளர்கள்
தற்காலிக வெற்றியில் புளகாங்கிதம் கொள்ளட்டும்

சதாமைப் போலவே கடாபியின் முடிவும்
இங்கு சற்றுமாறுதலுடன்
லிபிய தலைமுறை பலியிடப்பட்டிருக்கிறது
ஆளுகை மட்டும்
ஏகாதிபத்தியங்களிடம் புதுவிதமாக கைமாறியிருக்கிறது

கடாபியின் முடிவின் செய்தி
மக்கள் புரட்சி அமைப்புகளிற்கு சவால் விட்டிருக்கிறது
எழுச்சிகளை மழுங்கடிப்பதற்கான
புது ஆராட்சிகளில் மானுடவிழுங்கிகள் கண்ணுறங்கவில்லை
அழுகி நாறுவது யார் கையில் இருக்கிறது
உலக தொழிலாளரே ஓரணி திரழ்வோம்!

கங்கா




## நம் மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவீர்

பறை முரசு மணி கலசம்
சங்கு குழல் சாரீரம் எல்லாம்
எங்கள் புகழ் பாடுவதாய்
எத்திக்கும் இருக்கிறதா தம்பி
இல்லையெனில் கொன்று வா
குரல்வளைகள் கொய்து வா
அலைகடல்கள் ஆர்ப்பரிக்கும்
பனை வடலி சரசரக்கும்
போதிமரத்தடிப் புத்தரும் கூட
பொறுக்காமல் புறுபுறுப்பார்
வான்முகடு தட்டும் மலைசிலைபோல்
ஊமையாய் நடிக்கும் ஒற்றுக்கேள்
புரிகிறதா உனக்கு போ
ஆல்போல் தளைக்க
அறுகுபோல் வேராக
தெளிபால் போல் நடிப்பார்கள்
நாவினில் இருப்பதெல்லாம்
நயமாக மக்கள்
இதயத்தில் வடிப்பார்கள்
உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கரிய நம்
போர்க்களத்து ரகசியங்கள் களவுபோம்
பேய் பூதம் காட்டேரி வேடமிட்டுக் களமிறக்கு
அஞ்சாத நெஞ்செடுத்து ஆடுவரைத் துண்டரிந்து
வீசி விடு கடல் அலைகள்
விழுங்கிவிடும் கவலைவிடு
நன்று நம் குடும்பம்
நலமாக ஆட்சி செய்ய
பாராளுமன்றத்தில் பன்றிகள்
உள்ளவரை சென்று நீ சிறிது தூங்கடா இமை கவிழ்த்து
ஊதுகுழல்களைத் தான் ஊடகமாய் வரையறுத்து.

சிறி

Munnani is published by NDPF (Org.Number: 996 514 749) and Printed at SET LINE DATA LTD, London for NDPF.